# சின்மய தீபம்

98451

JPL
C2990

பிரமமச்சாரி வியக்த சைதன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்மய தீபம்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-2-10-1993
யாழ்ப்பாணம்

KOHA
JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பிரமச்சாரி வியக்த சைதன்யா

அவர்கள் வானொலியில் நிகழ்த்திய உரைகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


98451

சின்மயா மிஷன்
எண் 15, மைல் போஸ்ட் அவெனியு,
கொழும்பு - 3.
தொலைபேசி: 36376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181-48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு சுவாமி சின்மயானந்தா

அழிவில்லாதது ஞானம் ஒன்றே!
அதை அடைவதில் தயக்கம் வேண்டாம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**வா**ழ வேண்டும், வாழ்க்கையில் வளர வேண்டும், வளர்ந்த பின் அதை இழக்காதிருக்க வேண்டும்—என்ற ஏக்கங்கள், ஆசைகள் எல்லோருக்கும் பொதுவானவை. இந்த ஏக்கத்தை நீக்க, ஆசையை பூர்த்தி செய்துகொள்ள, மனித மனம் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்ட செயல்களையே சிந்தனை என்கிறோம். சிந்தனை ஞானமாக முடிகிறது! ஞானம் வாழ்வின் வளர்ச்சிக்கும், நீடித்த மகிழ்விற்கும் வழி செய்கிறது. ஆனால் ஒருவன் சிந்திக்கத் துவங்குமுன் சில சிந்தனை ஒழுக்கங்களை தனதாக்கிக் கொள்ள வேண்டும். இந்த ஒழுக்கம், சிந்திப்பவனுக்கும் சிந்திக்க, விரும்புபவனுக்கும் அவசியமானவை.

## சிந்திக்கத் துவங்குங்கள்:

எப்படியும் வாழலாம்! என்றோ ''இல்லை — இப்படித்தான் வாழவேண்டும்!'' என்றோ மனித வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஒரு சொற் சுகம் காட்டியோ, சமயத்தலைவர்களின் வாழ்விலிருந்து, சுவையான சம்பவங்களை மேற்கோள்களாகக் காட்டியோ, பிரச்சினைகளைத் தீர்க்காமலே விட்டுவிடுவது, சிந்தனையின் சாரமும் அல்ல—ஞான லட்சணமும் ஆகாது.

மனிதன் வளர விரும்புகிறான் என்பது உண்மையானால் முதலில் அந்த வளர்ச்சியின் தன்மையை—அதன் சொரூபத்தை ஒருவன் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். அடைய வேண்டிய பொருளோ, நிலையோ, தகுதியோ, ஒருவன் மனதிற்கு தெளிவாகப் புலப்படாத வரையில் அதை அடைவதற்கான உற்சாகமும், ஆசையும் செயலும் ஒருவனிடத்தில் தோன்றா! அனுபவிக்காத பொருள்கள் மீது ஒருவன் ஆசைப்படலாம்! ஆனால் இதுவரை அறியாத பொருள்மீது ஒருவனுக்கு ஆசை தோன்றாது! ஆழ்ந்து சிந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தன் வாழ்க்கையில் அடைய விரும்புவது தான் என்ன?

'பணம்'—என்பது பலருடைய ஒருமித்த பதில்களாக இருக்கலாம். ஏனெனில் இன்றைய சமுதாயம் உறங்குவதும், விழிப்பதும் பணத்தில் தான்! அப்படிப்பட்ட சமுதாயத்தின் ஒரு அம்சமாகிய தனி மனிதன் ஒருவன் ''பணமே எல்லோருடைய விருப்பம்'' என்று அவசரமாகக் கூறுவதில் வியப்பில்லை. அந்த அவசரமான பதிலை ஏற்றுக்கொண்டு அதன் தன்மையை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

அரசு அச்சிட்டு வெளியிடும் காகிதத் துண்டுகளுக்கு 'உண்மையில்' பணம் என்று பெயரில்லை. அக் காகித துண்டுகளில் நம் கவர்ச்சிக்கு காரணமாக அமைவது, அதை விடுத்த அரசாங்கம் அதன் மீது அமைத்துக்கொடுத்த கண்ணிற்கு புலனுகாத ஒரு வித வாங்கும் சக்தியே! இதுதான் உண்மையில் மனிதனுக்குத் தேவையான பணம். எந்த காகிதத்துண்டு நான் நினைத்ததை எவனிடத்தில் சேர்க்காதோ அதை நாம் செல்லாக்காசு என்கிருேம். இதிலிருந்து நாம் அறிய வேண்டிய உண்மை: என்னையும், எனக்கு வேண்டிய பொருளையும் இணைத்து வைப்பதற்கு காரணமாவது பணம். இதனுல் பணத்தை விட, மனிதன் அதிகம் விரும்புவது பொருளே.

## இன்னும் சற்று ஆழமாக சிந்தியுங்கள்:

மேற்கொண்ட முடிவு சரியானது என்னும் பட்சத்தில் மனித வாழ்வின் நோக்கம் ''அதிகமான பொருளை குறுகிய காலத்தில் ஏதேனும் ஒரு வழியில் பெறுவது'' என்பதாக அமையலாம். ஆனுல் வாழ்வின் ரகசியம் அப்படிக் காணப்படவில்லை. காரணம்: மனிதன் ஒரு பொருளை 'என்னுடையது'' என்ற நினைப்பிற்கு ஆதாரமாக வைத்திருந்தாலோ, வைத்திருக்கும் வாய்ப்பு கிட்டியதாலோ அவன் அப்பொருளால் பலன் பெறுவதில்லை. அப்பொருள் அவனுடைய 'உறவுக்கு' உரிய பொருளாக மாற வேண்டும். உதாரணமாக ஒரு தொலைக்காட்சி பெட்டி ஒருவனிடம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். என்னுடைய தொலைக்காட்சி என்று சொல்வதில் மட்டும் நோக்கம் நிறைவேறவில்லை. அவன் நினைத்தபோது அதைத் தொடுவதற்கும், இயக்குவதற்கும் சுதந்திரமும், உரிமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இந்தச் சுதந்திரமும், உரிமையுமே எல்லா உறவு களின் அம்சங்களாயிருக்கின்றன. எங்கு இவ்விரண்டும் மறுக்கப் படுகிறதோ, அங்கே உறவும் முறிகிறது! முறிந்த உறவுக்குண் டான பொருளை 'என்னுடையது' என்று கூறிக்கொள்வதில் எந்த நோக்கமும் நிறைவேறுவதில்லை!

இது உண்மையானுல், பொருளைப் பெருக்குவது வாழ்வின் நோக்கமல்ல, ஆனுல் பொருளோடு பெற விரும்பும் உறவுகளே மனித வாழ்க்கையின் நோக்கம் என்று தோன்றலாம். இங்கும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

காரணம்: உறவின் லட்சணம் அனுபவத்தை தருவதாக அமைய வேண்டும். எந்த உறவு அனுபவம் தர மறுக்கிறதோ அந்த உறவு தோன்றியும், அப்படிப்பட்ட உறவைத் தோற்று விக்கும் பொருளைப்பெற்றும், அப்பொருளைப் பெறுவதற்காக நாம் தேடிய பணமும் அர்த்தமற்றுப் போய் விடுகின்றன. இந்த உண்மைகளை மேற்சொல்லிய உதாரணத்தில் பார்ப் போம்.

தொலைக்காட்சியை இயக்குகின்ற சுதந்திரமும், ''என்னு டையது'' என்ற உரிமையும் இருந்தாலும், விரும்பிய காட்சி அதில் காணப்படாவிட்டால், அல்லது ''காணும் அனுபவம் மறுக்கப்பட்டால்—''கண்டேன்'' — ''காண்கின்றேன்'' — என்ற அனுபவங்கள் கிடைப்பதில்லை. அனுபவங்களுக்கு ஆதாரமாய் அமையாத பொருட்களின் மீதும், உறவுகளின் மீதும், ஒருவன் சிந்தையைச் செலுத்துவது சித்தப் பிரமைக்கு அடையாளமல் லவா! தாகம் தீர்க்காத தண்ணீர் மீதும், புகைவராத சிகரெட் மீதும், சுகம் தராத பெண் மீதும் மோகம் கொள்வது சித்தத் தெளிவிற்கு அழகோ!

இதுவரை வளர்த்துக் கொண்ட சிந்தனையின் வாயிலாக: மனித வாழ்க்கையின் நோக்கம் பல விதமான அனுபவங்களைப் பெறுவதும், அதற்குண்டான வழிகளைத் தேடுவதும் என்று ஒரு வர் திடமாகக் கூற முன் வரலாம். ஆராய்ந்து பார்த்தால் அங் கும் ஒரு சிக்கல் உண்டு. அது என்ன?

பொருளுக்கும், உறவிற்கும் அனுபவம் தரும் ஆற்றல் இருந் தாலும் அனுபவங்களைத் தாங்கி, சுவைபோடும் மனம் என்னும் பாத்திரம், அனுபவங்களை தாங்கவோ, சுவைக்கவோ மறுத் தால், எந்த அனுபவமும் ஒரு தனி மனிதனுக்கு செல்லாக் காசு களாகி விடுகின்றன. எல்லா அனுபவங்களையும், எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பலாம் என்பது வாழ்வின் அடிப்படை வேட்கையாக இருந்தால், விருப்பு வெறுப்புகளும், ஏற்றத் தாழ்வுகளும், நோக்கமும், முயற்சிகளும், அர்த்தமற்றுப் போய் விடுகின்றன. ஆனல் வாழ்வின் ரகசியம் அதுவன்று!

அனுபவத்தை சுவைக்கத் துடிக்கும் ஒவ்வொரு மனமும் (அல்லது மனிதனும்) தனக்குள் ரகசியமாக ஒரு அளவுகோலை வைத்திருக்கிறது. எந்த அனுபவம் தான் விரும்புகின்ற மனோநிலைக்கு காரணமாக அமையுமோ, அந்த அனுபவத்தைப் பெறுவதில் மட்டுமே மனிதன் தன் கவனத்தையும், முயற்சியையும் திசை திருப்புகிருன். இந்த அளவு கோல் ஒருவன் மனத்தில் சதா வேலை செய்து கொண்டிருக்கிறது. இந்த அளவு கோல் தரும் விமர்சனங்களே நல்லன — தீயனவென்றும், உயர்ந்தன— தாழ்ந்தன என்றும், விரும்பத்தக்கன—வெறுக்கத்தக்கன என்றும், கொள்ளத்தக்கன—தள்ளத்தக்கன என்றும் பல்வேறு மனோ விகாரங்களாகவும், அந்த விகாரத்தின் வடிவங்கள் செயல்களாகவும் தோன்றுகின்றன. இதை அடிப்படையாகக் கொண்டே, வாழ்க்கையின் நோக்கங்களும் மனிதர்களும் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றனர்.

தோற்ற அளவிலே அனுபவத்தைத் தேடிப்பிடிப்பதில்— அதற்குரிய பொருளை நாடுவதில் இந்த அளவுகோல்கள் தனித்தன்மை பெற்றிருப்பினும், அடிப்படையில் இதனிடத்தில் ஒரு பொதுமைக் குணம் காணக்கிடக்கிறது. மனிதன் தெளிவைத் தேட வேண்டிய அவசியமும் இங்குதான் தோன்றுகிறது. எல்லோரிடத்திலும், மாருமல் காணப்படும் இந்த பொதுமைக் குணத்தை ஒருவன் தெளிவாக உணர்ந்து கொள்கின்ற வரை, மனித மனமும் வேட்கைகளும், ஆசைகளும், நோக்கங்களும் அவனது வாழ்வில் மாறிக் கொண்டேயிருக்கும். நேற்று ஒருவன் அவசியம் என்று கருதிய லட்சியங்களும், ஏக்கங்களும் இன்று அவசியமில்லாதனவாகவும், இன்று நிச்சயம் தேவை என்பன நாளை தள்ளத்தக்கனதாயும் அமைந்துவிடும்.

ஞானத்தின் நோக்கம் இந்த அடிப்படை வேட்கையின், ஆசையின் சொரூபத்தையும், அதை அடைவதற்கான வழிகளையும் சுட்டிக் காண்பிப்பதாக அமைய வேண்டும். இங்கு செயல்பட துவங்கிய ஒவ்வொரு முயற்சிக்கும் சமயம் என்றே பெயர்! வெவ்வேறு அனுபவங்களின் வாயிலாக மனிதன் பெற விரும்பும் மனோநிலைதான் என்ன? —என்ற கேள்வியே மறை நூலார் மதிக்கு ஏற்புடையதாய் இருந்திருக்கிறது. அந்த வினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



விடுத்த விடைகளே சமயம் என்றும், மறை நூல் மார்க்கம் என்றும், ஆன்மீகம் என்றும் பொதுவாக அழைக்கப்படுகின்றன. அவர்கள் பெற்ற ஞானத்தின் சாரம் என்ன?

அனுபவம் மனோநிலைளுக்கு காரணம் என்று பார்த்தோம். அனுபவங்களின் இயற்கையான தன்மை சதா மாறிக்கொண்டிருப்பதே. எந்த அனுபவமும் மனித வாழ்வில் தொடர்ந்து இருப்பதில்லை. இருந்தாலும் அது முன் போல் கவர்ச்சியாக இருப்பதில்லை. திரையில் காட்சிபோல் சதா மாறிக் கொண்டிருக்கும் மனோநிலைகளில் ஒரேயொரு அம்சத்தை மட்டும் மனிதன் தன்னகத்தே நிறுத்தி வைத்துக் கொள்ள முனைகிறான். அதே போல் எதிர்வரும் மனோநிலைகளின் ஒரு உறுதியையும் எதிர்பார்க்கிறான். (இங்கே கவனமாகச் சிந்தியுங்கள்.) அவைகள் முறையே (1) முதல் அனுபவம் தந்த மனோநிலையில் சுகமும் அமைதியும் இருந்தால் அது தொடர வேண்டும் என்ற அந்தரங்கமான ஏக்கமும் (2) அடுத்து எதிர்வரும் அனுபவம் எத்தன்மை கொண்டிருப்பினும், தன்னிடத்தில் முதல் அனுபவம் விட்டுச்சென்ற அமைதிக்கு ஆபத்தில்லை என்ற உறுதியுமே. சுருங்கச் சொல்லின் வாழ்க்கையில் ஒருவன் பெறும் அனுபவங்கள் தானாக வந்தாலோ, அல்லது தேடிப்பெற்றாலோ, இரண்டும் ''அமைதிக்கு'' ஆதாரமாக இருக்க வேண்டும் என்று ஏங்குகிறானே ஒழிய, முந்திய தான் பெற்ற அமைதிக்கு ஆபத்தாய் அமைத்துக் கொள்ள விரும்புவதில்லை. இவை இரண்டும் தொடர்ந்து நடந்தால் வாழ்க்கையும் சுவைக்கத் தக்கதாய் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய் அமைந்து விடுகிறது. இதில் முரண்பாடு தோன்றினால் வாழ்க்கை வெறுப்பிற்கும், கசப்புணர்விற்கும் காரணமாகி விடுகிறது. இதை கருத்திற் கொண்டே மறைநூலார் ''ஒரு தனி மனிதனின் வளர்ச்சி அவன் அனுபவிக்கும் அமைதியின் அளவைப் பொறுத்தது'' என்கின்றனர். அமைதியே வளர்ச்சிக்கு அளவுகோல்! அமைதிகூட வாழ்வின் நிலை கூடுகிறது. அமைதிகுலைய வாழ்வும் சரிகிறது. ஞானத்தின் லட்சணம் மோனத்தின் வரம்பைக் காட்டுவதாய் அமைகிறதன்றோ! இனி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அமைதியின் சொரூபத்தை—அதன் தன்மையை — அதன் இருப்பிடத்தை!

நாம் தேடுகின்ற அமைதி ஒரு தனிப் பொருளா? அல்லது பல கூட்டுப் பொருட்களின் காரிய ரூபமான விளைவா? வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்ந்து சிவப்பு நிறத்தை தோற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விப்பது போல—பொருள், உறவு, அனுபவம் — இவைகளின் விளைவே அமைதியா? அல்லது அமைதி என்பது இவைகளினின் றும் சுதந்திரமாய் தனித்து நிற்கிறதா? அப்படி தனித்து இருந் தால் அதன் இருப்பிடம் எங்கே?

எங்கே நிம்மதி? எங்கே அமைதி என்ற கேள்விகளே சமயங் களின் பிரதான கேள்விகளாக இருக்கின்றன! இந்தக் கேள்விக ளுக்கு சமயத்தலைவர்கள் விடைகண்டிருக்கிறார்களா? விடைகள் கண்டிருப்பின் அவைகளுக்கு மூலம் மனித அனுபவங்கள்தானா? மனித அனுபவங்களே என்றால் அந்த சிறப்பான அனுபவம் எது? அந்தச் சிறப்பான அனுபவம் எல்லோருக்கும் எளிதில் கிடைப் பதா? அல்லது தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டும் கிட்டுவதா? ''எல்லோருக்கும்!'' என்பது பதிலானால் ஏன் நானும் நீங்களும் பெறவில்லை! ''மாறாக தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டுமே என்பது உண்மையானால், அந்த தேர்வுக்குண்டான தகுதிதான் என்ன?— என்ற கேள்விகளுக்கு விடை காட்டும் தீபமே சின்மய தீபம்! இதில் நாம் அடையவிருக்கும் தெளிவு, தவத்திரு சுவாமி சின்மயானந்தா அவர்களின் அருளுரைகளை ஆதா ரமாகக் கொண்டது. அவர் இயற்றிய நூல்களிலிருந்தும் விளங்கிய கீதை, உபநிடதப் பேருரைகளிலிருந்தும், அவரிடம் காணும் ஞான ஒளிக்கு எண்ணெய் போன்று ஆதார மாகக் காணும் இந்து சமயத்தின் சிகரமான வேதாந்த நூல்களி லிருந்தும், தெளிவின் பொருட்டு திரட்டப்பட்ட ஞான விளக்கக் கட்டுரைகளே இந்நூலின் சாரங்களாக அமைகின்றன. இக்கட்டு ரைகள் நான் இலங்கை வானொலியில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாகும்! இவ்வுரைகள் ''சின்மயதீபம்'' — என்ற ''கெஸட்''டுகளாகவும் வெளியிடப்பட்டுள்ளன!

இறையருள் குறை தீர்க்கும்!

அன்பன்,

பிரம்மச்சாரி வியக்த சைதன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி எங்கே?

முதலில், நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் சாதாரண அனுபவங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

மனித வாழ்க்கை அறுதியிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு எத்தனையோ அனுபவங்களைத் தரவல்லதாக இருக்கிறது. மனிதனுக்கு சாத்தியமான எல்லா அனுபவங்களையும் ஆராய்ந்து பார்த்து, அமைதியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க நம் அனைவருக்கும் காலம் போதா விட்டாலும், நம் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடந்து செல்லும் அனுபவங்களை பார்ப்போம்.

நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் இந்த நூல் உங்கள் கண்ணிற்கும் அதே நேரத்தில் உங்கள் வீட்டில் இருக்கும் ஒவ்வொருவர் கண்ணுக்கும் ''காட்சிக்குப் பொருளாக'' இருக்கிறது. இந்தக் கட்டத்தில் இந்நூலை ''ஞான வஸ்து'' என்று அழைப்போம். அதாவது ''இது ஒரு நூல்'' என்ற ஞானம், நூலைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் சாதாரணமாகக் கிடைக்கிறது. இதே போல் நீங்கள் பார்க்கும் சூரியனை, சந்திரனை, உலகில் உள்ள பல பொருட்களை, நானும் பார்க்கலாம். நம்மைப் போல் பிறரும் பார்க்கலாம். பல பொருட்களைக் கொண்ட இந்த உலகம் ''ஒரு பொதுவான ஞான வஸ்து'' வாக எல்லோருக்கும் இருக்கிறது. பொருட்கள் ஒரு நிலையிலும், பார்க்கும் பார்வையாளர்கள்—பலராகவும் இருந்தால் அதை நம்முடைய சமயத் தலைவர்கள் ''வியவகார நிலை'' அல்லது 'ஜாக்ரத நிலை' அல்லது ''விழிப்பு நிலை'' என்று அழைக்கின்றனர். இந்த நிலையின் சிறப்பான அம்சம் என்னவெனில், ஒரு காலத்தில் ஒருவருக்கு சொந்தமாய் இருந்தபொருள், பிற ஒரு நேரத்தில் மற்ற ஒருவருடைய பொருளாக மாறி விடுகிறது. நேற்று உங்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்திற்கு எது பொருளாய் இருந்ததோ அது இன்று மற்றொருவருடைய அனுபவத்திற்குப் பொருளாக மாறலாம். இதனால் இதற்கு ''வியவஹாரம்'' என்று பெயர். அதாவது உலகிற்கு முழுமையாக விழித்துக்கொண்டு, நம்மிடம் இயற்கையாகக் கிடைத்துள்ள எல்லா புலன்களையும் செயல்படுத்தி, இந்த உலகம் பற்றிய ஞானத்தைப் பெற்று, அந்த ஞானத்திற்கேற்ப அனுபவங்களைத் தேடுகிறோம். இதையே நாம் ''அன்றாட வாழ்க்கை'' என்றும் அழைக்கிறோம். நம் அன்றாட வாழ்க்கைக்கு எது அனுபவக்களமோ, அது எல்லோருக்கும் பொதுவானது. இதன் காரணத்தால் ஒரு மனிதன் பெரும் லாப — நஷ்டங்கள், உயர்வு—தாழ்வுகள், விருப்பு — வெறுப்புக்கள் போன்றவற்றை பிறருக்கும் தெரியப்படுத்தவும், அவர்களுடைய ஞானத்திற்கும் அனுபவத்திற்கும் பொருளாக மாற்றவும் கூடிய சௌகரியம் இருப்பதால் இதை அர்த்த புஷ்டியுடன் வியவஹாரம் என்றும் அழைத்தனர். பொதுவாக மனித வாழ்க்கையின் தன்மைகளை, ஒரு தனி மனிதனின் உயர்வு – தாழ்வுகளை இந்த அனுபவக்களத்தோடு நிறுத்திக் கொள்வது மனிதன் வளர்த்துக் கொண்ட ஒரு ''பழக்கம்''. இந்தநிலையில் அவன் எடுக்கும் முயற்சிகளையே ஒருவனுடைய உண்மையான முயற்சிகளாகவும், இதில் அடையும் வளர்ச்சிகளையே உண்மையான வளர்ச்சிகளாகவும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மனித வாழ்க்கை இந்த அனுபவங்களை மட்டும் கொண்டதல்ல. உங்களுடைய அனுபவங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். ஒரு மனிதனின் சிந்தனை வளர்வதற்கு இது ஒரு உயர்ந்த வழியும், பழக்கமும் ஆகும்.

காலை முதல் இரவு வரை இந்த விழிப்பு நிலை என்னும் அனுபவ நிலையால் எத்தனையோ அலுவல்களைச் செய்தோம். களைத்துப் போனோம். இரவு வந்தது. படுக்கைக்குச் சென்று விட்டோம். ஒவ்வொருவர் மனத்திலும் ஆயிரம் எண்ணங்கள் ஊஞ்சலாட அயர்ந்து உறங்க முனைப்பட்டோம். ஆனால், உறங்குவதற்கு முன் உங்களுக்கென்று ஒரு உலகம் விழித்துக் கொண்டது. பணம் படைத்த நீங்கள், படுக்கையில் படுத்து உறங்கும்போது ஏழையாய்க் கனவு காண்கின்றீர்கள். நினைவுலகில், ஜாக்ரத நிலையில், பொது உலகில் நீங்கள் பெற்ற பணமும், பொருளும், அனுபவமும், பொறுமைகளும், வாழ்க்கை தந்த உறுதியும், ஒரு விநாடியில் கைவிட்டு விட்டு உங்களைக் காசில்லாதவனாக மாற்றி விட்டது. இதில் ஒரு ரகசியம்! காசில்லாமல் போனேன் என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும். உங்கள் அருகில் படுத்திருக்கும் மனைவிக்கோ, மக்களுக்கோ தெரியாது. எந்த உலகமும், அனுபவக்களமும், அதில் பெற்ற அனுபவங்களும், உங்களுக்கு மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமோ, நீங்கள் நினைத்தாலும், பிறர் விரும்பினாலும், அவ்வுலகில் புகுந்து அதை ஒரு பொது உலகமாக மாற்ற முடியாதோ அதற்கு கனவு நிலை—அல்லது ஸ்வப்ன அவஸ்தா—தனி உலகம் என்று பெயர்.

## நிதானமாகச் சிந்தியுங்கள்

எல்லோருடைய வாழ்க்கையிலும், பொருட்களை பிரதானமாகக்கொண்டு, பெறும் அனுபவங்கள் யாவும், இந்த இரண்டு அனுபவ நிலைகளுக்குள் அடக்கம். இந்த இரண்டு நிலைகள் நீங்கலாக மனித வாழ்க்கையில் பொருளோடு தொடர்பு யாருக்கும் உருவாகுவதில்லை. நாம் தேடுகின்ற ''அமைதி'' என்பது பொருளின்—அனுபவங்களின் விளைவாக—காரியமாக இருக்குமானால்—எங்கு இந்தப் பொருட்கள் இல்லையோ, அனுபவங்கள் இல்லையோ, அங்கு அமைதி யென்பது இருக்கக் கூடாது. காரணம் இல்லாத இடத்தில் அதன் காரியம் இல்லை.

ஆனால் வாழ்க்கையின் உண்மை மாறாக இருக்கிறது. கனவு முடிந்தோ, அல்லது கனவுக்கு முன்னதாகவோ, நீங்கள் ஆழ்ந்து உறங்குகிறீர்கள். உறக்கத்தில் எந்தப் பொருளும் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் அனுபவித்த பொது உலகும் இல்லை! தனி உலகும் இல்லை!! இரண்டிலும் இருந்த பொருட்கள் இயற்கையாய் இல்லை!!! ஆனால் அமைதியிருக்கிறது. இந்த அமைதிக்கு மறு பெயரே ஆத்மா எனப்படும். இதன் பற்றிய தெளிவான ஞானமே ஆத்ம ஞானம் எனப்படும். எது சாந்த ரூபமாகவும், தன் சுய அமைதியை தானே உணரும் அறிவு ரூபமாகவும் இருக்கிறதோ அது தான் ஒவ்வொரு மனிதனின் இயற்கையான—என்றும் உள்ள—பிறப்பு இறப்பு அற்ற சுயநிலை. இயற்கையில் உங்களுக்கும், நீங்கள் விரும்பும் அமைதிக்கும் இடைவெளி இல்லை. ஆனால்,விழித்தெழுந்து, பொது உலகோடும், தனி உலகோடும், இன்னும் பிற அனுபவக் களங்களோடும், உறவு வைத்துக் கொள்கின்ற பொழுது, இந்த சுய நிலை தற்காலமாக மறைபட்டு, அமைதி என்பது ''அக்கரையில்'' உள்ள ஒரு பொருள் போன்றும்—அதை அடைவதற்கு ஆயிரமாயிரம் முயற்சிகள் தேவை போன்றும் மனத்திற்கு தோன்றுகிறது. அந்த அமைதியை தருவது போல் உறுதியூட்டும் ஒவ்வொரு பொருள் மீது ஆசையும், பங்கப்படுத்தும் பிற பொருட்கள் மீது வெறுப்பு தோன்றி, ஜாக்ரதா அவஸ்தா என்னும் மனித முயற்சிக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கும் பிரதானமான ''அன்றாட வாழ்க்கை'' விருப்பு வெறுப்புக்களால் பின்னப்பட்டு, பிரச்சினைக்கு உறைவிடமாக மாறுகிறது. இதையே சம்சாரம் என்று அழைக்கிறோம். இந்த நிலையில் மனிதனுக்கு ''ஜீவன்'' என்று பெயர்.

''ஜீவனே'' ஆத்ம ஞானத்திற்கு உரியவன். ''தனக்கும் தான் விரும்பும் அமைதிக்கும் இடைவெளி இல்லை — என்பது ஞானம். இந்த ஞானம் மறு நாள் காலை விழித்தெழுந்ததும், மனதில் தோன்றத்தக்கதாக அவன் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும், ஞான மார்க்கம் — சாதனை, ஆன்மிக வளர்ச்சி தவம் போன்ற பல பெயர்கள் உண்டு. இந்த மறை நூல் வார்த்தைகளைக் கண்டு ஒரு மனிதன் அச்சமோ, கூச்சமோ கொள்ளக்கூடாது. உங்கள் அன்றாட வாழ்வில் காணும் சாதாரணமான முயற்சிகளுக்கு, மிகமிக இயற்கையான முயற்சிகளுக்கு நம் முன்னோர்கள் தந்த வேறு பெயர்களே இச் சொற்கள். நீங்கள் எதைச் செய்து கொண்டிருக்கிறீர்களோ அதுவே தவம் தான். ஆனால் ஞானம் சேராததாக இருப்பதால் இது பயன் தரும் தவமாக இல்லை. ஞானமும் கூடினால் அதுவே எல்லாச் செயல்களையும் தவச் செயல்களாக்கும்.

இதுவரை ''அமைதி—ஆனந்தம்—நிம்மதி'' என்பது ஒருவருடைய ''சுயநிலை'' என்று அறிவது ''ஞானம்'' என்றும் அதை மனதில் நிறுத்தி வைத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் ''சாதனைகள்'' என்றும் பார்த்தோம். இந்த ''ஞான நிலை நிறுத்த முயற்சிகளை''—நம்முடைய சமயச் சான்றோர்கள் பல்வேறு பெயர்களால் அழைத்துள்ளனர். அவைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, கடைப்பிடிக்க வேண்டிய ''20 வாழ்க்கை நெறிகளாக'' பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நமக்கு அருளியிருக்கிறார். அதன் முடிவில் ''இதுவே ஞானம்'' என்றும் பெயரிடுகிறார்.

அவ் வாழ்க்கை நெறிகளையும் எப்படி அந்நெறிகள் ''நாம் தங்க வைத்துக்கொள்ள வேண்டிய ஆத்மா ஞானத்திற்கு காரணிகளாக அமைகின்றன என்பதையும் இனிவரும் சுடர்களில் காண்போம். அமைதியே மனிதனின் நிஜ ஸ்வரூபம்! பல பொருட்களைச் சேகரிப்பதாலும், அனுபவிப்பதாலும் 'இனிமேல்' என்றோ ஒரு நாள்—நாம் அனுபவிக்கத்தக்கது ''அமைதி'' என்பது மனிதனிடத்தில் குடிகொண்டிருக்கும் இயற்கையான அறியாமை என்பது சமயங் காட்டிய உண்மை! அறியாமையின் விகாரங்களே தவறுகள் எனப் பெயர் பெறுகின்றன. உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்கள் அனைத்தும் இத்தவறுகளை திருத்தும் முயற்சிகளையே ஊக்குவிக்கின்றன. இம்முயற்சிகளுக்கு தியானம், பக்தி, யோகம் போன்ற பல பெயர்கள் தரப்பட்டுள்ளன. ஆராய்ந்து பார்க்கின் எல்லாச் சாதனைகளும், தவறு செய்யும் மனோபாவங்களிலிருந்து விடுவிக்கும் ஆற்றல்களாகவே தோன்றுகின்றன. தவறுகள் என்று சொல்லும் பொழுது, நாம் கொலை கொள்ளைகளை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது அறியாமையின் ஒவ்வொரு விகாரமும் தவறுதான்! இதற்கு மாற்று மருந்துதான் ''உயர் நெறிகள்'' என்றும் 'ஒழுக்கங்கள்' என்றும் அழைக்கிறோம். எந்தெந்த முயற்சிகள் இந்த ஞானத்தை மனதில் உறுதிப்படுத்துகிறதோ அவையனைத்தும் ஒழுக்கங்களே. அது ஒவ்வொரு மனிதருக்கும் வேறுபடலாம். ஆன்மீகச் சாதனை என்பது மனதை மயக்கும் ஒரு கவர்ச்சியாகவோ, அல்லது யாரோ ஒருவர் செய்கின்றார், என்பதற்காக நாமும் செய்யும் ஒரு 'புதுச் செயலாகவோ' அல்லது ஒரு வித கிறுகிறுப்பூட்டும் மனோநிலையாகவோ கருதக் கூடாது. மாறாக, உள்ளதைப் பற்றிய தெளிவை நிச்சயப்படுத்தும் முயற்சியாக மட்டுமே எடுத்துக்கொண்டு. அம்முயற்சியின் நோக்கம், அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் அமைதியே மூலம் என்னும் ஞானத்தை உறுதிசெய்வதாக அமைய வேண்டும.

இவ்வாறு ஒருவன் வாழ்வில் உயர் நெறிகளைக் கடைப் பிடித்து வருகையில் எந்த அமைதி தன் அனுபவங்களுக்குச் சிக்காமல் தப்பி வந்ததோ, அதே அமைதி எந்த அனுபவங்கள் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும், அவன் ஸ்வரூபமாகவே தூய்மையான கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பம் போல் வெளிப்படத்துவங்குகிறது. இதுவரை அமைதிக்காக அனுபவங்களைத் தேடிய அவன், இப்பொழுது அமைதியோடு எல்லா அனுபவங்களையும் தாங்கும் நிலைக்கு உயர்ந்து விடுகிறான். இந்த ''வெற்றி'' யாருக்கு கிட்டிவிட்டதோ அவனுக்கு ''சித்தன்'' என்று பெயர். சித்தன் என்றால் ''அடைந்து விட்டவன்'' 'பெற்றுக் கொண்டவன்'', ''நழுவ விடாதவன்'' என்று பொருள்! மாறாக தாடி மீசைகளை தனக்கு அலங்காரமாகக் கொண்டவனல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைச் சித்தனுக்கும் உயர்நெறிகள்

## அமானித்வம்

மானித்வம் என்பது தன்னைப்பற்றிய உயர்வான கருத்தைக் கொண்டுள்ள மனோபாவம்! யாரிடம் இந்த கர்வம் இல்லையோ அவரது மனோநிலைக்கு அமானித்வம் என்று பெயர் தம்மின் மிக்கார் ஒருவரும் இலர் என்ற கிறுகிறுப்பூட்டும் மனோநிலை மானித்வம்! இது அறியாமையின் அர்த்தமற்ற கூக்குரல். காரணம் ஒரு மனிதன் தன்னைப்பற்றி உயர்வாகக் கருதுவதற்கு மூன்று காரணங்கள் பொதுவாக இருக்கலாம். (1) தன் உடல் வலிமையும், அழகும்! (2) தான் கொண்டுள்ள செல்வம் (3) தன் வாழ்வில் ஒருவன் பெற்றுக்கொண்ட ஞானம் அல்லது அனுபவங்கள்.

சற்று தெளிவாக ஆராய்ந்து பார்த்தால் இந்த மூன்றில் எது அவனிடத்தில் இருந்தாலும் அது அவனால் உருவாக்கப் பட்டவைகளில்லை! எல்லாவற்றிற்கும் அடிப்படைக்காரணம் மனிதப்பிறப்பு. மனிதனாய் பிறப்பது, அவனது விருப்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் உட்பட்டதல்ல! பிறப்பதற்கு முன் எங்கு பிறக்கப்போகிறோம்! என்ற ஞானம் நமக்கு இருந்திருந்தால் நாம் அனைவரும் வசதியான குடும்பங்களில், வாழத் தேவையான எல்லா வசதிகளோடும் அழகான சரீரத்தோடும் பிறந்திருக்கலாம். ஆனால் உண்மை இதற்கு மாறாக இருக்கிறது. பிறந்த பிற்பாடே பிறப்பின் காரணத்தையும், தன்மையையும் பற்றி ஆராய்ந்து அறிய முற்படுகிறோம். இந்த ஆராய்ச்சியும் எல்லோருக்கும் சாத்தியமானதாகத் தெரியவில்லை. இருப்பின் மனிதனாய் பிறந்த ஒவ்வொருவனும் மஹாத்மாவாக உலவி வருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



தன்னால் தேடப்படாத, ஆனால் தனக்குத் தரப்பட்ட வாழ்க்கையின் ஆரம்பச் சூழ்நிலைகளை முதலாகக் கொண்டு ஒருவன் தன் திறமைகளால் பெருமைப்படத்தக்க, அழகையோ, பொருளையோ, புகழையோ, பெற்றான் என்றாலும் கூட, இதில் கர்வத்திற்கு இடமில்லை. காரணம் மனிதன் அடைய விரும்பும் வெற்றிக்கோ, வளர்ச்சிக்கோ இதுவரை யாரும் அளவுகோல் தரவில்லை. அப்படியே வளர்ந்த வளர்ச்சியும் தான் சூழ்நிலைகளை பிரதானமாகக் கொண்டுள்ளது. ஒருவன் வாழ்வில் கண்டு கொள்ளும் புறச் சூழல்களே தன் அழகையும், பணத்தையும், அனுபவத்தையும், ஞானத்தையும் பகிர்ந்து கொள்ளவும், பறைசாற்றிக் கொள்ளவும் முதற்காரணங்களாக இருக்கின்றன. நம் முள் யாருக்கேனும், நாம் நினைத்த சூழ்நிலையை வாழ்நாள் முழுவதும் தங்க வைத்துக்கொள்ளும் தகுதியும் திறமையும் இருக்கிறதா? நாம் வாழும் பிரபஞ்சம் சதா மாறிக்கொண்டே இருக்கிறது! எதுவும் நிலையில்லை. இன்று நம்மிடத்தில் இருப்பது நாளை இல்லாமல் போகலாம். இப்படி மாற்றத்தை விளைவிக்கக் கூடிய ஒரு மகத்தான சக்தியே ''காலம்'' என்றும் அழைக்கப் படுகிறது! காலம் ஒழுக்கத்தின் மூலம்! கொடுக்கும்பொழுது கருணையோடு கொடுத்தும், எடுக்கும்பொழுது இரக்கமற்று எடுத்துக்கொள்ளும் விசித்ர சக்தியே 'காலம்' ஆகும்! அது மாற்றத்தின் மறு பெயர்!

வாழ்வின் நிலையற்ற தன்மையையும் தனது என்று சொல்வதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்ட மனத்தில் தோன்றும் புத்தி பூர்வமான ''எளிமைக்கு'' அமானித்வம் என்று பெயர். இது ஒருவனுடைய லௌகீக வளர்ச்சிக்கு தடையாய் அமைவதில்லை. மாறாக வளர்ச்சிக்கு காரணமாக மறைந்து கிடக்கும் இறைவனின் இருப்பையும், அவன் படைப்பில் நிகழும் சம்பவங்களையும், அச்சம்பவங்களை நிகழ்த்தும் மாறாத விதிகளையும், கருத்தில் கொள்ளும் ஒருவித மனோ வளர்ச்சியே! இந்த மனோ வளர்ச்சியுள்ளவனிடம் லௌகீக ரீதியாக பல வளர்ச்சிகளைக் காணலாம். ஆனால் அவன் மதிமயங்குவதில்லை! அவன் எளிமைக்கு பங்கமில்லை. வாழ்வின் பல உண்மைகளை உணர்ந்துகொள்வதற்கு முதற் காரணியாக இருப்பது இந்த ''மனோ எளிமையே! இது சாதகனுக்கு ஒரு அவசியமான குணம். எளிமை சாந்தத்தின் ஒரு அம்சம். இதனாலேயே இதை முதல் நெறியாக உணர்த்தினர்.

* * *

2990 C.C
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHCX JPL



## அதம்பித்வம்:

இறைவனருளால் இயற்கையாய் ஒருவன் வாழ்வில் அடைந்த பேறுகளையோ, அல்லது தன் முயற்சிகளால் பெற்ற பேறுகளையோ, பிரதானமாகக் கொண்டு ஒருவன் வளர்த்துக் கொள்ளும் கர்வத்திற்கு 'மானித்வம்' என்றும் அக்கர்வத்தி லிருந்து தன்னை விடுபடுத்திக்கொள்வது 'அமானித்வம்' என்றும் பார்த்தோம்.

உள்ளதைக் கொண்டு கர்வம் அடையும் மனதிற்கு, தன் னிடத்தில் இல்லாத ஒன்றையும் இருப்பதாகப் பாவித்து அகந் தையை வளர்த்துக் கொள்ளும் குணம் இயற்கையாய் உண்டு. இதையே 'டம்பித்வம்' என்கிறோம். பொய்மைக் குணமும், கவர்ச்சியும் கலந்த மனோபாவமே டம்பித்வம் எனப்படும். தன் னிடத்தில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கருதுவதால், வள ராத வளர்ச்சியை வளர்த்துக் கொண்டதாகக் கருதுவதால் இப்படிப்பட்ட மனத்தினிடத்தில் உண்மையான வளர்ச்சிக்கு ஒரு உற்சாகமும், ஆக்கமும் இல்லாமல் போவதால், இதை சாதகனுக்கு விரோதமான குணமாக கணக்கிடுகின்றனர். சுருங் கச் சொல்லின், தான் வளர்த்துக் கொண்ட பொய்மைக் குணத் தால் உருவாக்கப்பட்ட ''மனமுடக்கமே'' டம்பித்வம் எனப் படும். இம்மாதிரி முடங்கிய மனங்களுக்கு, வாழ்வின் ஆழமான உண்மைகளை அறிவதில் ஆர்வமோ, உயர்ந்ததை அறிய வேண் டும் என்ற ஆவலோ இயற்கையாய்த் தோன்றுவதில்லை. அதே நேரத்தில் அவர்களும் இந்த உலகில் வாழ்ந்தாக வேண்டும்! அவர்களிடமும் சக்தியும் நேரமும் இருக்கின்றன. மனித வாழ்க் கையில் உயர்ந்த லட்சியங்கள் இல்லாத காரணத்திற்காக, காலம் தேங்கி நிற்கப்போவதில்லை! எது ஒரு நோக்கத்தையும் நிறை வேற்றாமல் ஒருவனிடமுள்ள காலத்தையும் சக்தியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீரணிக்கிறதோ அதையே கவர்ச்சி என்கிறோம். நம் அன்றாட வாழ்க்கையில் காணும் பெரும்பாலான ஆர்ப்பரிப்புகளும், ஆரவாரங்களும் இக்கவர்ச்சியை ஆதாரமாகக் கொண்டவைகளே, எங்கு ஆராய்ச்சியும், விவேகமும் இல்லையோ, அங்கு மட்டுமே கவர்ச்சி வேலை செய்யும். அன்றாட வாழ்க்கையில் நீங்கள் செலவழிக்கும் சக்தியையும் காலத்தையும், அவை நிறைவேற்றித் தரும் நோக்கங்களையும் கணக்கிட்டுப் பாருங்கள். நம்முள் ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு கவர்ச்சியில் மயங்கியிருக்கிறோம் என்பது புலனாகும்.

இவ்வாறு வாழ்க்கையை நோக்கம் நிறைந்ததாக மாற்றிக் கொள்ளும், மனத்தின் மறுமலர்ச்சிக்கே அதம்பித்வம் என்று பெயர். வாழ்வின் நோக்கத்தை, காரணத்தை, அதன் குறைகளை உணரவேண்டும் என்ற ஆவல் உன்னதமான நிலையை அடையும் பொழுது அதை அறிவதற்குண்டான வாய்ப்புகளை நாடிச் செல்வதும், பெற்ற ஞானத்தை நிலை நிறுத்திக் கொள்வதும் ஒருவனுடைய சுபாவமாக மாறிவிடும். அதற்கு மூலமே இந்த அதம்பித்வம் என்ற மனோநிலை.

வாழத் தெரியாவிட்டாலும், தான் வாழும் வாழ்க்கை சிறந்தது என்று இறுமாப்புறும் அவசரப்புத்தியிலிருந்து விடுபடுத்தி, தன்னிடமுள்ள குறைகளில், அறியாமையில், ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்கி உயர்ந்ததை நாடிச்செல்ல வைக்கும் இந்த அதம்பித்வம் என்ற மெய்மைக்குணம்—அறியாமையில் சுகங்காண்பவனுக்கு அவ்வளவு எளிதில் தோன்றாது. அவனுக்கு ஞானமும், தெளிவும் ஒரு கவர்ச்சியற்ற பொருட்கள் தாம்.

பனிக்காலத்தில் காலை நேரத்தில் தான் இழுத்துப் போர்த்திக் கொள்வதற்கு எப்படி ஒரு போர்வை உபயோகப்படுகிறதோ அது போல்தான் அறியாமையும், கவர்ச்சியும் ஒருவனுக்கு சுகம் தரும். ஆறடி மனிதன் ஐந்தடி நீளமுள்ள போர்வையின் அளவிற்கு சுருங்கிக் கொள்வது போல, அறியாமையும் கவர்ச்சியும் ஒரு மனிதனின் சுயரூபத்தை அவனுக்கே மறைத்துக் காட்டும். ஆனால் எவ்வளவு காலம் மனிதன் போர்வைக்குள் முடங்கியிருக்க முடியும்! சூரியன் தோன்றுவதும், போர்வையை உதறித்தள்ளி விட்டு தன் உயரத்திற்கு நிமிர்ந்து கொள்வதும் எவ்வளவு இயற்கையோ அதே போல் எல்லோரும் ஒரு காலத்தில் கவர்ச்சியில் இருந்து விடுபட்டு உண்மைக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதம்பித்வம் என்னும் பெருங்குணத்தால் அமைதியடைந்த மனம் ஆழமானவற்றை உணரும் குணமும், தன்னைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தின் அமைப்பையும், அதில் நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்கும் தன்மையும் கொண்டதாக மாறிவிடுகிறது. இறைவன் படைப்பில், விதிப்படி நடந்து கொண்டிருக்கும் மகத்தான நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தன் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களையும், 'அர்த்தம் தேடும்' கேள்விக்குறியோடு பார்த்துப் பழகுகையில், தனி மனிதனுக்கும் அவன் பெறும் அனுபவங்களுக்கும் உள்ள தொடர்புகள் விளங்கத் தொடங்குகின்றன. இந்த விளக்கங்கள் நிகழ்வுகளின் மூலத்தை உணரத் தூண்டுகின்றன. விசாரம் தனக்குள் தொடங்க ஆரம்பிக்கிறது. விசாரத்தை மேன்மைப்படுத்த சான்றோர்களை நாடும் நன் முயற்சியும், அவர்களுடைய போதனைகளின் குறிக்கோளை உணரும் வஞ்சகமற்ற மனோ எளிமையும் கைகூடுகின்றன 'வஞ்சகமற்றதும், எளிமையானதுமே, சத்தியத்தின் நித்திய அம்சமாகிய சாந்தத்தை தாங்கும் பாத்திரமாகும்'—என்பது சான்றோர் வாக்கு.

இதனால் அதம்பித்வம் என்னும் உயர்நெறி ஒருவன் வாழ்வில் கடைப்பிடிக்கப்படவேண்டிய அவசிய குணமென்று பெரியோர் பெரிதும் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை:

கொல்லாமை, பிறர் நலம் பேணல் போன்ற பெருங்குணங்களை அஹிம்சை என்னும் நெறிக்கு வரைவிலக்கணங்களாகக் கூறுவது பொது மரபு. ஆனாலும் இந்நெறியின் உண்மையான தன்மை மனித சிந்தனைக்குச் சற்றுச் சவாலாகவே அமைந்திருக்கிறது! காரணம் ''பாவம்'' ''புண்ணியம்'', ''செய்யத்தக்கது'' 'செய்யத்தகாதது'—என்ற நெறிகளும், கட்டுப்பாடுகளும், மனித சமுதாயத்திற்கு, சமய இலக்கியங்களிடமிருந்தே பொதுவாகக் கிடைத்திருக்கின்றன. பாவம்—புண்ணியம், நரகம்—சொர்க்கம் போன்ற கருத்துக்கள், மனிதன் தன் அனுபவத்தின் திறத்தால் அறிந்து கொண்டதல்ல! உலகில் உள்ள ஒவ்வொரு சமயமும், தனக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள மூல இலக்கியத்தில் கண்ட வாக்கியங்களைத் துணையாகக் கொண்டே பேசுகின்றன. எது பாவம், எது புண்ணியம் என்பது சமயத்திற்கு, சமயம் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டிற்கு மூலம் அச்சமயம் தனதாக்கிக் கொண்ட மறை நூல்களே. எப்படி ஒரு கிறிஸ்தவருக்கு பைபிளும், இஸ்லாமியருக்கு குரானும், தான் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் ''செய்யத்தக்கன'', ''செய்யத்தகாதன'' என்பனவற்றிற்கு ஆதாரமாக இருக்கின்றனவோ, அதே போல் ஒரு இந்துவிற்கு வேதங்கள் ஆதாரமாயும், அதில் 'செய்' என்று கூறப்பட்டவைகள் புண்ணியத்திற்கு காரணமாகவும், 'செய்யாதே' என்று மறுக்கப்பட்டன பாவத்திற்கு காரணமாகவும் அறிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த வேதத்தில் ''ஹிம்சாம் ந குர்யாத்'' அதாவது 'துன்புறுத்தாதே' என்றும் அதையே வேறு வழியாகச் சொன்னால் ''பிறர் நலம் பேணு!'' என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. இங்கே துன்புறுத்தல் என்பது சாதாரண இம்சையிலிருந்து, உயிர்க் கொலை வரை உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகக் கொண்டே ''கொல்லாமை'' அஹிம்சையின் பிரதான அம்சமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனுல் எந்த வேதம், உயிரைக் கொல்லாதே என்று வலியுறுத்துகிறதோ அதே வேதம் மற்ருெரு கட்டத்தில் ''யாரும் கொல்வதுமில்லை. கொல்லப்படுவதுமில்லை'' என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. உண்மையில், இந்த தத்துவமே இந்து சமயத்தின் சிகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது உண்மையாஞல் அஹிம்சையை கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் என்ன? அதன் தன்மைதான் என்ன? என்ற கேள்வி இயற்கையாகத் தோன்றும்.

## சிறிது சிந்திப்போம்!

உலகில் உள்ள எல்லாச் சமய இலக்கியங்களும் பொதுவாக இரண்டு பொருட்களின் தன்மையைப் பற்றி பேசுகின்றன. அவைகள் வலியுறுத்தும் தன்மைகள் அல்லது அப் பொருட்களின் குணங்கள் ஒரு சமயத்திலிருந்து மற்ருெரு சமயத்திற்கும், அல்லது ஒரே சமயத்தில் வெவ்வேறு சித்தாந்தங்களுக்கும் மாறுபடலாம். இருப்பினும் இந்து சமயத்தில் எல்லாச் சித்தாந்திகளும் இரண்டு அடிப்படைப் பொருட்களை தங்கள் ஆராய்ச்சிக்குரியதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். 1. மெய்ப்பொருள். அதாவது எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எங்கும் வியாபித்தும், தனக்கொரு அழிவை எதனுலும் உருவாக்கிக் கொள்ளாமலும், ஆனுல் எல்லா மாற்றங்களையும் தனக்குள்ளே நிகழும்படியாகவும் செய்துகொண்டு, தான் மாருமல் என்றும் ஒரே மாதிரி உள்ளது எதுவோ அதுவே மெய்ப் பொருள் என்று அழைக்கப்படுகிறது. இதையே முதற் காரணம் என்றும், இறைமை என்றும், படைப்பை கருத்திற் கொண்டு விளக்க முயற்சிக்கையில் அதையே இறைவன் என்றும், பலவாருகக் கூறுவது மறைநூல்களின் மரபு. முடிவாக ஏற்றுக்கொள்ளப் பட்ட இதன் அம்சம் சத்-சித்-ஆனந்தம் சத்-சித்-ஆனந்தம் என்ற சொற்களின் உண்மையான தாத்பர்யத்தை பின்னுல் வரும் சுடர்களில் உரிய இடத்தில் பார்ப்போம்.

மேலே விளக்கிய மெய்ப்பொருளை ஆதாரமாகக் கொண்டு, ''தோற்றம்'' என்னும் நிலைபெற்ற புறப்பொருட்கள் இரண்டாவது ரகம். பஞ்ச பூதங்களும், அதன் விகாரங்களும், அந்த விகாரங்களின் இரு நிலைகளாகிய உலகமும், அதில் வாழும் உயிர்த் தொகுதிகளும் இந்தப் ''புறப்பொருள்'' என்ற பெரும் பிரிவின்கீழ் வரும். இப் புறப் பொருட்களுக்குச் சமயம் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயச் சொல் ''உபாதி'' எனப்படும். ஆக, முதலில் விளக்கிய மெய்ப்பொருளும், இரண்டாவது விளக்கிய உபாதியும் சேர்ந்து ''படைப்பு—அல்லது சிருஷ்டி'' எனப் பெயர் பெறு கிறது.

இதில் மெய்ப்பொருளின் தன்மையும், நிலையும் மாருதது. உபாதிகளின் குணம் மாறுவது. இந்த மாற்றம் இரண்டு விதப் படும். ஒன்று இயற்கையாய் மாறிக் கொள்வது. இதை பரிணு மம் என்கிருேம். மற்ருென்று வளர்ச்சியின் அவசியத்தை உணர்ந்து, தானே இயற்கையைத் துணையாகக் கொண்டு வளர்ந்து கொள்வது. இதற்கு புருஷார்த்தம் அல்லது மனித முயற்சி என்று பெயர். உதாரணமாக திரை மாருமலும், அதில் தோன்றும் காட்சிகள் மாறுவது போலுமே, மெய்ப் பொருளுக்கும், உபாதிக்கும் உள்ள தொடர்பு.

மெய்ப்பொருளுக்கு மூன்று குணங்கள் இருப்பதாகக் கண் டோம்! (இம்மூன்றும் தனித்தனிக் குணங்கள் அல்ல என்பதை யும் ஒன்றையே உணர்த்துவதற்கு ஆட்கொள்ளப்பட்ட மூன்று சொற்கள் என்பதையும் பின்வரும் சுடர்களில் காணலாம்.) சத் என்ருல் ''இருப்பது''. சித் என்ருல் அந்த இருப்பைத் தானே எந்த விதமான அந்நியப் பொருட்களின் உதவியு மின்றி ''அறிவது''!—அப்படி தன் இருப்பை, தானே அறியும் நிலைக்கு ஆனந்தம் என்றும், நிம்மதி என்றும், சாந்தம் என்றும் பெயர் (ஆழ்ந்த உறக்க நிலைபற்றி இப்படிச் சிந்தியுங்கள்). தன் னைத்தானே ஆனந்த மயமாய் உணரும் மெய்ப்பொருளை, தங் ளால் இயன்ற அளவிற்கு வெளிப்படுத்துவது உபாதிகளின் நோக்கமும் வளர்ச்சியும் ஆகும். எந்த உபாதி, மெய்ப்பொரு ளின் மூன்று அம்சத்தையும் வெளிப்படுத்துகிறதோ அதுவே முற்றுக வளர்ந்து, தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்ட உபாதியாகும். (இந்த உபாதி மனிதனுய் இருந்தால் அவனுக்கு ''மெய்யறிவாளன்'' என்றும், ''ஞானி'' என்றும், ''சித்தன்'' என்றும் பெயர். இவ்வுலகில் உள்ள எல்லாப் பிராணிகளைக் காட்டிலும் மனிதனுக்கு மட்டுமே இந்த மெய்ப்பொருள் விளக்கம் ''சாத்யம்'' என்பதை பின்வரும் சுடர்களில் காண லாம்). இந்த நோக்கத்தையே முக்தி என்றும், மோட்சம் என் றும், விடுதலை என்றும் பலவாருகக் கூறுகிருர்கள்.

மெய்ப்பொருளின் தன்மையை உணரக்கூடியதாக, ஒரு உபாதி அமைவதற்கு இரண்டு காரணங்களைப் பார்த்தோம். ஒன்று இயற்கை விதிகள் அல்லது பரிணுமம். மற்ருென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாக எடுத்துக்கொண்ட முயற்சி. இந்த இரண்டு காரணங்களும் ஒன்று சேர்ந்து ஒன்றிற்கு மற்றொன்று துணையாக அமைந்து விடும்பொழுது வளர்ச்சியும், மெய்ப்பொருளை வெளிப்படுத்தும் வாய்ப்பும், துரிதமாக்கும் முயற்சி எப்படி சாத்யம் என்பதை ஆராய்வோம்.

இவ்வுலகில் நாம் காணும் எல்லாப் பொருட்களையும் உபாதியின் குணங்களை அடிப்படையாகக் கொண்டு பெரியோர்கள் நான்கு வகையாக பொதுவாகப் பிரித்திருக்கின்றனர். இந்நான்கு வகைகளின் உட்பிரிவையும், அவைகளின் விளக்கங்களையும் பின்வரும் சுடர்களில் காண்போம். அஹிம்சையின் தாத்பர்யத்தை உணரும் நோக்கத்தான் கீழ்வரும் ஜட சமூகங்களின் நிலைகளை உணர்ந்து கொண்டால் போதுமானது.

1. தன்னிருப்பையும், தன்னிடத்தில் உள்ள மெய்ப்பொருளின் இருப்பையும் உணராத, உணரமுடியாத, ஜடத்தின் ஸ்தூல விகாரம். கல், மண், உலோகம் மற்றும் அவைகளின் மாறுபட்ட தோற்றங்கள். இவைகளையே பொதுவாக "பொருட்கள்" என்று அழைக்கிறோம். இவைகளிடத்து இயற்கையாகப் பார்த்து உருவாக்காத, மாற்றங்கள் தவிர தன் முயற்சியால் தோற்றுவிக்கும் மாற்றங்கள் இல்லை; எந்த முயற்சிக்கும் ஒரு நோக்கம் வேண்டும். நோக்கத்தை உணர்வதற்கு ஞானம் வேண்டும். ஞானத்தைப் பெறுவதற்கு "ஞானக் கருவிகள் (Instrument of knowledge or knowing Instruments) வேண்டும். ஆனால் இந்த "பொருட்களில்" அப்படிப்பட்ட கரணங்கள் இல்லாத காரணத்தால், தன் குறையை உணரும் நிலையோ, அதிலிருந்து விடுபடும் நோக்கமோ இல்லை. மாற்றங்கள் இயற்கையின் விதிகளுக்குபட்டு நடந்தாலும், இவைகளுக்கு அது தெரியாது. இதன் காரணத்தால் இவைகளை "அசேதனம்" என்று அழைக்கிறோம். "சேதனம்" என்றால் அறியும் ஆற்றல் படைத்தவை. அவைகளை ஜீவராசிகள் என்றும் பொதுவாக அழைக்கிறோம்.

இதனால் கரணங்களற்ற ஜட சமூகத்திற்கு உபதேசம் வேண்டியதில்லை. மேலும் அவைகளால் பிற உயிர்களுக்கு துன்பமும் நேர்வதில்லை. இவைகளைத் துன்புறுத்தி இவைகளிடத்தில் இன்ப, துன்ப உணர்வுகளை உருவாக்கும் ஆற்றலும் பிற ஜீவராசிகளுக்கு இல்லை. ஆகவே கொல்லாமை என்னும் நெறி இச் ஜட சமூகத்தில் நாம் காட்ட வேண்டிய அவசியமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இப்பிரபஞ்சத்தில் அடுத்து நாம் காணும் ஜடத்தொகுதிகள் தாவரங்கள். 'ஸ்தாவரம்' என்ற சொல்லுக்கு 'நிலையானவை' என்பது பொருள். தாவரங்கள் பொதுவாக தங்களுக்கு கிடைத்த சூழ்நிலையைக் கிரஹித்து வளர்கின்றன. இவைகளிடத்தில் விருப்பு, வெறுப்பில்லை. விருப்பும் வெறுப்பும் ஒரு உயிர் தான் ஏற்றுக்கொண்ட குறிக்கோளை, தேவையை அடிப்படையாகக் கொண்டு மனத்தில் உதயமாவன. எங்கு தெளிந்த நோக்கமில்லையோ, அம்மனத்தின் விருப்பு வெறுப்புகளும் நிலையில்லாமல் மாறிக்கொண்டே இருக்கும். ஒரு சந்யாசி தண்ணீர் விட்டாலும், மாறாக ஒரு சண்டாளன் தண்ணீர் விட்டாலும் ஊற்றிய நீரை உட்கொண்டு வளர்வது தாவரம். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் ''கிடைத்தால் வளர்வதும், மறுத்தால் மறைவதும்''—தாவரங்களின் குணங்களாக அமைந்திருக்கின்றன. இருப்பினும் முதலில் பார்த்த கல், உலோகம் போன்ற ஜட அம்சங்களைக் காட்டிலும், தாவரங்களிடத்தில் ஒரு மென்மைக் குணமும், வளர்ச்சியில்-ஜட ரீதியான மாற்றத்தில்,-தங்கள் அமைப்பை விகாரப்படுத்துவதில் ஒரு துரிதத்தையும் கூர்ந்து கவனித்தால் அறியலாம். மண் தொகுதி கல்லாக மாறுவதற்கு அது எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட ஒரு விதை செடியாக வளர்வதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் குறுகியதாக இருப்பதோடல்லாமல், பௌதீக விதிகளின் ஊடுருவல்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை அதிகமாக தாவரங்களிடத்தில் இருப்பதைக் காணலாம். தத்துவ நூல்கள் மேலெழுந்த வாரியாக இத்தன்மையை தாவரங்களின் ''உயிர் நிலை'' என்று கருதுகின்றன. இதனால் ஒருவன் கீழே கிடக்கும் கல்லை எடுத்து எறிகின்றபொழுது, அவனிடத்தில் எதிர்பார்க்கப்படாத 'இரக்கம்'—ஒரு செடியைக் கிள்ளி எறியும் பொழுது அந்த இரக்கத்தை எதிர்பார்க்கிறோம். இந்த இரக்கம் தாவரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தோன்றியதென அறிக. தாவரங்களைப் பார்த்து 'வளர்கின்றன' — என்று சொல்வது வழக்கம். ஆனால் கல்லையும் மண்ணையும் பார்த்து வளர்வதாக நாம் கூறுவதில்லை.

3. அடுத்து நாம் கண்டு கொள்வது விலங்கினங்கள். தாவரங்களிடத்தில் காணப்படாத அதிக கரண வளர்ச்சியை இவ் விலங்கினங்களில் காண்கிறோம். இவ்வளர்ச்சியைத் துணையாகக் கொண்டு மெய்ப்பொருளின் இருப்பையும், தன் விருப்பு, வெறுப்புக்களையும் உணர்ந்தும், பிற உயிர்களுக்கு உணர்த்துவதுமாக அமைந்த உயிர்ப்பிராணிகளே விலங்குகள். புலன்களைத் தாங்கிவரும் முதல் உயிர்த்தொகுதிகளே விலங்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச் சேகரிப்பிற்கு ஒரு உயிர் அடைய வேண்டிய முதல் தகுதி புலன்களைத் தாங்கிவருவதே. இது பரிணாமத்தின் அளவு கோலும் ஆகும். எந்த உயிரிடத்தில் புலன்களின் வளர்ச்சி இயற்கையின் பரிணாமத்தால் கிடைக்க வில்லையோ அவ்வுயிர்கள் அறியாமையில் ஆழ்ந்திருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. அந்த அறியாமையிலிருந்து விடுபடுவதும் அவைகளால் இயலா. ஆனால் அறியாமை என்னும் மாயையிலிருந்து விடுபடுவதே, உயிர்த் தொகுதிகளின் நோக்கம் என்பது எல்லாச் சமயங்களின் ஒரு மித்த கருத்தாகும். இங்கு தோன்றுவது தான் ''அஹிம்சை'' என்னும் பெருநெறி. இது உணர்த்துவது யாதெனில் ''நீ பார்க்கும் பிராணிகளில் எதனிடத்தில் அறியும் ஆற்றல் கூடித் தெரிகிறதோ, அவ்வாற்றலால் அறியாமையிலிருந்து விடுபடுவது சாத்தியமோ. அந்தப் பிராணியின் கரண அழிவிற்கு நீ காரணமாகாதே'' என்பதே. (இதனால் உயிர் அழிக்கப்படுவதில்லை—அழிப்பதில்லை—என்பதை உணரவும் மெய்ப்பொருளின் இருப்பை உணரும் நிலைமையே உயிர் பெற்ற நிலையாக—சேதனங்களாக அறிந்து கொள்ள வேண்டும்.) இதுவே அஹிம்சையின் வரைவிலக்கணம்.

நாம் காணும் உயிர்களில் அறிவாற்றல் மிகுந்தும், அறிந்தும், அறியாமையின் வேதனையை உணர்ந்தும் உள்ளதாகக் காணப்படும் பிராணி மனிதப் பிராணியே. ஆகவே, அஹிம்சை என்பது மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய ஒரு ஞானமே தவிர, ஒரு விநாடியில் தோன்றி மறையும் உணர்ச்சியல்ல.

அறியும் ஆற்றலில் மனிதனோடு போட்டிபோட முடியாவிட்டாலும், தாங்களும் புலன்களின் பலத்தால் அறிந்து கொள்ள முடியும் என்று உணர்த்துபவை விலங்குகள், பறவைகள். (ஊர்வன, நகர்வன—பொதுவாக ஒரு புலன் படைத்த பிராணிகள், பின் இரு புலன் படைத்த பிராணிகள்—இதே போல் ஐம்புலன்களும் நிறைந்த விலங்குகள்.) மிருகங்களிடமிருந்து மனிதன் தோன்றினான் என்னும் கொள்கை பரிணாமம் என்னும் அளவுகோலால் பார்க்கப்பட வேண்டியது. பரிணாமத்தின் உச்சநிலை உபாதிகளின் மேன்மையில் மறைந்திருக்கிறது. உபாதிகளின் மேன்மை கரணங்களைப் பெற்று வருவதில் இருக்கிறது. கரணங்களின் மேன்மை அறிவோடும், மனத்தோடும் சேர்ந்த புலன்களில் இருக்கிறது. இதை மனிதனிடத்தில் காண்கிறோம். மிருகங்களிடத்தில் சிந்திக்கத் துணைபுரியும் ''புத்தி'' என்னும் கருவியில்லை. ஆனால் புலன்களும் மனமும் உண்டு! இதனால் பிரபஞ்சத்தில் மனிதனுக்குச் சற்றுக்கீழாக பரிணாம வளர்ச்சியில் இருப்பவை விலங்குகள். இவைகளும் காலத்தின் வேகத்தில் மனிதப் பிராணியாகத் தோன்றலாம் என்பது பரிணாம விதிகளின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இதைத் துணையாகக் கொண்டே கொல்லாமை என்னும் அஹிம்சை நெறியை மனிதன் விலங்கினங்களிடத்திலும் காண்பிக்க வேண்டும்!

## சந்தேகம்!

உயிர்க் கொல்லாமையை முழுமையாகக் கடைப்பிடிக்க ஒருவன் முனைகின்ற பொழுது அவனுக்கு உணவேயில்லாமல் போய்விடும் என்ற அச்சமும், சந்தேகமும் இன்று பெரும்பாலரால் எழுப்பப்படுகிறது! மேலும் தாவரங்களிடத்தும் உயிர்கள் இருக்கின்றன—என்ற உண்மையை, சமயமும், விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கின்றனவே! எனவே, தாவரங்களை அழிப்பதும் அஹிம்சைக்கு விரோதமானது தானே? என்ற கேள்வி எழலாம்.

ஆனால் உண்மையும், உலக அமைப்பும் அவ்வாறன்று. உயர்ந்ததைக் காப்பதும், உயர்ந்ததை நோக்கி உயிர்கள் நடைபோடும் பொழுது தாழ்ந்தன மாய்வதும் இப்பிரபஞ்சத்தின் பொது நெறி! உபாதிகளில் உயர்ந்தது மனித உடலே. இதைக்காத்து, இதனால் ஞானமென்னும் தெளிவையும், வைராக்யம் என்னும் வாழ்க்கை நெறியையும் பெறுவது தனி மனிதன் தேடிக் கொண்ட கடமையல்ல. இப்படைப்பின் கடமையும் ஆகும். உடல் என்பது உட்கொண்ட உணவின் மாறுபட்ட வடிவம்! இந்த உடலுக்கு உணவு ஏதேனும் ஒரு வகையில் இருந்தே ஆக வேண்டும் என்பது ஞாயமானது. அந்த உணவு வகைகளே தாவரங்களின் வளர்ச்சி துரிதமானது. நேற்று இட்ட விதை, இன்று முளைத்து நாளை உணவாக மாறும் நிலை நமக்கு புதியதல்ல. ஆனால் உயிர் தாங்கிய பறவைகளும் விலங்குகளும் அப்படியல்ல! பயிர் விளையும் காலமும், அதே பயிர் பறவையாய் மாறுவதற்குத் தேவையான காலமும் எவ்வளவு மாறுபடுகின்றன!

மேலும் தாவரங்களை உட்கொண்டு வளர்ந்து, தன் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, உயிருக்கு உறுதுணையாய் நின்ற இந்த உடல் மீண்டும் தாவரங்களுக்கு உரமென்னும் உணவாய் மாறுவது நாம் காணும் காட்சிதானே!

ஆகவே அஹிம்சை என்னும் நெறி ஞான பூர்வமாக மனித மனத்தில் தோன்றிய ஒரு தெய்வீகத் தெளிவு. வளர்த்துக் கொள்ள வேண்டியது சாதகனின் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தம்:

மானித்வம் என்ற அகந்தை உணர்வால் அழியாமலும், டம்பித்வம் என்ற பொய்மையால் ஒருவன் உள்ளத்தை மாசு படுத்தாமலும், அஹிம்சை என்னும் உயர் நெறியால் தெய்வீக உணர்வை வளர்த்துக்கொண்டும் வரும் மனப் பண்பிற்கே சாந்த நிலை என்று பெயர்! இது ஒரு சோம்பேறி சுவைக்க விரும்பும் தாமசத்தின் தடித்த குணமல்ல!

சாதாரணமாக அமைதியானவர்களை ஆக்க உணர்வுகள் அற்றவர்கள் என்றும், வாழ்க்கைதானே முன்வந்து அளிக்கும் சிற்றின்பங்களை நுகரும் கலையில் தேர்ச்சியடையாதவர்கள் என்றும் தவருகக் கருதுகிறோம்! இது உண்மைக்கு மாறுனது! சிவரூபமான சாந்தத்தில்—அழியாத பேரமைதியில் நிலைபெறுவது உயிரின் குறிக்கோள்! இதுவே மனித மனத்தின் குறியாக மாறவேண்டும்! எது லட்சியமோ, அது ஒருவனின் லட்சணமாக அமைய வேண்டும்! அதையே வெற்றி என்கிறோம்! சலனமற்ற சமாதிநிலை ஆன்மீக வெற்றிக்கு அளவுகோலாகுல், அதற்குக் கொள்முதலாக மனிதன் பற்றிக்கொள்ளவேண்டிய ஆரம்ப அமைதியே சாந்தமாகும்! அசாந்தஸ்ய குத: சுகம்! — அமைதி அற்றவனுக்கு சுகம் எங்கே? என்ற சவாலுக்குச் சமானமான ஒரு கேள்வியை கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் காண்கிறோம்!

வாழ்க்கையின் மேலெழுந்தவாரியான ஆரவாரங்களில் இருந்து தன்னை விடுவித்து, மெய்மைப் பற்றினுல், அஹிம்சை உணர்வுதந்த அந்தரங்க சுகத்தின் ஆழத்தையும், அகலத்தையும் விரிவுபடுத்தும் முதல் முயற்சியே தன்னை ஒருவன் சாந்தவானக மாற்றிக்கொள்ளும் நிலையாகும்!

மின்சாரம் பெரிய இயந்திரங்களை இயக்குவதை நாம் கண்டிருக்கிறோம்! இயக்கப்பட்ட இயந்திரம் தான் இயங்கும்பொழுது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய ஆரவாரம் இடுவதையும் நாம் கேட்டிருக்கிறோம்! தானாக ஒன்றையும் இயக்கமுடியாத ஜடமான இயந்திரம், மின்சாரத்தின் துணை கிடைத்தவுடன் ஆரவாரத்தைக் தொடங்குகிறது! ஆனால் தன்னோடு உறவுகொண்ட எதையும் உயிரூட்டி எழுப்புவதுபோல், இயக்கத்தை விளைவிக்கும் மின்சாரம் எந்த ஆரவாரமும் இடுவதில்லை! மின்சாரம் ஆரவாரம் போடாததால் அதனிடத்தில் சக்தியும், ஆக்கமும் இல்லையென்று சொல்லமுடியமா? அதுபோன்றதே மனித மனம் அனுபவிக்கும் சாந்தத்தின் சக்தியும்! அது ஆரவாரம் செய்யாது—ஆனால் ஆக்கம் நிறைந்தது. ஆக்கம் நிறைந்தவனே ஆன்ம லாபம் பெறத்தக்கவன்! அயம் ஆத்மா பலஹீனேன லப்ய:—இந்த ஆத்மா பலஹீனனுக்கு கிட்டாத ஒன்று என்பது வேதவாக்கு!

வாழ்வின் ஆரவாரத்தையும், ஆர்ப்பரிப்பையும் முடிவான சுகம் என்று கருதுபவன், அறியாமையின் மிக ஆழத்தில் புதைந்து கிடப்பவன்! அதிலிருந்து அவனை விடுவிக்கும் வாழ்க்கைநெறியே 'சாந்தம்' என்னும் மனப்பண்பு. இது வாழ்க்கையின் சாபக்கேடுகளாக கருதப்படும், அறியாமை, தவறுகள், பொறாமை, ஆற்றாமை, அழிவில் சுகம், வறுமை போன்றவற்றின் மூலத்தைக் கேள்விகேட்க முடியாத நிலையை உருவாக்கும் ஒரு ''மனவாத'' நோய் அல்ல; ஓய்வு நாற்காலியைத் தேடும் உபதேச மொழியுமல்ல! சாந்தம் சத்தியத்தின் பிரதிபலிப்பு! சாந்தவான் சத்தியவான் ஆவான்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்ஜவம் - நெஞ்சுறுதி:

நெஞ்சுறுதி, மனோவலிமை, நேர்மை, சலிப்பின்மை போன்ற பல பெயர்களைத் தாங்கிவரும் இந்த அக அமைப்பு— ஒருவன் தான் தேர்ந்தெடுத்து செயலாற்ற நினைத்ததை தானே தகர்த்தெறியாமல் பாதுகாக்கும் ஒரு லட்சியப் பிடிப்பாகும்! மனிதனின் செயல்களுக்கு அவன் தன்னகத்தே கொண்டுள்ள தெளிவான தீர்மானமே ஆதாரம்! தேர்ந்தெடுத்த முடிவு வலிமை குன்றியிருந்தால், அதனால் விளையும் செயலின் தன்மையும், அச்செயல்களில் தன்னுடைய ஈடுபாடும் வலுவின்றியே காணப்படும்! இதையே சங்கல்ப சக்தி என்பார்கள்! இதற்கு மற்றொரு பெயரே ஆர்ஜவம் என்னும் நெஞ்சுறுதி.

மனித வாழ்க்கையின் சிறப்பு மனோவலிமையில் மறைந்து கிடக்கிறது! மனவலிமை அதன் தெளிவில் குடிகொண்டிருக்கிறது! ஒரு மனிதனின் சிந்தனைகள் யாவும் தான் அடைய விரும்பும் பொருளையோ, லட்சியத்தையோ சுற்றிச் சுற்றி வருவதை நாம் அனுபவத்தில் காண்கிறோம்! அடையவிரும்பும் பொருட்கள் பலவாக இருந்தால் அதற்கு கவர்ச்சி என்று பெயர்! தெளிவின் துணைகொண்டு, தேர்ந்தெடுத்தது ஒன்றாக இருந்தால் அதற்கு லட்சியம் என்று பெயர்! பல ஆண்டுகள் வசதியான வாழ்க்கைக்குப் பின்னும் வாழ்வென்னும் ஏட்டில், நமக்காக சேகரித்த லாபக் கணக்குப் பார்க்கும் பொழுது, லாபம் சூன்யமென்று நம்முள் பலருக்கு உணர்த்தி நம்மை திகைக்க வைப்பதே கவர்ச்சி! மாறாக கிடைத்த வாழ்க்கை வசதிகள் எதுவானாலும் அவையாவற்றையும் தான் அடைய விரும்பும் ''ஒருலட்சியத்திற்கான'' காரணிகளே என்று உறுதியாய்ஏற்றுக்கொண்டு, அதை அடைவது லட்சிய வாழ்க்கை! இது நம்மில் பெரும்பாலோரிடத்தில் இல்லை! காரணம் நமக்கு 'கண்டதே காட்சி!' கொண்டதே கோலம்! அற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகங்களே நமக்குப் பரமானந்த ஸ்வரூபங்களாகத் தோன்றுகின்றன! உயர்ந்ததை உணரும் உந்தல் நம் உள்ளங்களில் இல்லை! 'மனம்' என்று ஒன்று நம்மிடத்தில் இருந்தாலும், நாம் எல்லோரும் அதனோடு வாழ்ந்தாலும் மடிந்தாலும், மனத்தின் உண்மையான வலிமையை உணராதவர்களாகவே இருக்கிறோம்! விஞ்ஞான யுகம் என்ற போர்வைக்குள் குறுகிக்கொண்டு, புறப்பொருள் தரும் போதைகளுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறோம்! விஞ்ஞானமும் ஒருவிதமான 'ஞான' முயற்சியே-என்பதை மறந்து, விஞ்ஞானம் - மெஞ்ஞான நெறிகளை வேட்டையாட வந்ததாகக் கருதுகிறோம்! அக்கருத்துக்களில் ஒரு ஆரம்ப சுகமும், அக ஆராய்ச்சியிலிருந்து ஒருவன் வெகுதூரம் விலகிச்செல்வதற்கு வாய்ப்பும் கிடைத்து விடுகிறது! இப்படி விலகிக்கொண்டவர்கள் எல்லாம் அறிவாளிகள் என்று கருதினால் இன்று தெரு முழுவதும் விஞ்ஞானிகள் பவனிவந்து கொண்டிருக்கவேண்டும்! இந்த மனோபாவங்கள் அறியாமையின் ஆழத்தை உணர்த்துகின்றன! உறுதிசெய்கின்றன! நமக்குப் பரிச்சயமான இந்த விஞ்ஞான யுகம் 14 ஆம் நூற்றாண்டில் பௌதிக, இரசாயன ஆராய்ச்சிகளோடு தொடங்கி, 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மனம் என்றால் என்ன? என்ற கேள்வியோடு அக உலக ஆராய்ச்சியைத் தொடங்கியிருக்கிறது!

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் நமக்கு அளிக்கப்பட்ட மறைநூல்களோ மனத்தின் அமைப்பையும் செயலையும் அதன் வலிமைகளையும் உணர்த்துவதாய் அமைந்திருக்கின்றன! 'மனமேவ மனுஷ்யாணும் பந்த மோக்ஷஸ்ய காரணம்' — என்று என்றைக்கு நம் பெரியவர்கள் எடுத்துரைத்தார்கள் என்பதற்கு. துணிவுதரும் புள்ளிவிவரங்கள் இன்றும் நம்மிடம் இல்லை!

மனத்தின் வலிமை அதன் சங்கல்ப சக்தியால் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டியதும், உணரப்படவேண்டியதும் ஆகும்! சலனமே தன் சரக்காய் அமைந்த இன்றைய சமுதாயத்திற்கு. ஆன்ம நேய ஒருமைப்பாட்டில் சலியாத சங்கல்பம் ஒரு அத்தியாவசியமான, மிக அவசரமான தேவையாகும்! ஆன்ம சாதகனுக்கு அது 'ஆக்ஸிஜன்' போன்றது! ஆர்ஜவம் என்ற சொல்லுக்கு நேர்மை என்றும் பொருள் கொள்வதுண்டு! சிந்தனையும் செயலும் ஒன்றிற்கொன்று முரண்படாமல் சேர்ந்து வாழும் நிலையே நேர்மைத்திறன் ஆகும்! இதை லட்சியப்பிடிப்பென்றும் சொல்லலாம்! கவர்ச்சிகளே எல்லாவிதமான பொய்மைக் குணங்களுக்கும் உறைவிடமாக இருக்கின்றன! சொல்லும் செயலும் சிதறுவதற்கு இக்கவர்ச்சியே காரணமாக அமைந்திருக்கிறது! இதிலிருந்து விடுபட்டால் ஒழிய சாதகனின் ஆன்மீக வளர்ச்சி ஒரு எட்டாக் கனியாகவே இருக்கும்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசார்ய உபாசனம்:
# அல்லது குருவணக்கம்!

உறங்குபவனுக்கு உபதேசம் அவசியமில்லை! காரணம் உறக்கத்தில் உறவுகள் இல்லாததால்! எங்கு உறவுகள் உதயமாகின்றனவோ அங்கேயே வாழ்க்கையின் முரண்பாடுகளும். அதற்குண்டான தெளிவுகளைத் தேடும் முயற்சிகளும் ஆரம்பமாகின்றன! மனித வாழ்க்கையில் இரண்டு விதமான உறவுகளைக் காண்கிறோம்! ஒன்று வாழ்க்கையின் ஆரம்பச் சூழ்நிலையின் அம்சங்களாக அமைந்த தாய், தந்தையரும், பிற சூழ்நிலைகளும்; மற்றொன்று, மனிதன் வளர ஆரம்பித்து, தன் விருப்பங்களைத் தானே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற துணிவு வந்தவுடன் "வளர்ந்தவன்"-"தனி மனிதன்" "சுதந்திர மனிதன்" "உலகை உபயோகிக்கத் தெரிந்தவன்" "சிறகு விரிந்த பறவை" என்று தனக்குத் தானே சூட்டிக்கொண்ட அடையாளங்களோடு, தேடிக் கொண்ட பிற உறவுகள்! நண்பர்கள் — காதலர் — மனைவி இன்ன பிறத்தாரும் பொதுவாக இதிலடங்கும்! இவ்விரண்டு உறவுகளிலும், எது தன்னை மகிழ்ச்சியாகவும், பாதுகாப்போடும் வைத்திருக்கிறதோ அதை நிறுத்திக்கொள்வதிலும், எது தனக்கு உபயோகம் இல்லா விட்டாலும், கட்டிக்காக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வால் சிறைபடுத்தப்பட்டு, அவர்களின் தேவைகளை விரும்பியோ விரும்பாமலோ நிறைவேற்றிவருவதிலும் மனிதவாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் அடங்கிவிடுகின்றன!

உற்சாகத்தோடு உறவுகளை ஏற்றுக்கொண்ட மனிதன், காலத்தின் வேலை ஆரம்பமானவுடன் அவ்வுறவுகளின் மீதிருந்த கவர்ச்சியும் தேவையும் ஒரு மயக்கமே என்பதை நகைச்சுவையோடோ, மனக்கிலேசத்தோடோ ஏற்றுக்கொள்ளத் தொடங்கி, வாழ்வின் அர்த்தத்தை எடைபோட ஆரம்பிக்கிறான்! வஞ்சகமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாத விசாரம்—வாழ்வின் குறைகளை அவனுக்கு எடுத்துக்காட்டு கிறது! இந்தத் தெளிவோடு—இனி என்ன? என்ற கேள்விக்கு விடைகாண முயற்சிக்கிறுன்! இங்கு நமக்குக் கிடைத்த துணையே ஆன்மீகம் என்பதும்—அத்துணையைச் சுட்டிக்காண்பித்தவரே குரு அல்லது ஆசார்யர் என்பதும் 'குரு' என்ற சொல்லிற்கு நாம் கண்டுகொண்ட அவசர அர்த்தம்! இதுவே இன்றைய சமுதாயத்தில் விநியோகமாகும் அர்த்தமும். அவ்வர்த்தத்தைத் தாங்கி வரும் குருமார்களும் ஆவர்! இவைகளெல்லாம் ஓரளவிற்கு. உண்மையானுலும்கூட இது மட்டுமல்ல 'குருவும்'—குருபக்தியும்!

உறவுகளை மூலமாகவும். தான் அடையவிரும்பும் நிலைகளுக்கு நுழைவாயில்களாகவும் கருதி வாழ்வில் உறுதியைத் தேடி அலையும் மனிதனை நிறுத்தி: உறவால் பலன்பெற நினையாமல் வாழ்வில் தோன்றும் ஒவ்வொரு உறவும் அவனது யதார்த்தஸ்வரூபமான ஆத்ம தத்வத்தை பிரதிபலிக்கும் கண்ணுடிகளாக மாற்றிய பெருமையும்—ஒரே நேரத்தில் உறவுகளை ஏற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொண்ட நிலையிலேயே தாமரை இலைத் தண்ணீர் போல் நிலையான அந்தரங்க விடுதலையை உறுதிப்படுத்திய பாங்கும், சுதந்திரம் என்ற சொல்லுக்கு சரியான அர்த்தத்தைக் காண்பித்து, உண்மையில் ஒருவனை சுதந்திரமுள்ளவனுக ஆக்கிய பெருநிலையையும் கொண்ட ஒரு புனிதமான உறவுக்குரியவரே குரு ஆவார்! இது நாம் "வளர்த்துக்" கொண்ட ஒரு "சமூக" உறவு அன்று! இந்த ஆச்சரியமான உறவை இதுவரை எந்த சமய சாஸ்திரங்களும், முனிவர்களும் முற்றுக வர்ணித்துவிடவில்லை! இவ்வுறவு பற்றிய அறிவு ஆராய்ச்சியில் கிடைப்பதல்ல! அனுவபத்தால் மட்டுமே பெறவேண்டிய தெளிவு! அனுபவங்களைத் தூரவைத்து, அவ்வனுபவங்களைச் சுற்றி பிறர் தந்த விஷயங்களை ஒன்றுசேர்த்து அதன்வாயிலாகப் பெற்ற ஆராய்ச்சி தந்த அறிவு வேறு! மாருக ஒரு அனுபவத்தை தனதாக்கி "இது என் அனுபவம்" — என்பதாய் பெற்ற அறிவு வேறு! உதாரணமாக மருத்துவர் என்பவர், மகப்பேறுக்காலத்தில் ஒரு தாய் படும் வேதனைகளை முழுமையாக அறிந்தவரே! எந்தெந்த உறுப்புகள் அவள் சரீரத்தில் எப்படி எப்படி வேலைசெய்யும் என்பதும், வேதனைப்படும் வேதனைப்படுத்தும் என்பதும் தாயைவிட அதிகமாக அறிந்தவர்! இது அறிவு தந்த அனுபவம்! அந்த அறிவும் அனுபவமும் தாயின் சுகப்பிரசவத்திற்கு துணையாய் இருக்கும், இருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை! ஆனுல் உறுப்புகளின் அசைவு பற்றிய எந்த உடலியல் ஞானமும் இல்லாத அந்தத் தாய் பெற்ற "அனுபவம் தந்த அறிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா! என்ன வலி'' என்பது! என்ன வலி அம்மா!-என்பது ஒரு விளக்கமாக ஆராய்ச்சியாளனுக்கு அமையாது! ஆனால் அனுபவசாலிகளான இரண்டு தாய்மார்கள் பகிர்ந்துகொள்ளும்-போது அங்கே இந்த மூன்று சொற்களுமே அதிகமானவை! வாஞ்சையான ஒரு தழுவலும், சொல்லே தேவையில்லாமல் அர்த்தத்தை மட்டும் தாங்கிவரும் ஒரு சிரிப்பும், எல்லா விளக்கங்களையும் தரும் ஆற்றல் படைத்தவை. இங்கே மருத்துவர் பெற்றது அறிவார்ந்த அனுபவம். தாய் பெற்றது அனுபவம் தந்த அறிவு இதேபோல் குருவின் மஹிமையை ஒரு ''சீடன்'' தான் புரிந்து கொள்ளமுடியும்! சீடனை மனதிற்கு வெளியே வைத்துவிட்டு, குருவின் மகிமையை உணர முயன்ற பலபேர்கள் குருவால் பலன் பெறாமலே போயினர் என்பது நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மை! தாயன்பை மக்களும், இல்லற சுகத்தைக் கணவனும், சகோதர உணர்வை உடன்பிறந்தாரும், நட்பை ஒரு நண்பனும் எப்படி எளிதாய் உணர்வார்களோ—அவர்கள் மட்டுமே உணர முடியுமோ, அதேபோல் ஒரு சீடன் மட்டுமே குருவின் உயர்வையும், அவ்வுறவால் விளைந்த பலனையும் அறிந்துகொள்ள முடியும்!

இனி நமக்கு அவசியமான கேள்வி! யார் சீடன் என்பதே!

பொதுவாக ஒவ்வொரு உறவுக்கும் ஒரு நோக்கம் வேண்டும்! இந்த நோக்கம் தான் தேடிக்கொண்ட பொருளின் தன்மையைச் சார்ந்து அமைந்தால் அதை ஞாயமான தேவை என்றும், பொருளின் தன்மைக்கு எதிர்மறையாக ஒருவனது எதிர்பார்ப்பிருந்தால் அதை அறியாமையில் விளைந்த உறவென்றும் கூறுகிறோம்! ஆங்கிலத்தில் இதை wrong expectation என்று கூறுவார்கள்! தவறான எதிர்பார்ப்புகள் ஒருநாளும் வெற்றிபெறப் போவதில்லை. மாறாக அது ஒரு சலிப்புணர்வையே தரும்! உறவின் இந்த அம்சத்தை குரு-சீடர்களிடத்தில் பார்க்க முயற்சிப்போம்!

குரு என்பவருக்கு இயற்கையான தன்மையாக மறைநூல்களும், மறைநூல் நலம்பெற்ற மஹான்களும் ஏற்றுக்கொண்ட ஒரே கருத்து 'அறியாமை''—என்னும் அந்தகாரத்தை நீக்கும் வல்லமை கொண்டவர் என்பதே! கு காராத் அந்தகார: ரு காராத் தந் நாஸம் என்பது வடமொழி தந்த விளக்கம்! கு என்ற சொல்லால் அந்தகாரம் என்னும் அறியாமையும் 'ரு' என்ற சொல்லால் அதை நாசம் செய்பவராயும் எவர் உளரோ அவரே குரு என்னும் சொல்லுக்குரியவர்! இப்பொழுது ஒரு சீட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய உறவுக்கு உட்பொருளாக ''ஞான வேட்கை'' அமையுமாயின் அந்த உறவு ஞாயமான உறவு! வெற்றி அல்லது நோக்கம் இயற்கையாய் நிறைவேறும்! இதற்கு மாருக வேறு ஏதேனும் ''வேண்டுகோள்கள்''—''தேவைகள்'' உறவின் துடிப்பாய் அமைந்தால் அந்த வேண்டுகோள்கள்—ஏக்கங்கள் நிறைவேறலாம்—நிறைவேருமலும் போகலாம்! ஆனல் அதற்கு 'குரு' தேவையென்ற அவசியமில்லை! திறமைபடைத்த எவரும் அதைச் செய்யலாம்—இறைவன் கருணையிருந்தால்! குரு ஆற்றுகின்ற செயல் ஒரு சாதாரண, உதவி அல்ல. ''உதவி'' ஒருவன் வாழ்வில் வரும்-போகும்! சில சமயங்களில் எங்கிருந்து வந்தது என்ற மூலம் தெரியாமலே தன் பலனைக் காட்டிவிட்டு சம்பவங்கள் மறைவதை நாம் கண்டுகொண்டுதான் இருக்கிருேம்! குருவும்—சீடனும் அசாதாரணப் பிறவிகள் அல்ல! சமுதாயத்தை பிரமிக்கவைக்கும் ஜாலவித்தைக்காரர்களும் அல்லர்! அவர்கள் உறவுக்குப் பாலமாய் அமைவது இருவரில் ஒருவர் ஆற்றும் விநோதச் செயல்கள் அல்ல! மாருக ஞானமே அவர்களின் உறவுக்கு ஆதாரம்! தத்வித்தி பிரணி பாதேனே—பரிப் ரஸ்னேன சேவயா! உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானிஞே தத்வ தர்சின: என்பது ஒருவனிடத்தில் சீடனை உருவாக்குவதற்கான—கீதை காட்டிய பாதை! உண்மையை உணர்ந்தவர்கள் உபதேசிக்கிருர்கள். பணிவோடும், பகுத்தறிந்த விஞவோடும் அவர்களை நெருங்கி உரிய பணிவிடையோடு, அந்த ஞானத்தைப் பெற்று நீயும் உய்வாய் என்பது கீதையின் கருத்து!

எளிமையாக உணர்ந்துகொள்ள ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம்! இன்று நாம் தெய்வங்களாக வழிபடும் சிலைகள் எல்லாமே ஒரு காலத்தில் சாதாரண கற்களாகவே இருந்தன! ஒரு கல்லாய் இருக்கும்பொழுது இன்று பார்த்து வணங்கும், ஆயிரக்கணக்காஞேர் அன்றும் பார்த்தனர்! ஆனல் வழிபாட்டிற்குரியதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பலருடைய கண்களுக்கு ஒரு காட்சிப்பொருளாக இருந்தாலும் ஒரு ''சிற்பி'' என்பவன் அந்தக் கல்லைக் கண்டபொழுதுதான், இதனுள் ஒரு சிலையை உருவாக்கலாம் என்று கருதினுன்! சிலை வெளிவந்தது! இப்பொழுதும் அது கல்தான்! ஆனல் கல்லோடு இதுவரை மறைந்துகிடந்த அழகும், அருளும் வெளிப்பட்டதனுல், அது வழிபாட்டிற்குரியதாக மாறிவிட்டது! இக்கல்லை வழிபாட்டிற்குரியதாக மாற்றியதில் சிற்பி செய்த செயலென்ன? அவர் செதுக்கி தூக்கி எறிந்ததும் கல்லே! சிலையாய் நிறுத்திவைத்ததும் கல்லே! கல் தள்ள வேண்டியதைக் தள்ளினுல் தனக்குள் இருக்கும் அழகை வெளிக்காட்டுவது இயற்கை! இதேபோல்தான் குருவும்! நாம் எல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் சாதாரணக் கல்லுக்குச் சமானமானவர்களே! குரு தன் ஞானமென்னும் உளியால் நம்மை மறைந்திருந்த அஞ்ஞான மென்னும் ''அவசியமற்ற'' தை நீக்கினார்! ஒருவன் சொரூபமாகிய ஆன்ம லட்சியம் மனதில் தோன்றத் துவங்கியது! இப்பொழுது அந்தச் சிலை சிற்பியின் தன்மையை, திறனை முழுமையாக ஏற்றுக்கொண்டது! அதே நேரத்தில் சுதந்திரமாகவும் இருக்கிறது!

ஒரு ரகசியம்! சிற்பி வடித்து முடிக்கும்வரை சிலை, 'வேண்டும்' என்றோ, 'வேண்டாம்' என்றோ எதிர்வினை புரிவதில்லை. சிற்பியின் செயலுக்கு தன்னை முழுமையாக ஆட்படுத்திக்கொண்டது! ஆனால் மனிதன் என்னும் கல்லோ, உயிர்த்துடிப்பு நிறைந்தது! விருப்பு, வெறுப்புகளே அதனை மூடியிருக்கும் மாசுகள்! குருவென்னும் சிற்பி ஒவ்வொருமுறை உளியை ஓங்கும்போதும், இப்பொழுது வேண்டாம் பிறகு என்றும், இது வேண்டாம் அது என்றும், எதிர்வினை புரிகிறது! இருளை நீக்கி அருளை வெளிக்கொணரும் முயற்சியில் குருவும் தொடர்கிறார்! இருளை நிறுத்திக் கொண்டு அருளை மறுப்பதில் கலியுகம் வெற்றி கண்டு கொண்டிருக்கிறது! விழிப்போம்! விடுதலை பெறுவோம்!

* * *

# சௌசம் அல்லது தூய்மை

ஆத்மா நித்திய சுத்தமானது! இனிமேல் தனி ஒரு முயற்சியால் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற அவசியமற்றது! இந்த சுத்த சுபாவமே தன்னிலை என்று உணர்ந்து அதில் மனதைக் கரைத்துக்கொண்டால் அதுவே முத்திநிலை! ஆனால் மனிதனின் சுபாவமோ, உடலோடும், உள்ளத்தோடும் தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்டு, அதன் செயல்களைத் தன் செயல்களாகவும், அதன் தன்மைகளை, தன்னுடைய தன்மைகளாகவும் பாவித்து அன்றாட வாழ்க்கையில் ஈடுபடுவதாகும்! தானல்லாத — ஆனால் தன்னோடு இருக்கிற உடல், மனம் என்னும் உபாதிகளோடு தன்னை ஐக்கியப்படுத்தி, அனுபவத்தை தேடும் முயற்சிகளையே அன்றாட வாழ்க்கையின் சாரமாக ஏற்றுக்கொள்வது நாம் எளிதாய் பற்றிக்கொண்ட ஒரு பழக்கம்! இந்த உபாதிகளே ஆத்மாவின் குணத்தை பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகும்! உபாதிகளின் தன்மை ஆத்மா என்னும் பிம்பத்தை தெளிவாக பிரதிபிம்பவதித்தால் அந்த உபாதியினை தூய்மையான உபாதி என்றும், மலம் நீங்கியது என்றும், மாசற்றது என்றும் சமய இலக்கியங்கள் வருணிக்கின்றன! இப்பிரதிபிம்ப சுபாவத்தை அதிகரிக்கும் முயற்சியே சுத்திகரணம் எனப்படும்! இது இரண்டு வகையானது! பாஹ்யம் என்றும், ஆந்தரம் என்றும் பெயர்! பாஹ்யம் என்பது புறச்சூழ்நிலைகளுக்கும் அதனோடும் தொடர்பு கொள்ளும் ஸ்தூல உபாதிகளும், அதாவது ஒருவனது உடலும், உடல் வாழும் பௌதீகச் சூழ்நிலைகளும்! உடல் உட்கொண்ட உணவின் விகாரம்! நேற்று அருந்திய தேனும் பாலும், இன்று உயிரணுக்களாகவும், இரத்தமாகவும், நரம்பு மண்டலங்களாகவும் மாறுகின்றன! இது விஞ்ஞானமும் சமயமும், தெரிவித்த உண்மைகள்! உணவு என்பது பஞ்சபூதங்களின் விகாரம்! இவைகளிடத்து ஆறு சுவைகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ள

98451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர்! சமைக்கத் தெரிந்தோர், இந்த அறுசுவை உணவை பல் சுவை உணவாகவும் மாற்றிக்கொள்ளலாம். இன்னும் சற்று ஆழமாகப் பார்க்கின் உணவின் சாரம்—இந்தச் சுவைகளே! இச்சுவையின் ரசாயன மாற்றங்களே நம் உடலில் தன்மயமாகும் உயிரணுக்கள்! இவைகளின் வளர்ச்சி உடலுறுப்புகளாக மாறி விடுகின்றன! அப்படி மாறிக்கொண்ட, மிகச் சிக்கலான அமைப் புகளைக் கொண்டதே மனிதமூளை. உடல் அசைவுகளுக்கு முக்கிய மானது மூளை! மனிதன் வளர்த்துக்கொள்ளும் பழக்கங்களின் பதிவேட்டிற்கு மூளை என்றும் கூறலாம்! இவ்வுடலை எப்படி உப யோகித்துப் பழகுகிறோமோ, அதே நிலையில் மீண்டும் உபயோ கிக்க தூண்டுவது மூளை! இத்தூண்டுதல்களுக்கு இரகசியமான காரணங்களாக அமைவது நாம் உட்கொண்ட உணவில் அம்சங் களாகிய ருசி! உட்கொள்ளும் உணவில் ருசிகளை அடிப்படையா கக் கொண்டே ''ஆஹார சௌசம்''—என்னும் உணவுத் தூய்மை கருத்தில் கொள்ளப்பட்டது! இவ்வுணவுவகைகளை மூன்று விதமாகப் பெரியவர்கள் பிரித்துள்ளனர்! சத்வம், இரா ஜஸம், தாமஸம் என்பனவாகும்! சத்வகுண உணவு ஜீரணிக்க எளிமையானதும், இனிப்பானதும், பிற ருசிகளில் மிதமானதும், ஆகும்! இராஜத உணவு—கடினமாகவும், காரம் நிறைந்ததாக வும், உடலில் திடீர்ச் செயல்களைத் தூண்டுவதாகவும் இருக்கும். இவ்வகை உணவுகள் நமக்கு மிகவும் பழக்கமானவை! சனி, ஞாயிறுகளில் நம்மில் பெரும்பாலோர் உட்கொள்ளும் விசேட உணவெல்லாம் இவ்வகைத்தே! கண்களில் நீரை ஆற்றுப் பெருக்கும் ஆற்றல் அதிகமுள்ளது! அர்த்தமென்னவெனில், உட லில் இருக்கும் நீர்ச்சுரப்பிகளைத் தூண்டிவிடும் தன்மை கொண் டவை! தாமஸம் என்பது உட்கொள்ளும்பொழுதே மயக்கத்தைத் தருவது! உண்ட இடத்திலேயே உறங்கவைப்பது! இவைகளை யெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கையில் சத்வ உணவு, உட லின் மென்மைக்குணத்திற்கும், ஒரு விழிப்புணர்ச்சிக்கும், மூளை யின் சீரான செயல்களுக்கும், நரம்பு மண்டலங்களில் வலிமைக் கும் காரணமாகின்றது! ரஜோகுணம்—உடலில் ஒரு விறைப்பை யும், தற்காலிகமான சுறுசுறுப்பையும் முடிவில் களைப்பையும் தரு கிறது! தாமஸம் என்பது சோர்வில் சுகத்தையும், உறக்கத்தில் உயர்வையும் தரும்! இவைகளை உணர்ந்து உணவால் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது புறத் தூய்மையின் ஆரம்ப அம்சம்! உட்கொண்ட உணவு சத்வகுணத்தினதாய் இருந்தாலும்கூட, உடலியக்கத்தை ஊக்குவிப்பது பிராணன் என் னும் சுவாசமே! இதில் ருசியில்லை! அழகான மூக்கை வளர்த்துக் கொண்டு அசுத்தமான காற்றை விரும்பிச் சுவாசிப்பது ஒரு வன் ஆரோக்கியத்திற்கு அடிப்படையானது அல்ல! இதனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தூய்மையின் இரண்டாவது அம்சமான பௌதீகச் சூழ லும் அவசியம். இது காலையில் நீராடுதல், தூய ஆடை அணி தல், தான் வசிக்கும் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்றவை அடங்கும்! இதனுல், உடலில் மென்மையும், மூளைக்கு ஒரு புத்துணர்ச்சியும் தோன்றி, மனம் தன் சிந்தனை களைச் செயலாக்கும்பொழுது, உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு முரண்பாடு இல்லாமல் போகிறது! மாருக, புறத்தூய்மை உடற்தூய்மை என்ற பெயரிலே, மாதம் ஆயிரம் ரூபாய் ஒப்ப னைப் பொருட்களில் செலவழித்து, உயர் ரக ஆடைகளை அணிந்து, இறைவனைத் தரிசிக்க தயாராகும் ஊர்வல முயற்சிக ளாகக் கருதவேண்டாம்!

இதுவரை உடலைப்பற்றிப்பார்த்தோம்! தூய்மையானஉடல் என்பது ஆரம்பத் தேவை! இதனேடு திருப்திப்பட்டுக் கொண் டால், ஆன்மீக வளர்ச்சி அதோகதிதான்! இன்று சிறைச்சாலை யில் காணும் பல திருடர்களும், குற்றவாளிகளும் தூய ஆடை அணிந்தவர்களாயும், சத்துள்ள உணவுகளையே உட்கொண்டு, ஆரோக்கியசாலிகளாகவுமே சிறைக்கு அழைத்துவரப்பட்டனர்! உடல் ஆரோக்கியமானதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அது தானுக இயங்கப்போவதில்லை! உடலை இயக்குவது மனம்! மனம் உணவின் விகாரமல்ல. உணவின் விகாரமாகிய மூளையை தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருந்தாலும் மனத்திற்கு உணவு ஒருவன் தேர்ந்தெடுக்கும் சிந்தனைகளே! சிந்தனை செயலுக்கு கரு வாய் அமைவது நம் அனைவரின் அனுபவமே! நாம் ஆற்றும் அன் ருடச்செயல்களைப் பழக்கங்கள் என்று கூறினுல் இப்பழக்கங்களின் ஆரம்ப இடம் மனித மனமாகவே இருக்கிறது! மனத்தின் பழக் கங்கள் தூய்மையானதாக இருந்தால் அப்பழக்கங்களைச் செயல் வடிவங்களாக்கும் உடலையும் பெருமளவிற்கு தூய்மையுடைய தாக வைத்துக்கொள்ள ஒருவனுல் முடியும். எப்படி உணவின் ருசிகளை மூன்று விதங்களாகப் பிரித்தார்களோ அதேபோல் உள் ளத்திற்கு உணவாகிய எண்ணங்களையும் நோக்கங்களையும் மூன்று விதமாகப் பிரித்திருக்கின்றனர்! ஆரோக்யம் அவசியமென்று கரு திய ஒரு நோயாளி எப்படித் தனக்கு வேண்டிய மருந்தை ஒரு கடையில் இல்லாவிட்டாலும், மற்றொரு கடையில் தேடிப்பி டித்து உட்கொள்வானே, அதேபோல் உள்ளம் சிறக்கவேண்டும் என்று ஒருவன் உண்மையில் விரும்பினுல், அவன், அந்த உணவு எங்கிருந்தாலும் தேடிக்கொள்வான்! அவன் தேடவேண்டிய முதல்ரக உணவே சாத்வீக எண்ணங்கள்! (1) ப்ரஹ்மானுசந் தானம் என்னும் சத்தியத்தின் அல்லது ஆத்மாவின் சாந்த சொரூபத்தை நிலைநிறுத்திக்கொள்ளுதல் (2) நேற்று வளர்த்த

2990cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தத்திற்கு அச்சுறுத்தல்களாக அமைவது இன்று நடக்கும் சம்பவங்கள். இவைகளை அச்சுறுத்தல்களாக ஏற்றுப் பழகாமல் இறைவனின் பிரசாதமாக ஏற்றுக் கொள்ளும் பிரசாத புத்தி! (3) அன்றாட வாழ்வில் தோன்றிய மகிழ்வூட்டும், பெருமை கொள்ள வைக்கும் சம்பவங்களை தன் திறமையால் வளர்ந்த தாகக் கருதாமல் இறைவனின் அருள்வடிவாக ஏற்று மீண்டும் அவனுக்கே சமர்ப்பிக்கும், ஈசுவர அர்ப்பண புத்தி, இம்மூன்று சத்வ குணமென்றும், தெய்வசம்பத்தென்றும் அழைக்கப்படும். இதன் விரிவை பின்வரும் நெறிகளில் காணலாம்.

## தவிர்க்க வேண்டிய ரசோகுண எண்ணங்கள்

நேற்று நடந்த சம்பவங்களைப் பற்றியும், நாளை நடக்கப்போகும் சம்பவங்களைப் பற்றியும் மாறி மாறிச் சிந்தித்து, மன விறைப்பை, உருவாக்கும் எண்ணங்கள் ரஜோகுணம்! பயமும், தோல்வி மனப்பான்மையும் இவைகளுக்கு லகாரணம்! தோல்வி மனப்பான்மையால் பிறர்நலத்தில் வெறுப்பும், பய உணர்வால் ஒன்றிலிருந்து ஒன்றிற்குத் தாவும் மன உலைச்சல்களும் ரஜோகுணத்தின் பிரதிபிம்பங்கள்! இக்குணம் ஒருவனுடைய மனதில் திடீர் உற்சாகத்தையும் அவசர முடிவுகளையும் எடுக்கத் தூண்டுகோலாய் அமையும். இவ்விரண்டும் சரீரத்தின் தன்மைகளை உணராமல் அதைச் செயலில் இறக்கத் தூண்டுவதால் காலப்போக்கில் சரீரம் தளரவும், ஏற்கனவே தேடிவைத்திருந்த உடல் ஆரோக்கியம் சரியவும் தொடங்கும். சாதகன் இவ்வாழ்க்கைமுறைகளிலிருந்து, புத்திபூர்வமாக விடுவித்து சத்வகுணத்தின் பிரகாசங்களான சாந்த விருத்தி, பிரசாத புத்தி, ஈஸ்வர அர்ப்பண பாவம் முதலியவற்றை மேற்கொள்ள வேண்டும்!

## மூன்றுவது ரகம் தமோகுணம்

உறக்கத்தை உயர்ந்த ரக சுகமாகக் கருதி, எதைப் பற்றியும் அறிய முயற்சிக்காமல், உணவும், உடற்போதையும் போதுமானதென்ற லட்சியத்தோடு அவையிரண்டையும் பிறர் உழைப்பில் பெற நினைக்கும் இவ்வெண்ணங்கள் தாமசத்தின் தடித்த பிரதிபிம்பங்களே! இவர்கள் மனத்திலும் சிந்தனைகள் தோன்றும்!—ஆனால் ஒரு குறிப்பிட்ட தெளிவை நோக்கிச் செல்லாமல், நேற்று அடைந்த சுகத்தை இன்றும் சிரமமில்லாமல் பெறுகின்ற வழியை மட்டும் நினைத்துத் தீர்த்துவிட்டு மீண்டும் உறங்கப் போவதற்குத் துணையாய் அமையும். இவர்களை பகலில் ஒளியிருந்தும், பார்க்கமுடியாத கோட்டான்களுக்கு ஒப்பாகக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



இம்மூன்று விதமான எண்ணங்களில் முதல் வகை எண்ணங்களையே தன் சுபாவமாக மாற்றிக்கொண்டு, பின்னுள்ள இரண்டையும், மிகுந்த சிரத்தையோடு அவைகள் மனம் என்னும் வீட்டிற்குள் புக முயற்சித்தாலும்கூட தூரத் தள்ளிவைத்து அகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது ஆந்தர செளசம் என்பதாகும்! புறத் தூய்மையின் அவசியத்தை ஒருவன் உணர்ந்து கொள்ள வைக்கும் வளர்ச்சி, இவ்வகத் தூய்மையை பெரிதும் சார்ந்திருக்கிறது. இதை மறுத்து புறத்தூய்மை பெருக்குவதில் பெருமைகொண்டு, அகத்தூய்மையை மறந்தால், நாமெல்லோரும், லெளகீகம் என்னும் சிறையில், ஆரோக்கியமான கைதிகளாகவே வாழ்வோம்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தைர்யம் - ஒரு நிலைப்பட்ட மனம்

மனம் என்னும் கருவி நம்மிடத்தில் இருப்பதால் நமக்கு மனிதர்கள் என்று பெயர்! மனத்தின் வடிவம் எண்ணங்கள்! கண் மற்றும் புலன்களின்வாயிலாக, நாம் பெற்ற பொருட்களின் சூக்ஷ்மமான தன்மைகளை அந்தரங்கமாக தரித்துக்கொண்டால் அதற்கே எண்ணம் என்று பெயர்! ஒரு எண்ணத்தைத் துணையாகக்கொண்டு எண்ணற்ற எண்ணங்களை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றல் இந்த மனமென்னும் அந்தக் கரணத்திற்கு இயற்கையாக உண்டு. எண்ணங்களின் பரிணாமத்திற்கு ஒவ்வொருவருடைய கடந்தகால அனுபவங்களும், ஆசைகளும், ஏக்கங்களும், புதிதாகப் பார்த்த, கேட்ட, பொருளின்மீதுள்ள சுகம்பெறும் நம்பிக்கைகளும் எரியும் நெருப்பிற்கு எண்ணெய் போல் துணைசெய்யும், நாம் வாழும் உலகம் எண்ணிக்கையில் நிச்சயத்துச் சொல்ல முடியாத அளவிற்கு, அநேக பொருட்களைக் கொண்டதாயும், ஒருவன் கற்பனையில் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், இன்னும் ஒரு புதுக் கற்பனையை உருவாக்கிக் கொள்ள வழிகாட்டுவதாயும் அமைந்திருக்கிறது! இப்படிப் பட்ட உலகில் ஒருவனுடைய மனம் குறிப்பிட்ட ஒழுக்கத்திற்கு எளிதில் தன்னை வசமாக்கிக்கொள்ளும் என்பது பகற்கனவாக ஒரு பாமரனுக்குத் தோன்றும்! தோற்ற அளவிலான இந்தத் தோல்வி மனப்பான்மையை இயற்கையானதாக ஏற்றுக் கொண்டு, சலிப்படைவதையே தன் சுபாவமாக ஏற்றுக்கொண்டால்—அவனுக்கு சம்சாரி என்று பெயர்! அதற்கு மாறாக, மன ஒடுக்கத்தை அவசியமென்று கருதி,— 'மனம் என்னும் கருவி, ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நமக்குக் கிடைத்தது —ஆகவே அதனிடத்தில் நாம் ஒரு ஸ்திரத்தையும் ஒழுக்கத்தையும் உருவாக்குவது அவசியம்'; என்று உணர்ந்து, அதற்கான முயற்சிகளை தெளிவோடு பின்பற்றுபவனுக்கு சாதகன் என்று பெயர்! இதுவரை நாம் கண்ட, காணப்போகும் வாழ்க்கைநெறிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் சாதகனுக்கு உரியதால், நம்மை நாமே சாதகர்களாக எண்ணி, மனத்தின் தன்மையை புரிந்து கொள்ள முயற்சிப் போம்! எண்ணங்களில் தொடர்ச்சியான ஓட்டமே மனம் என்று கண்டோம்! இத்தொடர்ச்சியில், இயற்கையாகப் பல பொருட் கள் ஊடுருவியிருக்கும்! இதனால் மனதிற்கு எந்தத் கெடுதலும் இல்லை! ஆனால், அப்படி ஊடுருவிச் செல்லும் பொருட்களில், சிலவற்றை மற்றும் தேர்ந்தெடுத்து, தான் அடைய விரும்பும் பொருட்களாக மாற்றி, அதன் தன்மைகளை, தன் எண்ணத்தால் உயர்த்தி, அதற்கும், தனக்கும் ஒரு உறவை உருவாக்கிக்கொண்டு அந்த உறவின் வெளியீடாக மீண்டும் அதைப் பற்றிச் சிந் தித்து, அதை அடைய எடுத்துக்கொள்ளும் செயல்களுக்கு மூல மாய் அமைந்த சிந்தனைகளையே, சமய இலக்கியங்கள் குறிப்பாக மனமென்று கருதுகின்றன! மனம் என்னும் கருவியில் எந்தக் குறையுமில்லை! அதில் புகுந்த பொருட்களில் ஆக்கிரமிப்பையே பிரச்சினையாகக் கருதுகிறோம்! இந்த உண்மையை நாம் அனை வரும் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பலன் பெற்றால் நம் ஆன்மீக வெற்றிக்கு அது பெரிதும் துணைபுரியும். நம்மில் பெரும்பாலோர், ஆன்மீக வளர்ச்சி என்ற பெயரிலும், மன அடக்கம் என்ற பெய ரிலும், மனம் என்னும் ஒரு சாதாரண கரணத்தை, அர்த்த மற்ற சிக்கல்களுக்கு உள்ளாக்கி தேவையற்ற விறைப்பையும், துன்பத்தையும் வலிந்து வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள்! இப் படிப்பட்ட சாதகர்களின் தோல்வியால், ஆன்மீகம் என்ற சொல்லைக் கேட்டவுடன், ஒரு வித்தைக்காரன், உடலை வளைத் துப் பழகுவதுபோல், ஒரு சாதகன் மனதை வளைத்துப் பழக வேண்டுமென்றும், அப்படி வளைக்கும் வல்லமை கொண்டவர் களே, ஆன்ம உலகில் புகமுடியும் என்றும் பிறர் கருதி, ஆன்ம லாபத்தை ஒரு அச்சத்தோடும், அதை தூரவைத்திருக்கும் வரைக் கும்தான் உலகோடு வைத்திருக்கும் உறவுக்கு அழிவில்லை என்றும் கருதி, வெற்றிகரமாக நழுவிக்கொண்டோர்கள் பலரை நாம் காண்கிறோம்!

மன அடக்கம் என்பது 24 மணிநேரமும் ஒரே ஒரு சிந்தனையை பிடித்துக் கொண்டிருப்பதல்ல! இப்படியொரு விநோதமான வெற்றியை ஒரு சாதகன் அடைய முயற்சிப்பானேயாகில், அவன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும், மேற்கத்திய நாட்டார் தந்த சுவை யான பெயரே, Insanity என்று அழைக்கப்படும், சித்தப் பிறழ்வு.

மாறாக மனத்தின் தன்மையையும் அது தான் ஏற்றுக் கொள்ளும் எண்ணங்களோடு உருவாக்கிக்கொள்ளும் உறவின் தன்மையையும் சரியாகப் புரிந்துகொண்டு, எண்ணங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிக்காமல், அவ்வெண்ணங்களால் அடையவிரும்பும் நோக்கங்களை, ''பல'' வற்றிலிருந்து ''ஒன்று''க் குறைத்துக்கொண்டால் அதற்கே மனக் கட்டுப்பாடு என்று பெயர்! இதையே கொள்கைப்பற்று என்றும், லட்சியப் பிடிப்பு என்றும் ஒரு நிலைப்பட்ட மனமென்றும் பலவாறாகக் கூறுகிறார்கள். இந்த உண்மையை இன்னும் சற்றுக் கருத்தோடு பார்ப்போம்! சலிப்படையாமல் சிந்தித்துப் பழகுங்கள்! எண்ணங்களின் தொடர்ச்சியான ஓட்டம்—மனம்! சரி! எண்ணம் என்பது நாம் காணும் பொருட்களின் மனச்சாயல்; இந்தச் சாயலுக்கும் மனம் என்று பெயர்: இச்சாயலை ஏற்றுக்கொள்ளும் கருவிக்கும் மனம் என்று பெயர்! உதாரணமாக என் வாழ்க்கையில், இந்த நிமிடம்தான் முதன்முதலாக ஒரு பொருளைப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம்! இப்பொழுது, நான் பார்த்த புதுப்பொருள் பற்றிய இரண்டாவது எண்ணம் என் மனதிற் சாத்தியமில்லை. காரணம் இதனுடைய தன்மை என்னவென்று எனக்குத் தெரியாது. ஏனெனில் நான் இன்னும் இதை அனுபவத்திற்குரிய பொருளாக மாற்றவில்லை! இதனால் ''ஞாபகசக்தி'' என்னும் எண்ணச் சுரங்கத்திலிருந்து இதற்கு துணையாக ஒரு எண்ணத்தை உருவி, பார்த்த பொருளை இரண்டு எண்ணங்களாலோ, இரண்டிற்கு மேற்பட்ட எண்ணங்களாலோ சுற்றிச் சுற்றி வரச்செய்ய முடிவதில்லை. இந்த நிலையில் என் மனம் என்னும் கருவியை, இப்புதிய பொருளைப் பொறுத்தவரையில் வளர்த்துக்கொண்ட கட்டுப்பாட்டிற்கோ, ஒழுக்கத்திற்கோ, நான் செலவழித்த சக்தியும், காலமும் எவ்வளவு? இப்புதிய பொருளுக்கு 'A' என்று பெயரிடுவோம். நான் என் நெருங்கிய நண்பரிடம் சென்று ''நண்பா, 'A' என்ற பொருளைப் பற்றி நான் சிந்திப்பதே இல்லை! என் மனத்தை அச்சிந்தனையிலிருந்து முற்றாகக் கட்டுப்படுத்தி விட்டேன்!'' - என்று டம்பம் அடிப்பதாக வைத்துக்கொள்வோம்! நண்பர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்! பக்கத்தில் உள்ள பைத்தியக்காரர்கள் நிலையத்திற்கு அழைத்துப்போகும் அளவிற்கு நாம் பதப்பட்டுவிட்டதாக நினைப்பார்! இந்த நிலைதான் இன்று பெரும்பாலான ஆன்மீகச் சந்தைகளிலே நமக்கு விநியோகமாகி வரும் மனக்கட்டுப்பாடு முறைகள்!

மேலே சொன்ன உதாரணத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய உண்மை; மனக்கட்டுப்பாடு அல்லது ஸ்திர புத்தி என்பது, ஒரே பொருளை ஒரே எண்ணத்தால் சிறைப்படுத்தி. ஒரு நாள் முழுவதும் அதே எண்ணத்தில் லயித்துவிடுவது என்பது அல்ல! மாறாக மனம் யாருடைய தூண்டுதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி, தன் கடந்தகால அனுபவங்களிலோ, அல்லது பழக்கத்திலோ, ஒரு பொருளேயும் அதனுல் விளேந்த சுகத்தையும் மீண்டும் அசைபோட ஆரம்பித்து.அந்த அந்தரங்க அசைவுகளே எண்ணச் சிதறல்களாக வெளிக்காட்டிக் கொண்டிருந்தாலும், அல்லது பெற்ற ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை மீண்டும் வலுப்படுத்த, விரிவுபடுத்த சிந்தனேகளே உமிழ்ந்து கொண்டிருந்தாலும், அந்த அசைபோடும் நிலேயில் இருந்து மனதை விடுபடுத்தி உலகில் நாம் பெறும் பொருட்களோ அனுபவமோ, ஆத்மா என்ற மெய்ப் பொருளின் துணேயில்லாமல் இருப்பதில்லே!-ஒரு பொருளே பார்க்கவும் அனுபவிக்கவும் சித்ரூபமாகிய ஆன்ம தத்வம் இல்லாவிட்டால் இயலாது,-என்ற உண்மையை விசாரபலத்தால் மீண்டும் மீண்டும் ஸ்திரப்படுத்தி, ஆத்ம குணத்தை தன் குணமாக ஏற்றுக் கொண்டதன் மூலம் மனம் பிற பொருட்களின்மீது பழக்க தோஷத்தால் வைத்திருந்த பற்றுதல்களிலிருந்து பெறும் விடுதலேயே, மன ஒழுக்கம் அல்லது ஸ்திரபுத்தி என்ற ஸ்தைர்ய பாவம்!

இந்த விடுதலே நிலேயானதாக இருந்தால், அவனுக்கு சித்தன் என்று பெயர்! இன்னும் முயற்சிக்கும் நிலேயில் இருந்தால் அவனுக்கு சாதகன் என்று பெயர்! எது சித்தனின் லட்சணமோ, அது சாதகனுக்கு லட்சியம்! எது விடுதலேயின் குறியோ, அது விடுதலேவிரும்பிக்கு குறிக்கோள்! சித்தன் பெற்ற தெளிவும், விடுதலேயும் எதுவென்று தெரியாமல், ஒருவன் சாதனேயில் இறங்கினுல் அது வேதனேயாகவே முடியும்!

* * *

98451

# ஆத்ம விநிக்ரஹம் அல்லது அறிவின் பலம்!

ஆத்மா என்ற சொல், நம் சமய நூல்களில் பல அர்த்தங்களோடு உபயோகிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்! அச்சொல்லிற்குண்டான உண்மையான பொருள் எது? அதற்கும் அதைப் பற்றி விளக்கம் அறிந்துகொள்ள முயற்சித்த ஒரு மனிதனுக்கும் என்ன உறவு? அந்த உறவு எத்தன்மை உடையதாய் இருப்பினும், அந்த தன்மையை ஒருவனிடத்தில் உள்ள காரணங்களில் எது அறியமுடியும்? அப்படி அறிந்து கொண்டால் அதனால் விளையும் பயன் என்ன?— என்பவற்றிற்குண்டான விளக்கங்களே சமயநூல்களில் சாரமாக அமைந்திருக்கின்றன!

நமக்கு கிடைத்த முந்திய சந்தர்ப்பங்களில் ''சாதனைகளின்'' அம்சங்களாக பல வாழ்க்கை நெறிகளைப் பார்த்தோம்! கடைசிச் சந்தர்ப்பத்தில் ''ஸ்தைர்யம்'' என்ற நெறியின் விளக்கமாக, மனதை ஒருநிலைப்படுத்தும் அவசியத்தையும் ஒரு நிலைப் படுத்துகின்றகின்ற முயற்சிகளின் தன்மையையும் கண்டோம்!

மனம் என்பது ஒரு பாத்திரம் போன்றது! அதில் தங்க வைத்துக்கொண்ட அனுபவங்களின் படிமங்களுக்கும், எண்ணங்களுக்கும் மனமென்றே பெயர்! ஒரு மனிதனுடைய வாழ்க்கையில், எல்லா அனுபவங்களும் பிறர் தந்தவை அல்ல! உலகைப்பற்றியும், உலக வாழ்க்கையைப் பற்றியும், தன்னைப் பற்றியும் தன் வாழ்க்கையைப் பற்றியும், வைத்துள்ள விமர்சனங்கள் யாவும் பிறரால் துணிக்கப்பட்டன அல்ல! ஒவ்வொருவனுடைய மனத்திலும் இந்த உலகை உபயோகித்து அனுபவங்களைப் பெறுவதிலும், பெற்ற அனுபவங்களை துணையாகக்கொண்டு, வாழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையைப் பற்றி ஒரு முடிவையோ விமர்சனத்தையோ பற்றிக்கொள்வதிலும், ஒரு தனித்தன்மையைக் காண்கிறோம்! இந்த அனுபவங்களுக்கும் விமர்சனங்களுக்கும் தூண்டுகோலாயும், இது சரி! இது தவறு, இது ஏற்றுக்கொள்ளத்தக்கது—இது நிராகரிக்கத்தக்கது—என்று, ஒரு நீதிபதியைப் போல் செயலாற்றுவதும் மனமே:

மனத்தின் நிகழ்வுகளைக் பற்றி ஆராய்ந்த முன்னோர்கள், மனத்தை மூன்று நிலைகளில் நிறுத்தி ஆராய்ந்திருக்கின்றனர்!

1, மனம் என்னும் சாதாரணக் கருவி. இது சூக்ஷ்ம பூதங்களின் விகாரம். ஒன்றும் நிரப்பப்படாத பாத்திரத்திற்கு ஒப்பிட்டுக்கொள்வோம்,

2. இப்பாத்திரத்தில் நிரப்பப்பட்ட சரக்குகள்! இவைகளையே தேடிக்கொண்ட ஞானம் என்றும், சுவைத்துக்கொண்ட அனுபவம் என்றும் கூறலாம். சுருக்கமாக கடந்த காலத்தில் கருவூலகங்கள். இதற்கும் மனம் என்றுதான் பெயர்.

3. நிரப்பப்பட்ட சரக்குகளில்—சில தாங்கிக்கொள்ளும் பாத்திரத்திற்கு (அதாவது மனதிற்கு) ஒரு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் தந்தால், மீண்டும் அதே சரக்குகளை நிரப்பிக்கொள்ள மனத்திடையே தோன்றிய முயற்சி! அல்லது தூண்டுதல். இத்தூண்டுதல்களுக்கும் மனமென்றே பெயர்!

இதுவே மனத்தின் செயல்வடிவம்! மனிதன் போராடிக் கொண்டிருப்பது நமக்குள் ஒளிந்திருக்கும் இந்த செயல்வீரனோடுதான்! இவன் சேகரிக்க விரும்பும் பொருட்களான அனுபவத்தையும் எண்ணத்தையும், குறைக்காமல் விநியோகம் செய்து கொண்டிருந்தால்—இவன் நமக்கு நல்லவன்! தன் தேவைகள் எங்கு பூர்த்தியாகவில்லையோ அங்கு இந்த மனம் உருவாக்கும் போராட்டத்திற்கே, பொதுவாக "கவலை" என்று சொல்லி விடுகிறோம், மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் நம்மைக் கவலைப் படாமல் வைத்திருப்பது மனம் என்றும் அதனோடு ஒத்துழைத்து அதற்கு தேவையானதைத் தருவது இயற்கையான கடமையென்றும்தோன்றும்: இதில் இரண்டு விதமான தேவைகள் உண்டு! ஒன்று சுகம் வேண்டும்! மற்றொன்று சுகத்தைப் பெற ஒரு பொருள் வேண்டும்! இவ்விரண்டில் முதல் தேவை எல்லோரிடத்திலும் காணப்படுவது! மாற்றமில்லை, இரண்டாவதாகக் கேட்ட "சுககாரணி" யான ஒரு பொருள் வேண்டும் என்பதில் நாம் வேறுபடுகிறோம்! எது எனக்குச் சுகம் தருமோ அது உங்களுக்குத் தராது! எது உங்களுக்குத் தருமோ அது எனக்குத் தராது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குதான் நாம் சிறிது சிந்திக்கவேண்டும்! தேவையின் ஒரு அம்சத்தில் நம் அனைவரையும் ஒன்றுபடுத்தியும் மற்றொரு அம்சத்தில் நம்மை பிரித்தும் வைப்பது — மீண்டும் இந்த மனமே இந்நிலையில் மனத்தினுடைய இந்தச் செயலுக்கு நம் முன்னோர்கள் தந்த பெயரே புத்தி என்பதாகும்! ஒரே மனம் ஆற்றும் வெவ்வேறு செயல்களுக்கு வெவ்வேறு பெயர்கள்!

புத்தி ஆற்றும் பிரதானமான வேலை ''சுககாரணிகள்'' என்றழைக்கப்படும் உலகப் பொருட்களின் தன்மைகளையும், இருப்பிடத்தையும் உணர்த்தி, புலன்களைச் செயலில் இறக்கி அதைப் பெறவைப்பதே!

அதனால் இந்தப் புத்தியினிடத்தில், உண்மையான சொரூபத்தையும், அதன் இருப்பிடத்தையும் காட்டிவிட்டால், ஏற்கனவே எதன்மீது பற்று வைத்திருந்ததோ அதனிடமிருந்து விலகி, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பொருளைப் பற்றி சிந்திக்கத் துவங்கிவிடும்! சிந்தனை வலுப் பெற்றவுடன் அது செயலாக மாறும்!

''இதுதான் சுகத்தின் தன்மை', என்று இந்த புத்திக்கு உணர்த்தியது யார்? எதனுடைய ஊடுருவல்களைத் துணையாகக் கொண்டு இந்த புத்தி, வெளி உலகில் சுகத்தைத் தேடுகிறது?

இந்தக் கேள்விகளை, நம்மில் ஒருவரைப் பார்த்துக் கேட்டால் நிச்சயமாக, உலக இயல்பே பொருள் மூலம் சுகம் காண்பதுதான் என்றும், எங்களுடைய அனுபவம் இதுதான் என்றும் சட்டென்று பதில் கூறிவிடுவார்.

ஆனால் சுகத்தின் இருப்பிடத்தை காண்பதே, நம் சமயக் குரவர்களின் ஆராய்ச்சிக்கு அஸ்திவாரமாக அமைந்ததால், அவர்கள் தரும் பதில் வேறுவிதமாக இருக்கிறது!

அவர்கள் ஆராய்ச்சியால் விளைந்த உண்மை! சாதாரண மனிதனின் ''அறிவிற்கு துணைநிற்பது அவனிடமுள்ள அறியாமையே'' — என்பதாகும். நாம் எதை நம் அறிவின் செறிவு என்று கருதி இறுமாப்படைகிறோமோ அதை அவர்கள் அறியாமையின் விவகாரம் என்கின்றனர்!

இது உண்மைதானா என்று பார்ப்போம்!

புத்திக்குப் பொதுவான வேலை, தனக்கும் தான் விரும்பும் சுகத்திற்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதே! அந்த இடைவெளியை குறைப்பதன் வாயிலாக தானும் சுகமும் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி ''நான் சுகமாய் இருக்கிறேன்'' என்ற நிலை கிடைக்கிற தென்பது மனித அனுபவம்! இந்த ஒற்றுமைக்குத் துணையாய் இருப்பது மனமும், அதன் அனுபவங்களும்! பொதுவாக அனுப வம் என்பது ஏதேனும் ஒரு பொருளைச் சார்ந்தே இருக்கவேண் டும்! ஒரு அனுபவத்தில் குறைந்தது மூன்று அம்சங்கள் இருக்க வேண்டும்! ஒன்று என் அனுபவம் என்று கூறவைக்கும் ''தன் உணர்வு'' அல்லது ''நான்'' என்ற நிலை, இரண்டாவது ''எத னைத் துணையாகக்கொண்டு அனுபவித்தோமோ அந்தக் கருவி அல்லது கரணம்!''—(மனம் - புலன்கள் போன்றன!) மூன்றாவது ''அனுபவிக்கப்பட்ட பொருள்!'' இதில் எது குறைந்தாலும் அனுபவம் என்பது சாத்தியமில்லை, கற்பனை அனுபவங்களுக்குக் கூட ஒரு கற்பனைப் பொருள் வேண்டும்! ஆனால் கரணங்களும், கற்பனை செய்யும் கர்த்தாவும் யதார்த்தமாக இருக்கவேண்டும்.

மனிதன் தான் என்ற சுயநினைவோடும், தன்னிடத்தில் மனம் என்ற ஒரு கருவி உண்டு என்ற நினைவோடும் செயலாற்றும் காலத்தையே ஜாக்ரத அவஸ்தா அல்லது விழிப்பு நிலை என்று அறிந்து வந்திருக்கிறோம்! இதையே நாம் அன்றாட வாழ்க்கை யென்றும் அழைத்துப் பழகியிருக்கிறோம்! மனிதன் தன் கவ னத்தைச் செலுத்துவது முற்றிலும் வாழ்க்கையின் இந்தப் பகுதிக்கே! ஆனால் வாழ்க்கை இன்னும் சில அனுபவ நிலைகளைக் கொண்டிருக்கிறது! அதுவே கனவும், உறக்கமும்! கனவு என்பது விழிப்பு நிலையில் பிரதிபிம்பமாக ஏற்றுக்கொள் வோம். அதிக விளக்கங்களை அடுத்துவரும் சந்தர்ப்பங்களில் காண்போம். ஆனால் உறக்கம், இவ்விரண்டு பிரதான அனுபவ நிலைகளிலிருந்தும் மாறுபட்டது! அந்நிலையில் பொருட்களின் பரி ணமமும், பிரசன்னமும் இல்லை! கரணங்களின் செயல்க ளும் இல்லை. விழிப்புலகில் செயலாற்றிய கர்த்தாவும் இல்லை. இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் நாம் தேடும் சுகம்! விழிப்புலகில் என்ன பொருட்களின் வாயிலாக சுகத்தை தேடினோமோ, அந்தக் காரணிகள் இல்லை! ஆனால் சுகம் உண்டு! இதை மையமாகக் கொண்டே, ஆனந்தம் என் பது ஒருவனுடைய சுயநிலை என்று சமயம் போதிக்கின்றது! இந்த உண்மையை, விழித்தெழுந்ததும் புத்தி உணரவேண்டும் அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து, தான் பார்க்கும் பிற பொருட்கள் சுக காரணங்கள் அல்ல என்று உறுதிப்படுத்திக்கொண்டு, ஆத்ம சுகத்தில் நிலை பெற்றால் அதற்கு ஆத்ம விநிக்ரஹம் என்று பெயர்! அதாவது 'புத்தி'—தான் பெற்ற ஞானத்தில் ஸ்திரப்பட்டு வெளியில் போவதில்லை என்று அர்த்தம். இதையே புத்திக் கட்டுப்பாடு என்றும் சொல்வர்!

ஆனந்தம் சுயரூபம் என்பது நேற்றுப் பிறந்த ஞானம்! ஆனந்தம் வெளியில் உண்டு என்பது பல பிறவிகளில் நம்மிடமுள்ள தவறான ஞானம்! இத்தவறை ஒரு மனிதன் உடனே திருத்திக்கொள்ள முடியாது! ஆகவே ஆத்ம விநிக்ரஹம் என்ற விழிப்புணர்ச்சி, ஒரு சாதனையாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உண்மை உணர்ந்தால் உயர்நலம் பெறலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரியார்தேஷி வைராக்யம் - புலனடக்கம்

இதுவரை ஸ்தைர்யம், ஆத்ம விநிக்ரஹம் என்ற இரண்டு நெறிகளின்மூலம் மன ஒழுக்கத்தையும், எப்படி அவ்வொழுக்கம், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட லட்சியத்தால் உருவாக்கப்பட வேண்டியது என்பதையும் பார்த்தோம்! இனி, மனதின் செயல்களுக்கு தூண்டுதல்களாய் உள்ள புலன்களின் செயல்களையும், அச்செயல்களில் நாம் உருவாக்கிக்கொள்ளவேண்டிய ஒழுக்கத்தையும் அதன் அவசியத்தையும் காண்போம்,

இந்திரியம் என்ற சொல்லுக்கு புலன் என்பது பொருள்! வெளி உலகை அறிவதில் நமக்குப் பிரதானமாக உதவிசெய்பவை இப்புலன்களே! புற உலகோடு நாம் வைத்துக்கொள்ளும் உறவிற்கும் இப்புலன்களே பாலமாக அமைந்து செயல்படுகின்றன! இப்புலன்களை ஞானேந்திரியங்கள் என்றும், கர்மேந்திரியங்கள் என்றும் இரண்டு வகைப்படுத்தி, அவைகளின் செயல்களை நமக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். இங்கே ஒரு கருத்தை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். பார்ப்பதற்கும், கேட்பதற்கும், இப்புலன்கள் நமக்கு அவசியமானதாக இருந்தாலும், இப்புலன்களை நம் கண்களோ, செவியோ, பார்க்கவோ, கேட்கவோ முடியாது! புலன்கள் சூட்சும பிரபஞ்சத்தின் விகாரங்கள்! உடலும் உடலுறுப்புகளும் ஸ்தூல பிரபஞ்சத்தின் விகாரங்கள்! ஆனதால் ஸ்தூல பிரபஞ்சத்தின் துணைகொண்டு, சூட்சுமத்தின் தன்மைகளை பாஹியப் பொருட்களாக அறிந்துகொள்ள இயலாது! நாம் 'கண்' என்று அழைக்கும் மாமிச விகாரம் 'கண்' என்றும் புலனுகாது! ஆனல் மாம்ச விகாரமாகிய கண்ணை தனக்குரிய இடமாகக் கொண்டு கண்ணிந்திரியம் செயல்படுகிறது! இதேபோல் பிற இந்திரியங்களும்!

கண், காது, மூக்கு, நாக்கு தோல் என்னும் உறுப்புகளில் மறைவாய் இருந்து புற உலகில் உள்ள பொருட்களின் தன்மைகளாகிய சப்தம், ஸ்பரிச, ரூப, ரஸ கந்தங்களை நம் மனதிற்கு கொண்டுவந்து சேர்ப்பிப்பதால் இவைகளுக்கு ஞானேந்திரியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் என்றும், அப்படி கிரஹிக்கப்பட்ட பொருட்களில் 'தேவை' யானவற்றைத் தேர்ந்தெடுத்து, அதைப் பெற முயற்சிக்கின்ற செயல்களில் இறங்குவதால், கை, கால், வாய், உற்பத்தி ஸ்தானம், வெளிக்கிளம்பும் உறுப்பாகிய ஐந்தினிடத்திலும் மறைந்திருந்து செயல்படுவது கர்மேந்திரியங்கள் என்றும் பெயர்பெற்றன! கர்மம் என்றால் தொழில் அல்லது செயல் என்று அர்த்தம்! மனிதனுற்றும் ஐவகை உடற்செயல்களுக்கு காரணிகளாக இருப்பதால் இவற்றிற்கு கர்மேந்திரியங்கள் என்று பெயர்! இனி இவ்வுறுப்புகளிடத்தில் ஒழுக்கமும் இவை சுட்டிக்காண்பிக்கும் பொருட்களிடத்தில் வைராக்கியமும் ஏன் அவசியம் என்பதைப் பார்ப்போம்!

இப்படைப்பில் காணப்படும் எல்லா ஜீவராசிகளுமே, தன்னை சுற்றியுள்ள பொருட்களை அறிவதிலும், உணர்வதிலும், அப்படி அறிந்த உணர்ந்த பொருட்களில் தன் சுகத்திற்கு காரணமாக இருப்பவைகளைப் பெற்று அதை அனுபவிப்பதிலும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்வதும், அம்முயற்சிகளையே, பொதுவாக வாழ்க்கைப் போராட்டம் என்றும் கருதுவது இயற்கை. ஆனால் மனிதப் பிராணியினிடத்தில் புலன்களின் இருப்பை உணர்வதோடல்லாமல் மற்ற இரு உட்கருவிகளாகிய, மனம் புத்தியின் இருப்பையும் ஏற்றுக்கொள்வது அவசியம்! ஆரம்பத்தில் புலன்களைத் துணையாகக்கொண்டு இவ்வுலகை நாம் அறிந்து வந்தால், அந்த அறிவே முடிவான அறிவென்றும், அவ்வறிவின் துணைகொண்டு நாம் பெற்ற சுவையான அனுபவங்களே 'இன்பம்' என்றும் கருதி வாழ்ந்ததனாலே, பின்னால் ஒரு காலத்தில் மனித சிந்தனையாலோ, விஞ்ஞான வளர்ச்சியாலோ, நம் புலன்களால் பெற்ற ஞானம் முடிவானது அல்ல என்ற உண்மை புலப்படும் பொழுது, அதை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் தோன்றுகிறது!

நாம் காண்பதே முடிவான உண்மையாக இருந்தால் விஞ்ஞான மெய்ஞான ஆராய்ச்சிகள் அவசியமில்லாதவை! ஏனெனில், ஆராய்ச்சிக்கு முன்னும் நாம் எதைக்கண்டும், அனுபவித்தும் வருகிறோமோ, அதையேதான் ஆராய்ச்சியின் முடிவும் தெரிவிக்கப்போகின்றன! ஆனால் உண்மை அப்படியில்லை. இன்று நாம் 'எது' ஒரு பொருளின் அடிப்படைக்குணம் என்று கருதுகிறோமோ, அந்தக்கருத்து நாளைய ஆராய்ச்சியில் மறுக்கப்படுகிறது! விஞ்ஞானம் வளர்கின்ற விதம் இதுதான்! இருந்தபோதும் விஞ்ஞானத்தில் வைராக்கியம் என்ற சொல் சேர்க்கப்படவில்லை! ஆனால் மெய்ஞானத்தில் அது ஒரு நெறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது! ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொருளைப் பார்த்த மாத்திரத்தில் அதன்மீது நாம் ஏற்படுத்திக்கொள்ளும் சிந்தனைக்கு கவர்ச்சி என்று பெயர்! கவர்ச்சியில், விவேகத்திற்கோ, விகாரத்திற்கோ இடம் இல்லை. நம்முடைய முன்னைய அனுபவங்களைத்துணையாகக் கொண்டு நாம் புதிதாகப் பார்க்கப்பட்ட பொருளின்மீது வைத்துள்ள நம்பிக்கையே கவர்ச்சியாகும். இக்கவர்ச்சிக்குட்பட்ட பொருளை உபயோகித்து அதனுல் பெற்ற பலனைத் திரும்பவும் பெறவேண்டும் என்ற ஆசையோடு சிந்திப்பது 'பழக்கம்' எனப்படும். மீண்டும், மீண்டும் ஒரேபொருளை நாம் அனுபவத்தில் கொண்டு வந்தால் அந்தப்பொருளின் குணம் அல்லது அது நம் இந்திரியங்களிடத்தும் மனத்தினிடத்தும் விட்டுச்செல்லும் ஒருவித ஏக்கங்களையே தேவை என்கிறோம்! தேவையைத் திருப்திசெய்துகொள்வது மனித வாழ்க்கையின் சாரமாக அமைந்துவிடுகிறது! அன்ருட வாழ்க்கையில் நம்மைக் கவரும் தத்துவங்களும் கோட்பாடுகளும் இந்த தேவைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே! எந்த தத்துவங்கள், கோட்பாடுகள் நம் தேவைகளுக்கு ஒரு நியாயம் கற்பித்து, அதற்கேற்ப வழிமுறைகளையும் கற்றுத்தருகிறதோ அதை விரும்பி ஏற்றுக்கொள்வதிலும், நம் தேவைகளை ''அவசியமற்றதென'' வேருெரு கோணத்திலிருந்து உபதேசிக்கும்பொழுது, அந்த தத்துவங்களின் மீது வெறுப்பு புலன்களால் ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது புலன்தரும் சுகங்களே முக்கிய சுகம் என்று பழக்கதோஷத்தால் ஏற்றுக்கொண்ட மனத்திற்கு இயற்கையானதுதான்! நம் தேவைகளுக்கு நாம் தேடிக்கொள்ளும் ஒரு வஞ்சகமான நியாயமே லௌகீகத்தின் மீது நாம் வளர்த்துக்கொள்ளும் மோகத்திற்குக் காரணம்! லௌகீகத்திற்கும் ஆன்மீகத்திற்கும் அடிப்படை நோக்கம் மனித சமுதாயத்தை உயர்த்துவதே! ஆனுல் இரண்டும் இரண்டு தனித்தனி வழிகளைப் பின்பற்றுகின்றன! லௌகீகம், தேவைகளை பூர்த்திசெய்வதில் தன் முயற்சிகளைக் காட்டுகிறது! ஆன்மீகம் தேவைகளிலிருந்து மனத்திற்கு விடுதலை தருவதில் முயற்சியை ஊக்குவிக்கிறது. லௌகீகம் சுதந்திரத்தின் அஸ்திவாரம்போல் தோன்றினுலும், அது பந்தத்தின் விரிவாக்கம்! ஆன்மீகம் சுய கட்டுப்பாடு போல் முதலில் தோற்றமளித்தாலும், அதுவே உண்மையான சுதந்திரத்தின் சொரூபம்! இந்த வேறுபாட்டை உணர்ந்து அதன்மூலம் மனத்திற்கு மனிதன் தேடிக்கொண்ட விடுதலைக்கே புலன்சார் பொருட்களில் விடுதலை என்னும் இந்திரிய வைராக்யம் ஆகும்!

இந்த விடுதலை, புலன்களை அதன் செயல்களிலிருந்து ஒடுக்கி செயலற்ற புலன்களாக மாற்றுவதல்ல புலனடக்கம் என்

னும் அகவிடுதலே! உலகைப்பார்க்க மறுப்பதனுல் உண்மையைப் பார்த்துவிடலாம் என்று கருதுவது ஒரு விசித்திர ஞானமாகும்! நாதத்தை கேட்க மறுப்பதனுல், நாதாதீமான அமைதியைக் கேட்கலாம் என்பது ஒருவனுக்கு அமைதியின் சொரூபம் தெரியாத குறைதான்! அமைதி கேட்கப்படவேண்டிய பொருளல்ல! பார்க்கப்படவேண்டிய பொருளல்ல! அது அறிவால் அறியப் பட்டு மனத்தால் உணரத்தக்க ஒரு இருப்பு நிலே! சத்தம் அமைதிக்கு எதிரியல்ல! உலகம் உண்மைக்குப் போர்வையல்ல! படைப்பைப் பார்க்க மறுப்பதால் பரமன் நமக்கு காட்சி தர மாட்டான்! இது உண்மையாயின் ஒவ்வொரு பிறவிக்குருடர்களும், பரமதர்சிகளே! ஆனுல் உண்மை அதுவாக இல்லேயே! ஆத்மா சுகரூபம் என்பது அறிவு பெற்ற ஞானம்! உலகம் சுகமஸ்தானம் என்பது புலன்கள் தந்த தவருன செய்தி! இச்செய்திக்கு அடிமைப்பட்டு, சுகங்கண்டு, வந்தது மனம்! இந்த மனத்தை அறிவின் ஆளுகைக்கு உட்படுத்தி புலன்கள் தந்த செய்தியை மறுக்கவைக்கும் முயற்சியே வைராக்கியம் ஆகும்! விவேகத்தின் செயலேயே வைராக்கியம் என்கிருேம்! எங்கு விவேகம் இல்லேயோ அங்கு வைராக்கியமும் தோன்ருது! அதனுல் புலனடக்கத்தை உருவாக்குவதற்கு முதலாக, புலன்களே அடக்கும் மனதிற்கு ஒரு புதிய லட்சியத்தையும், அந்த லட்சியத்தை சுட்டிக்காட்டும் அறிவையும், ஒரு சாதகன் பெறமுயல்வது அவசியமானதும், நியாயமானதும் ஆகும்! அறிவை வளர்ப்போம்! ஆன்மாவைப்பெறுவோம்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனஹங்காரம் அல்லது அபிமானமின்மை

அஹம் என்றால் நான் என்ற அபிமானத்தையும் ''கார'' என்ற இறுதிச்சொல், அவ்வபிமானத்தின் தன்மையையும் குறிக்கும். மனிதன் வளர்த்துக்கொண்ட நான் என்ற அபிமானத்திற்குரிய தவறான ஐக்கிய பாவத்திலிருந்து மனதை விடுவித்து, எது நான் என்ற சொல்லின் உண்மையான அர்த்தமோ, அதிலிருந்து மனதை விலகிச்செல்லாமல் பார்த்துக்கொள்வது அனஹங்காரமாகும்!

ஒரு சாதகன் வளர்த்துக்கொள்ளும் சாதனைகளில், இது மிகவும் அவசியமானதும், மற்ற எல்லாச் சாதனைகளுக்கும் ஆதாரமானதுமாகும்! ஒரு மனிதனுக்கு நான் என்ற உணர்வு எதனோடு எதனிடத்தில் தோன்றுகிறதோ, அதனுடைய வெற்றி தோல்விகளே தனதாகவும், அதனுடைய வெற்றிக்கும் சுகத்திற்கும் உழைப்பது இயற்கையாகவும் இருக்கிறது! வளர்த்த வெற்றிகள் மீது ''தனது'' ''என்னுடையது'' என்ற அபிமானத்திற்கும் அஹங்காரம் என்றே பெயர்! இதைப்பொதுவாக கர்வம் என்பர்! ''என்னுடையது'' என்று சொல்வதற்கு ஒன்றுமேயில்லாதவனிடத்தில் கர்வம் தோன்றுவதில்லை! ஆதலால் அஹங்காரத்திற்கு மூலகாரணம் ''நான்'' ''என்னுடையது'' என்ற மனோபாவங்களும் அபிமானங்களுமே!

'நான்' என்ற அபிமானம் இல்லாத மனிதனே இல்லை! 'என்னுடையது' என்று சொல்ல வைக்காத வாழ்க்கையும் இல்லை. ஒரு சாதகன் சாதனைகளைச் செய்யும்பொழுது நான் என்கின்ற உணர்வில்லாவிட்டால், அதனால் விளையப்போகும் பலன் 'என்னுடையது' என்று சாதனை முடிவில் சொல்ல வழியில்லாவிட்டால் சாதனைகள் சாத்யமுமில்லை. சாதனைகள் அவசியமும் இல்லை. இது உண்மையானால் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய ''அஹங்காரம்'' எத்தன்மை கொண்டதாய் இருக்க வேண்டும் என்று அறிய முயற்சிப்பது அவசியமாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் சமயத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்த பல ஆன் மீக நெறிகளில் இது மிகவும் தலையாயதாக இருந்திருக்கிறது!

அஹங்கார உணர்வில் இரண்டு அம்சங்கள் இருப்பதாக கண்டோம். ஒன்று நான் என்னும் அபிமானம். மற்றொன்று என் னுடையது' என்ற அபிமானம். முயற்சிகளுக்கு முன்னைய அபி மானமும், கர்வத்திற்கு பின்னைய அபிமானமும் காரணமாகின் றன!

உண்மையில், இந்த இரண்டு அபிமானங்களுக்குள்ள பொருட்களை ஆராய்ந்து பார்த்தாலும் நாம் தொடர்ந்து ஆற்றி வரும் தவறுதான் தென்படுகிறதே ஒழிய, அஹங்காரத் திலும், மமகாரத்திலும் நம் விவேகம் தென்படவில்லை! கார ணம், எதை ஒருவன் ''என்னுடையது'' என்று சொல்கிறானோ அதே பொருளை ''நான்'' என்றும் சொல்லமுடியாது! இது என்னுடைய சட்டை, என்னுடைய வீடு, என்னுடைய பணம், என்னுடைய வாகனம் என்று அழைக்கும் பொருட்கள் யாவும் என்னுடையதாக இருந்தாலும் நானாக மாறிவிடுவதில்லை. நான் சட்டை, நான் வீடு, நான் பணம், நான் வாகனம் என்று யாரும் சொல்வதில்லை. நான் என்ற சொல்லை உபயோ கிப்பதில் இதுவரை நாம் கவனமாக இருந்துவிட்டோம்! இந்தக்கவனம் நம் உடலுக்கு வந்தவுடன், என்னுடைய சரீரம் என்ற அபிமானம் அடிக்கடிமாறி — ''நான் இளைத்தவன்'', ''பருத்தவன்'' என்ற அஹங்கார அபிமானமும் தொடங்கி விடு கிறது! இது விவேகமா? குழப்பமா? என்பதை நமக்கு நாமே ஆராய்ந்து தெளிந்துகொள்ள வேண்டும்! ஆராய்ச்சிக்குத் துணை யாக சமய இலக்கியங்கள் சில வழிகளை மட்டும் காட்டுகின்றன. நாம் பின்பற்ற வேண்டிய சிந்தனை ஒழுக்கங்களில் சிலவற்றை மட்டும் பார்ப்போம்!

1. எது உன்னிடத்தில் இருக்கிறதோ எது மறைந்தாலும் நீ மறைவதில்லையோ அது நான் என்னும் அபிமானத் திற்கு உரிய பொருள் அல்ல.

உதாரணம்: சட்டை என்னிடத்திலிருந்தது, நானும் இருந்தேன்! சட்டை கிழிந்தது! அதனால் ஒருவன் நானும் 'கிழிந் தேன்' என்று சொல்வதில்லை.

ஏனெனில் சட்டையில்லாதவனாக இப்பொழுதும் இருக்கிறான்!

அதேபோல் உடல் இருக்கிறது! நாமும் இருப்பதுபோல் உணர்வும் அபிமானமும் தோன்றுகின்றன! உடல் மறைந்தது. உடல்மீதுள்ள ''அபிமானம்'' தான் மறையுமே ஒழிய, நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவதில்லை. அதேபோல் ஐம்புலன்களும், அதன் தொழில்களும் நடைபெறுகின்றன! நாம் செயலாற்றுவதுபோல் நம் மனத்திற்கு அபிமானம் தோன்றுகிறது! புலன் ஒடுங்கிவிட்டன! நாமும் ஒடுங்கிவிட்டதாகக் கருதுவது குழப்பம்! அவைகளனைத்தும் ''என்னுடையது'' என்ற அபிமானத்திற்குரிய பொருட்கள் ஆனால் ''நான்'' என்ற அபிமானத்திற்குரிய பொருட்கள் அல்ல!

மீண்டும்! எண்ண வடிவங்களாக மனம் இருக்கிறது. இது என்னுடைய மனம். நான் மனம் அல்ல! நான் மனம் மட்டுமாக இருந்தால், பின் மனமில்லாத உடல்மீது நாம் வைத்திருந்த அபிமானம் தவறானது! உடல்மீது நான் வைத்திருந்த அபிமானம் சரியானால் முன்னைய அபிமானம் தவறானது! இரண்டு தவறுகளும் சேர்ந்து ஒரு உண்மையை உருவாக்கப் போவதுமில்லை. மேலும் மனமும், உடலும் இருப்பதை உணராத உறக்கத்தில் நான் என்ற ''அபிமானம்'' இல்லை! ஆனால் நான் என்ற ''நிலை'' இருக்கிறது! இந்த நிலையில் மனிதன் எல்லா அபிமானங்களிலிருந்தும் இயற்கையாகவே விடுபட்டு ''தன்னிலை'' யில் இருக்கிறான்! இந்நிலை மீண்டும் மறுநாள் காலை மனத்தில் நிலைத்தால் அதுவே ஞானம்! அனஹங்காரம்! இதை மறந்தால், அஹங்காரம் என்ற அபிமானங்கள் இயற்கையாகவே தோன்றும்! இத்தோற்றங்களிலிருந்து விடுதலையுமில்லை. ஒருவன் விடுதலையின் அவசியத்தை உணர்ந்து முயற்சி எடுப்பதற்குக்கூட ஒரு அபிமானமே ஆதாரமாக இருக்கிறது! ஆதலால் அபிமானத்தை அழிப்பதல்ல அனஹங்காரம் அல்லது தன்னிலை நிறுத்தல். மாறாக அவ்வபிமானங்களின் உள்ள இயற்கையான தவறை உணர்ந்து தவறைத் தவறாகப்பார்க்கும் தெளிவே அனஹங்காரமாகும்!

இதுவரை நான் என்ற அபிமானம் தவறு என்று பார்த்தோம்! இனிமேல் என்னுடைய என்ற அபிமானத்தில் என்ன குறை என்பதைப் பார்ப்போம்! நான் என்ற நிலையில் அபிமானம் எதுவும் இன்றி இருப்பது ஆத்மா! இது படைக்கப்பட்டது அல்ல! தோன்றி மறைவதுமில்லை! இடங்களின் விகாரமும் இல்லை! இது ஒருபோதும் ''என்னுடையது'' என்ற அபிமானத்திற்கு பொருளாகாது! ஆனால் ஒருவனிடத்தில் எப்போதும் இருப்பது! இதற்கு அந்நியமாக உள்ள எல்லோருமே அனாத்ம வஸ்துக்கள் எனப்படும்! படைக்கப்பட்டன! தோன்றும் மறையும்! என்னுடையது என்ற அபிமானங்களுக்கு பொருளாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நிரந்தரமாக அல்ல! இன்று என்னுடையதாக இருப்பது நாளை பிற ஒருவருடையதாக மாறிவிடலாம்! காலம் அதைச் செய்து காட்டும்! காலத்தின் வேலையே அதுதான்! என்னோடு எப்போதுமிருக்கின்ற உடலும் கூட என்னுடையதல்ல! பஞ்ச பூதங்களின் சொத்து! காலம் வந்தவுடன் என் விருப்பம் இல்லாமலே அவைகளுடன் சேர்ந்து கொள்ளும்! இதனால் உலகில் எந்தப்பொருளும் நம்முடையதல்ல; உண்மை இப்படி இருந்தும் நம் வாழ்வில், ''என்னுடையன'' என்று சொல்லும் அளவிற்கு வாழ்க்கை அமைந்திருந்தால் அது இறைவனின் கருணையே! எங்கு கருணை மறக்கப்பட்டதோ அங்கு தோன்றுவதுதான் கர்வம்! கர்வத்திலிருந்து விடுபடுவது ஒரு ஆன்ம சாதகனுக்கு மிகவும் அவசியமான குணம்தான்! இதனால் அனஹங்காரத்தின் சாரமாக இரண்டு உண்மைகளை மனதில் தரித்துக் கொள்ள வேண்டும். 1. தேஹாபிமானம் தவறானது! 2. இயற்கையில் எதுவும் நம்முடையதாக இல்லை! உண்மை இதுவாய் இருந்தும் நாம் பொருட்களோடு வாழத்தான் வேண்டும்! ஒரு தேஹத்தோடு வாழத்தான் வேண்டும்! அப்படிக் கிட்டிய வாழ்க்கையில் அவன் ''கருணை'' யை மறக்காதிருப்பதுவே அஹங்கார நாசத்திற்கு உரிய வழி!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க தோஷானு தர்சனம்

உடல் வளர்ச்சி இன்றி, உள்ளத்தின் வளர்ச்சி அமையாது என்பது சான்றோர்கள் நமக்கு தெளிவாக உணர்த்திய ஒரு உண்மை. இது பிரபஞ்சத்தின் பரிணும வளர்ச்சிகளேக் கூர்ந்து கவனித்ததால் விளேந்த தெளிவாகும்! அதே நேரத்தில் மனித சரீரம் தாங்கி ஒரு உயிர் இவ்வுலகில் தோன்றுவது மீண்டும் உடலே வளர்த்து, உடல் சுகமே பெரிதெனக் கருதி வாழ்வ தற்காக அன்று! மாருக உடலே ஒரு கருவியாகக் கருதி, அதன் செயல்களேத் துணேயாகக் கொண்டு உள்ளத்தின் வளர்ச்சிக்கு வித்திடுவது ஒரு ஆன்ம சாதகனின் அன்ருட வாழ்க்கையாம்!

ஆன்மீக வளர்ச்சியின் முதல்படி, இந்த உடலே தனித்துப் பார்க்கும் ஆற்றலில்தான் இருக்கிறது. தன்னுடைய தேகத்தை ''நானென்று'' கருதாமல் தன் கட்டளேக்கு கீழ்ப்படிந்து, தன் வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்த ஒரு காரணம் என்ற உண்மையும், உணர்வும் ஒரு சாதகன் மனத்தில் நிலேயாய் வேரூன்றி விட்டால் ஒருவன் அடைய விரும்பிய ஆன்மீக விடுதலேயை பாதிக்கு மேல் பெற்றுவிட்டதாக சமய இலக்கியங்கள் கூறுகின் றன.

ஆனல் ஒரு பாமரனுக்கு, தேஹத்தின் மீது அந்நிய பாவத்தை வளர்த்துக்கொள்வது அவ்வளவு எளிதான பயிற்சி அல்ல! காரணம் அவன் ' அன்ருட வாழ்க்கை'' என்று கருதும் ''அனுபவங்களின் தொடர்புகள்'' பெரிதும், இச்சரீர அபிமா னத்திலேயே கிட்டிவருகின்றன! சரீரத்தின் வளர்ச்சி தளர்ச்சி யும், சுக, துக்கங்களும் தன்னுடைய சுகதுக்கங்களாக பாவித்து வாழ்ந்து வருவதை அபிமான தோஷம் என்று பெரியவர்கள் புலம்புவார்கள்! தேஹ அபிமானம் இருக்கும் வரை ஆத்ம அபி மானம் கிடையாது! உள்ளம் என்பது அபிமானங்களுக்கு உறை விடம்! பல அபிமானங்களுக்குத் தந்த ஒரு பெயரே ''ஜீவன்'' என்பதாகும். நம்மிடமுள்ள ஒவ்வொரு அபிமானங்களேயும், நீக்கிவிட்டு, உள்ளம் எங்கே என்று கேட்டால் அப்படி ஒன்று இல்லே என்பதே எல்லோருடைய பதிலாக இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் வளர்ச்சியை அது உட்கொள்ளும் ஆகாரத்தின் அளவையும், தன்மையையும், செய்யும் செயல்களையும் வைத்து கணக்கிடுவது உலக வழக்கு! இரண்டு வயது குழந்தைக்கும் இருபது வயது இளைஞனுக்கும் உள்ள உடல் ரீதியான வேறுபாடு என்ன? குழந்தை உட்கொள்ளும் ஆகாரம் அளவில் சிறியது! தன்மையில் மிருதுவானது! ஆதலால் அதனிடத்தில் தோற்றுவிக்கப்பட்ட செயல்களும் வீரியத்தில், நோக்கத்தில் குறைந்தவகைளே! அதே நேரத்தில் ஒரு இளைஞன் உட்கொள்ளும் உணவு அளவில் அதிகம், தன்மையில் கடினமானதும், சக்தி நிறைந்ததும்! அவன் ஆற்றுகின்ற செயல்களும் அதற்கேற்ப அமைகின்றன! அதிக உணவை உட்கொண்டு செயலில் குழந்தைபோல் தவழ்ந்து கொண்டிருந்தால், அவனை வளர்ச்சிக்குறைவானவன் என்று கருதுகிறோம்!

இதே உண்மையை உள்ளத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்! உள்ளத்திற்கு உணவு அபிமானங்களே! அவ்வபிமானங்களின் தூண்டுதல்களுக்கு ஏற்ப உள்ளத்தின் செயல் அமைகிறது! செயலின் தன்மைகளும் மாறுகின்றன! உடல்பற்றே பிரதானமான அபிமானமாக இருந்தால், அதன் வாயிலாக விளையும் சிற்றின்பங்களும், பெருமை, சிறுமைகளுமே உள்ளத்தின் சுவைக்குரிய பொருட்களாக இருக்கும்! இது இயற்கையின் விதி! அதே நேரத்தில் உள்ளத்தின் அபிமானம் ஆன்மாவின் நிலையோடு ஒன்றியிருந்தால், அதன் தன்மையை உணர்வதற்கான செயல்களாகிய; நம்பிக்கை, அன்பு, தியானம் (சிரத்தா பக்தி, தியானம்) போன்றவற்றில் ஈடுபடும்! ஏற்றுக்கொண்ட அபிமானங்களே உள்ளத்தின் வளர்ச்சிக்கு அளவுகோல்! பொதுவாக அபிமானம் ஒரு பொருளைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும்! பொருளில்லாதவிடத்தில் அபிமானம் தோன்றுது! சமயத்தலைவர்கள் இவ்வுலகில் உள்ள பொருட்களை இரண்டு விதமாகப் பிரித்துள்ளனர்! ஒன்று ஆத்மா, மற்றொன்று அனாத்மா. இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை அறிவாலோ, அறியாமையினாலோ, பழக்க தோஷத்தாலோ ஏற்றுக்கொள்வது உள்ளத்தின் இயல்பு! அறிவின் முதல் வேலை பொய்யையும் மெய்யையும் பிரித்துக்காட்டுவது! இவ்வறிவை உள்ளம் துணையாகக் கொண்டால் அது மெய்யோடு சேர்ந்து, மெய்யறிவு கலந்த மெய்ஞான வாழ்க்கையை அனுபவிக்கும்! அந்த வேலை செய்யாமல் அறியாமையைத் துணையாகக் கொண்டால் அனாத்ம வஸ்துக்களோடு உள்ளம் ஐக்கியப்பட்டு, பொய்மையில் கலங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



கலக்கத்தை உறுதி செய்வதற்கு எந்தச் சமயமும் துணை செய்ய வேண்டாம். காரணம் கலங்குவது நம் அன்றாட வாழ்வின் ஆதார சுருதி! கீதையின் ஆராய்ச்சிப்படி, நம் அன்றாட வாழ்வின் கலக்கங்களுக்கு கருவூலமாய் இருப்பது நாம் தேஹத்தோடு வைத்துக்கொண்டுள்ள நான் என்ற அபிமானமே! இந்த அபிமானம் நம் மனதைவிட்டு இயற்கையாக நீங்கி இந்த அபிமானம் இருந்த இடத்தில் ஆத்ம அபிமானம் தோன்ற வேண்டுமென்றால், முதலில் உடலின் குறைகளை ஒரு மனம் தெளிவாக உணரவேண்டும். இந்த உணர்வும், அதனால் விளைந்த விடுதலையுமே, வைராக்கியத்தின் அம்சங்களாகின்றன! இந்த வைராக்கியத்தை உருவாக்கும்பொருட்டே, கீதை ஒரு சாதகனை இவ்வுடலின் பிறப்பையும், இறப்பையும், இவ்விரு அனுபவங்களுக்கு இடையில் நிகழும் சில மாறுதல்களையும் உற்று நோக்கச் செய்கிறது! இதற்கு தோஷானுதர்சனம் என்று பெயர்! ஜன்ம ம்ருத்யூ, ஜரா, வியாதி, துக்க தோஹானுதர்சனம்.

ஜன்மம் — பிறப்பு

ம்ருத்யு — மரணம்

ஜரா — வளர்ச்சி என்று நினைப்பில் உருவாகிக் கொண்டிருக்கும் தளர்ச்சி!

வியாதி — கணக்கிலடங்காத வியாதிகளின் இருப்பிடம்

துக்கம் — பிறப்பிலிருந்து, இறக்கும்வரை — ஒவ்வொரு நிலையிலும் நமக்குத் தவறாமல் தருவது துக்கம் ஒன்றே. இதன் காரணத்தால் தான் இவ்வுடம்பை, ஆனாலும் இவ்வுடம்பு அருவருப்பே! என்பர்!

இதன் அருவருப்புகளை கணக்கிட துவங்கினால் விரிக்கும் என அஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்!

சரீரத்தின் தன்மைகளை துக்கத்தின் உறைவிடங்களாக, சமய இலக்கியங்கள் கூறுகின்றபொழுது, சரீரம் சமய இலக்கியங்களால் நிந்திக்கப்படுவதாக நாம் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது!

இதே சரீரத்தை ஒருவன் தன் தர்மத்தை நிறைவேற்றுவதற்கு துணையாய் நிற்கும் தர்மசாதனமாக, உலகில் கிடைக்கும் எல்லா அனுபவங்களுக்கும் நுழைவாயிலாக ''போக ஆயதனம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98451

என்றும் புருஷார்த்தம் என்றும் எல்லாவிதமான மனித முயற்சிக ளுக்கும் ஆதாரமானதாக ''ஸ்தூலதேஹம்'' என்றும் சமய இலக்கியங்கள் போற்றுகின்றன. இச்சரீரத்திற்கு தர்மக்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு!

தேஹத்தின் குறைபாடுகளை சாதகனின் மனதில் பதிய வைக்கும் முயற்சி, அவனிடத்தில் முறையான யதார்த்த தர்ச னம் தோன்ற வேண்டும் என்பதற்காகவே! ஜடத்தின் ஸ்வரூ பத்தை தெளிவாக உணர்கின்ற பொழுதுதான் சேதனத்தின் ஸ்வரூபமும் சாதகனுக்கு புலப்படும்!

உடலின் குறைகளை ஒரு மருத்துவரின் தரிசனம் கூட உணர் கிறது! ஆனால் அந்த தரிசனத்தின் விளைவாக நாம் வைராக்கி யத்தை எதிர்பார்ப்பதில்லை. சமயம் உணர்த்துவது சாதாரண தர்சனம் அல்ல! அது அனுதர்சனம்! சரீரத்தில் குறைகளையும் உபயோகத் தன்மையையும், நேரே நோக்கி பார்த்து, வாழ்வின் உயர்நோக்கத்திற்கு இதை உபயோகிக்கும் விவேகமே தோஷானு தர்சனமாகும்!

உயர்ந்த நோக்கத்தை முதலில் ஐயமற உணர்வோம்! இவ் வுடலை அந்நோக்கத்திற்காக பயன்படுத்துவோம்! உயர்நலம் பெறுவோமாக!

*       *       *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றின்மை

மனைவி, மக்கள், வீடு என்பவற்றின் மீது பற்றின்மையும், விலகிநிற்றலும் மற்றுமொரு ஆன்மீக நெறியாக கருதப்படுகிறது! பற்றின்மை என்ற நெறியை பொறுப்பின்மை என்ற ஒழுக்கக் கேட்டிற்கு சமமாய்க் கருதி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது! பற்றையும் அன்பையும் பிரித்துப்பார்க்கும் ஆற்றலை உருவாக்குவதே இந்நெறியின் உண்மையான நோக்கமாகும்!

எந்த ஒரு பொருள் நம் சுகத்திற்கும் மகிழ்விற்கும் காரணம் என்று கருதுகிறோமோ அந்தப்பொருள்மீது தான் நாம் இயற்கையாக பற்றுவைக்க ஆரம்பிக்கின்றோம்! மகிழ்வூட்டும் சக்தி அப்பொருளிடமிருந்து மறைந்தாலோ, மாறினாலோ, நாம் வைத்திருந்த பற்று வெறுப்பாகவும், கோபமாகவும் மாறிவிடுகின்றது. இது அனைவருடைய வாழ்க்கையில் அன்றாடங்காணும் உண்மை! நியாயமாகப் பார்த்தால் எந்த ஒரு மனிதனும் யார் மீதும் நிலையான பற்று வைத்திருப்பதில்லை. ஆனால் தொடர்ந்து உபயோகப்படுத்திக் கொள்ளவே விரும்புகிறான்! அதே நேரத்தில் பிறருக்கு உபயோகமாக இருப்பதில், இருக்கவேண்டிய சூழ்நிலைக்கு கட்டாயமாக்கப்படுகையில் தன்னையும், தன் வாழ்க்கையையும் வெறுக்கிறான்! இந்த முரண்பாட்டிலிருந்து ஒரு மனிதனை விடுவிக்கும் முயற்சியே பற்றின்மை யாகும்! பற்று நீங்கிய விடத்தில் அன்பு நிறைவு செய்யவேண்டும்! இந்த உண்மை புலப்படா விட்டால் பற்றறுத்தல் என்ற அறிவுரை ஒரு அதிர்ச்சியூட்டும் செய்தியாகவே இருக்கும்!

இங்கு குறிப்பாக மனைவி, மக்கள் வீடு என்ற கூறியதற்கு காரணம் நம்மிடமுள்ள பற்று இந்த மூன்றோடு நின்றுவிடுகிறதென்பதால் அல்ல! ஆனால் இந்த மூன்றின் மீதுள்ள பற்றும் மூவாயிரம் கிளைகளாகப் பிரிந்து நம்மிடமுள்ள அமைதியை அபகரித்துக்கொள்ளும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சற்று ஆழமாகப் பார்த்தால் பற்று எப்பொழுதும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது! தன் சுகத்தை பிரதானமாகக் கொண்டே! முதலில் பற்றுதல்களை வளர்த்துக் கொள்கிறோம்! இப்படி சுகம் தேடும் முயற்சியில் பற்றும், பற்றால் விளைந்த பொறுப்புகளும் மனிதனின் நேரத்தையும், சக்தியையும் பெருமளவிற்கு அபகரித்துக்கொள்கின்றன! ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கை பரிணமிக்கும் விதத்தைப் பார்ப்போம்! மனிதன் ஒரு மனைவியைத் தேடிக்கொள்வது—வரப்போகும் மனைவியின் சுகத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அல்ல! ஆரம்பத்தில் முற்றிலும் தன் நலனிற்காகவே! இந்த உறவு, மகிழ்வைத் தேடிய மனம் தோற்றுவித்த ஒரு பலனாகும்! உறவு மகிழ்விற்கு காரணம் என்று கருதிய மனிதன், அதை நிலைக்கச் செய்வதில் கவனம் எடுத்துக்கொள்கிறான்! இவ்வுறவின் பயனாக மக்கள் தோன்றுகிறார்கள்! மனைவி மட்டும் போதும், மக்கள் வேண்டாம் என்று கருதுவது இயற்கைக்கு முரணான விருப்பம்! அது நிறைவேறுவதில்லை. தான் விரும்பாவிட்டாலும் ஒவ்வொரு உறவும் செயலும் ஒரு பலனை வாழ்க்கையில் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன! இங்கே வாழ்க்கையின் மிக மிக அவசியமான ஒரு உண்மைக்கு நாம் விழித்துக் கொள்ள வேண்டும்! இவ்வுலகில் காணப்படும் எந்தப் பொருளுக்கும் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லை. தன் இருப்பிற்கும் தன்னிடத்தில் தோன்றும் மாற்றங்களுக்கும் பிறபொருட்களின் இருப்பையும் அவைகளிடத்து தோன்றும் மாற்றங்களையும் சார்ந்தே இருக்கின்றன! பரஸ்பர உபயோகம் என்பது உலகின் அடிப்படைவிதி! இந்த விதி ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையிலும் பிரதிபலிக்கின்றது! என் மகிழ்விற்கு என் மனைவி காரணம் என்றால்—அவள் மகிழ்விற்கு நான் காரணமாக இருக்க வேண்டும்! அதேபோல் என் மகிழ்விற்கு என் மக்களின் செயல்கள் காரணமாக வேண்டும் என்று கருதினால், அவர்களின் மகிழ்விற்கு என் செயல்கள் காரணமாகவேண்டும்! இப்படி அவசியமாக்கப்பட்ட செயல்களையே "பொறுப்பு" என்கிறோம்" இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பொறுப்பான செயல்களாலும், பொறுப்புணர்ச்சிகளாலும் கட்டுண்டவனாகவே இருக்கிறான்! இதிலிருந்து விடுதலை பெற்றவர்கள் எவரும் இல்லை! எந்தச் சமயமும் மனிதனை பொறுப்பற்றவனாக ஆக்குவதில் திறமை காட்டுவதில்லை. அப்படிச் செய்யுமாகில் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பற்ற சமயம்! ஆனால் இந்து சமயம் இந்த பரஸ்பர உணர்வை ஒருவனது ஆன்மீக வளர்ச்சிக்கு ஏணியாக மாற்றித் தருவதில் வெற்றி கண்டுள்ளது! எதைக் கட்டாயமாக்கப்பட்ட செயல்கள் என்று சம்சாரி கலங்குகிறானோ அதே செயல்கள் ஒரு சாதகனுக்கு ஆத்மதர்சனத்திற்கான சாதனைகளாக வடிவம் பெற்றுவிடுகிறது! அது எப்படி என்பதைப் பார்ப்போம்!

பொதுவாக நம் உறவுகள் எல்லாம் மூன்று பெருங்காரணங்களை அடிப்படையாகக் கொண்டவைகளாக இருக்கின்றன! சுகம், பராமரிப்பு, பாதுகாப்பு-இந்த மூன்றைத் தேடும் முயற்சிகளே உறவுகளாகவும் பற்றுதல்களாகவும் பரிணமித்து, வாழ்வில் பொறுப்புகளை நிரப்பிவிடுகின்றன! மனைவி, மக்கள், வீடு-மேலே சுட்டிக்காட்டப்பட்ட இம் மூன்றும் முறையே சுகத்திற்கும், பராமரிப்பிற்கும், பாதுகாப்பிற்கும் உரிய பொருட்களை நினைவூட்டுகின்றன! சமயத்தின் தலையாய போதனை, மனைவி மக்களிடமிருந்து விடுதலைபெற்று, இதே உலகில் மற்றொரு அந்நியப் பொருளை தன் சுகத்திற்கும், பராமரிப்பிற்கும் பாதுகாப்பிற்கும் தேடிக்கொள்ள வேண்டும் என்பதல்ல! மாறாக இயற்கையாக சுகரூபங்கொண்டதும், யாருடைய துணையுமின்றி தனித்து நிற்கும் தன்மையுடையதான நித்யத்வமும், அதன் அழிவிற்கு வேறு ஒரு பொருள் இவ்வுலகில் இல்லாத அளவிற்கு எங்கும் வியாபித்து இருக்கக்கூடியதுமான ஆத்மாவை, தன் உணர்வுக்குரிய பொருளாகவும், அதனோடு வளர்த்துக்கொள்ள வேண்டிய ஐக்ய பாவத்தையும் மட்டுமே குறிக்கிறது. இந்த ஆத்ம தர்சனம் நிலைபெற்ற ஒரு மனத்தில் ''தேஹமே'' நான் என்ற அனாத்ம தர்சனம் தோன்றாது! அனாத்ம தர்சனத்தின், அபாவத்தில் அதனால் கிடைக்கும் சுகமும், அதற்குண்டான முயற்சிகளும், அச்சுகத்தை தேடும் தேஹமும் அதன் பராமரிப்பு பாதுகாப்பு பிரச்சினைகளும் தானே மனத்திலிருந்து நீங்கி விடுகின்றன! இதுதான் உண்மையான பற்றின்மை! இந்தப் பற்றின்மையால் பிற பொருட்களாகிய மனைவி மக்களிடமிருந்து ஒருவனுடைய சுய நலத்தை அடிப்படையாய்க் கொண்ட எதிர்பார்ப்புகள் இல்லாவிட்டாலும், ஆத்ம தர்சனம் ஒருவனை பொறுபபற்றவனாக மாற்றிவிடாது? இந்த உண்மை இன்றைய சமுதாயத்தின் அவசரத்தேவை. இல்லாவிட்டால் பற்றில்லாத புத்தரும், இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், பிற மகான்களும் பொறுப்பற்றவர்களாகிவிடுவர்! ஆனால் உண்மை அதற்கு மாறாக இருக்கிறது! அம்மஹான்களே இச் சமுதாயத்தில் மிகப்பெரிய பொறுப்பாளிகளாகவும், உண்மை யான சேவையின் உறைவிடமாகவும் நாம் அடையவேண்டிய லட்சிய நிலையின் உதாரண புருஷர்களாகவும் இருக்கின்றனர்! அதற்கு ஆதாரம் அவர்களிடம் ஊற்றெடுத்த அன்பே காரணம்! மாறாக தேர்ந்தெடுத்த சில பொருட்கள் மீது வைத்திருந்த பற்றல்ல! அன்பிற்கு ஆத்மதர்சனம் அவசியம்! பற்றிற்கு அறியாமை போதுமானது.

பற்றுவோம் பற்றற்றான் பற்றினை என்ற நெறி-அன்பின் உறைவிடத்தை உணர்வதே! அன்பை வளர்த்து பற்றை நீக்கு வோம்! உயர்ந்த பொறுப்புணர்வால் உள்ளத்தைப் பெரிதாக் குவோம்! பெரிய உள்ளம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும்! மனைவியும், மக்களும் பிறரும் அவர்களுக்கு கசப்பூட்டும் காய்களல்ல! பற்றறுத்தலும், ஏற்றுக்கொள்ளுதலும் ஒரே செயல்களே!

என்னுடையது, என்னுடையது என்ற மமகாரம் நம் உள்ளத்தின் விலாசத்தை குறைக்கும்! அவனுடையது என்ற இறையுணர்வு நம் அகவிலாசத்தை அதிகரிக்கும்! அவ்வாத்ம தர்சனத்தால் பொறுப்புகளை ஏற்கும் சக்தி உள்ளத்திற்கு தானே உருவாகும்! ஏற்க வல்லார் எல்லாரும் இறையுணர்வு கொண்டாரே! இந்த உண்மையை உணர்வோம் உயர் நலம் பெறுவோமாக!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசித்தம்

சம்பவங்களின் தொடர்ச்சியான ஓட்டமே மனித வாழ்க்கை! இச்சம்பவங்களை இரண்டு நிலைகளிலிருந்து பார்க்கலாம்! ஒன்று மனித முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டன! மற்றொன்று ஒருவனது நிகழ்ச்சிகள் எதுவுமின்றி தானே நிகழ்வன! இதனை அத்ருஷ்டபலம் என்பர்! அத்ருஷ்டம் என்றால் "கண்ணிற்குப் புலனாகாதது" என்று பொருள்! நடைபெறும் சம்பவங்கள் நம் கண்ணிற்கும் புலன்களுக்கும் பொருளாக இருந்தாலும் அச்சம்பவங்கள் நடைபெற வேண்டிய காரணத்தையோ, அவசியத்தையோ தம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை! எது அவசியமென்றும் , காரணகாரியத்தொடர்போடும் உருவாக்கப்படுகிறதோ அச்சம்பவங்களில் மட்டுமே மனித முயற்சிகள் இடம் பெறுகின்றன! மனித வாழ்க்கை இப்பிறவியில் நாம் தோற்றுவித்த செயல்களையும். அதற்குண்டான பலன்களை மட்டுமே கொண்டது அன்று! அதிருஷ்ட பலன்கள் நிறைந்ததாகவும் இருக்கிறது! மனித முயற்சியும் அதிர்ஷ்டமும், சம்பவங்களுக்கு காரணமாக இருந்தாலும், இவையிரண்டும் தோற்றுவிக்கும் வாழ்க்கையின் நிகழ்வுகள் இரண்டு விதமாக வடிவம் தாங்கி ஒரு சாதாரண மனிதனின் சுக, துக்கங்களுக் காரணமாகின்றன! அவைகளையே நம் சமயச் சான்றோர்கள் "இஷ்டம் என்றும் அனிஷ்டம் என்றும் வகுத்து வைத்தனர்! புரிந்து கொள்ளும்படியாகச் சொன்னால் விரும்பத்தக்கதும், வெறுக்கத்தக்கதுமாக இரண்டு சம்பவங்கள் ஒருவன் வாழ்வில் தொடர்ந்து நடைபெறும்!

ஒரு சம்பவத்தின் சிறப்பியல்புகளை உணர்ந்து அதைக் கொள்ளத்தக்கதென்றும் தள்ளத்தக்கதென்றும் விமர்சனம் செய்வது மனித மனம்! இந்த மனத்தின் செயல்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கணக்கெடுத்துக் கூறமுடியாவிட்டாலும், மனித மனம் ஆற்றும் எல்லாச் செயல்களுக்கும் பொதுவான பெயரே சித்தம் என்பதாகும்! மனத்தின் எந்த அம்சம் செயல்பட்டாலும், அச்செயலின் வாயிலாக அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையவிரும்பும் நிலை தெளிவு. சித்தத்தெளிவை துணையாகக் கொண்டே மனிதன் தன் அகத்திற்கு ஒரு அடையாளத்தை அமைத்துக்கொள்கிருன்! பக்தன், விபக்தன், போன்ற அகநிலை களெல்லாம் இந்த அடையாளங்களுக்குண்டான மறு பெயர் களே! இந்த அடையாளங்களை வாழ்வின் வெற்றி தோல்விகளுக் கேற்ப மாற்றிக்கொள்வது சித்த சஞ்சலம் என்றும் முடிவான ஒரு நெறியைப்பற்றிக்கொண்டு, அதையே தான் சந்திக்கும் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளும் பாத்திரமாகவும், உலக வாழ் விற்கு ஒரு துணைக்கோடாகவும் கொண்டால் அந்தச் சித்தத் திற்கு 'சமசித்தம்' என்று பெயர்! நம் நடைமுறை வாழ்க்கையில் 'கலங்காதமனம்' என்றும் சொல்வது வழக்கம்!

கலங்காத மனம் எல்லோருடைய விருப்பமாக இருந் தாலும், அதை உருவாக்கும் காரணியை நாம் எல்லோரும் விரும்புவதில்லை. இது வாழ்க்கையின் புதிர்! மாடி வீட்டில் வசிக்க விருப்பம்! ஆனால் ஏற்றிச் செல்லும் படிகளின்மீது வெறுப்பு! இந்த வெறுப்பு ஒருவனை அக்ரமித்துக்கொண்டுள்ளவரை, எந்த உயர்வும் அவனது வாழ்வில் கிடைக்கப்போவதில்லை!

இனி கலங்காத மனத்தின் காரணிகளைப் பார்ப்போம்! நம் மைக் கலங்கவைப்பது நம் வாழ்வில் தோன்றும் சம்பவங்கள்! அச்சம்பவங்கள் மனித முயற்சியாலும், அதற்கப்பாலும் தோற்று விக்கப்படுவன என்று இதுவரை உணர்ந்து கொண்டோம்! இனி இக்காரணிகளின் அம்சங்களைப் பார்ப்போம்!

மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், அதன் தன்மை யும், அவன் அதன்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காட்டு கிறது! தன்னைத்தானே அழிப்பதற்கு ஒருவன் முயற்சி எடுக்க மாட்டான் என்பது மனித வாழ்க்கையின் ஆதார உண்மை யாக இருந்து வருகிறது! இந்த தன்னம்பிக்கையின் பிறப்பிடம் ஒருமனிதன் அவன்மீது வைத்துள்ள அன்பும் விசுவாசமுமே! பொதுவாக எல்லா மனிதர்களும் தன் எதிரியை வெளியே தான் கண்டுகொள்கிருர்களே யொழிய, தனக்குள்ளே கண்டு கொள்வதில்லை. காரணம் தன் அழிவிற்கு தான் காரணமாக மாட்டோம் என்பது பிறர் சொல்லாமல் கற்றுக்கொண்ட வாழ்க்கையின் ஆரம்பப் பாடம்! தற்கொலை முயற்சிகள் கூட தோற்றத்தில் அழிப்பதுபோல் தோன்றினுலும். தன்னைக் காப் பாற்றிக்கொள்ளவே அப்படிப்பட்ட முயற்சியை மனிதன் எடுக் கிருன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சுயாத்ம விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டே, தான் விரும்பிய சூழ்நிலைகளையும், சம்பவங்களையும் நிகழச் செய்வதில் மனிதன் முயற்சி எடுத்துக்கொள்கிறான்! ஒருவனது இஷ்ட சாத்யங்களுக்கு தன்னுடைய முயற்சியே போதுமானவை என்பது வாழ்க்கையின் இரகசியமாக இருந்தால், நம்மில் எவரும் அனிஷ்டம் என்னும் 'விரும்பத்தகாத' சூழ்நிலைகளில் வாழும் படியாகவும், சம்பவங்களை ஏற்றுக்கொள்ளும்படியாகவுமான ஒரு கட்டாய வாழ்க்கைக்கு ஆளாகியிருக்கமாட்டோம்! மனித முயற்சிகள் இஷ்டத்தை உருவாக்குவதில் முனைந்திருந்தாலும், முயற்சிகள் பலனாக மாறி சுவைக்கத்தக்க சம்பவங்களாக நிகழ்கின்றபொழுது, அனிஷ்டங்களாக உருவெடுப்பது நம் அனைவரின் அன்றாட வாழ்க்கை உணர்த்தும் உண்மை அல்லவா? இதனுண்மையை உணர முயன்ற நம் முன்னோர்கள் ''ஒரு முயற்சி பலனாக மாறுவதற்கு'' மனிதன் தன் மீதுள்ள நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு இரண்டு காரணிகள் செயல்படுவதாக அறிந்திருக்கின்றனர்! அவை: 1. மனித முயற்சி என்னும் பிரயத்னம்! இதில் உரிய காலமும் உரிய இடமும் அடங்கும்! இவைகள் தனி மனிதனின் சுதந்திரத்திற்கு உட்பட்டவை! எல்லோரும் முயற்சி எடுக்கலாம்! தன் முயற்சிக்கு உரிய நேரமாக ஒரு தேர்ந்தெடுத்த நல்ல நேரத்தில் ஒரு காரியத்தை துவக்கலாம்! சாதகமான சூழ்நிலையில் தன் முயற்சிகளை ஆரம்பிக்கலாம்! இத்தோடு தனிமனிதனின் சுதந்திரம் முடிந்துவிடுகிறது. ஆனால் ஒரு செயலை பலனாக மாற்றுவதற்கு இம்மூன்றும் மட்டும் அல்லாமல் தெய்வம் என்ற இரண்டாவது பெரிய காரணியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்! இங்கே தெய்வம் என்ற சொல்லை நம் வழிபாட்டிற்கு துணையாகக் கொண்ட வரைபடத்தோடு நிறுத்திக்கொள்ளக்கூடாது! சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோபாவம், அனுக்ரஹம் என்னும் இப்பிரபஞ்சத்தின் ஐம்பெரும் நிகழ்வுகளின் உறைவிடமாகவும் ஊற்றிடமாகவும் உள்ள ஒரு பெரும்பொருளை கருத்தில்கொள்ள வேண்டும். இப்பிரபஞ்சம் முழுவதையும் இயக்கும் இவ்விதிகளின் பிடியிலிருந்து, என்னுடைய முயற்சி விடுபட்டதல்ல என்ற உண்மையும், அவ்விதிகளே முயற்சிகளை பலனாக மாற்றும் இறுதிக்காரணிகள் என்ற உண்மையும் ஒருவன் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டால், இப்பதிவே அவன் பெற்ற தெளிவாக இருந்தால், அத்தெளிவே, சம்பவங்களை ஏற்கும் சித்தம் என்னும் பாத்திரமாக மாறிவிட்டால், அந்தச் சித்தத்திற்கு சமசித்தம் என்று பெயர்! இச்சித்தம் ஒவ்வொருநாள் வாழ்விலும் நம்முடன் இருந்தால் அதுவே ''நித்ய சமச் சித்தம்'' என்ற ஒரு அவசியமான அக அலங்காரம் ஆகும்!

2990 CC

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

98451

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு சமசித்தம் ஒருவனிடத்தில் இருக்கையில், வாழ்வின் நிகழ்வுகளை ஏற்புடையனவென்றும், அல்லவென்றும் இரு வேறு தராசுகளால் நிறுத்துப்பார்த்து, அவைகளின் தாரதம்யங்களை உணராமல், தோன்றும் ஒவ்வொன்றும், நம் முயற்சிகளை மையமாகக்கொண்டு உருவாகிய இறைவனின் கருணை வடிவான பிரசாதங்களே என்று உணரத்துவங்குவான்! இந்த உணர்ச்சி மேலீட்டால் அவன் உள்ளம் இறைவனின் கருணைக்கு இருப்பிடமாக மாறும்!

இவ்வுணர்ச்சி மேலீட்டிற்கு ஒவ்வொருவரும், தன்மீது எந்த அளவிற்கு சுய விசுவாசம் என்னும் காப்புறுதியைக் கொண்டு செயல்படுகிறனோ, அதற்கும் மேலாக ஒருவனது முயற்சிகளை, பலனுக மாற்றும் ஈஸ்வர விதிகளின் மீதும் நம்பிக்கை வைக்கவேண்டும்! நம்பினர் கெடுவதில்லை என்னும் நான்மறைத் தீர்ப்பை மேற்கோள் காட்டுவதற்காக மட்டும் பயன்படுத்தாமல், அன்றாட வாழ்வை நடத்திச்செல்லும் துணைகோடாகக் கொள்வோம்-தூயவன் துணையைப் பெறுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி - யோகம் - தியானம் எல்லாம் ஒன்றே!

மாருத யோகத்தின் மூலம் இறைவன்மீது நீங்காத அன்பு கொண்டிருத்தல் ஆன்மீகத்தின் ஒரு உயர்நெறியென எல்லாச் சமய இலக்கியங்களாலும், சமயத் தலைவர்களாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது! மயிச அனந்ய யோகேன பக்தி அவ்யபிசாரிணி—என்ற கீதைத் தொடரில் இரண்டு முக்கியமான சொற்கள் பிரயோகப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். ஒன்று யோகம்—மற்றொன்று பக்தி! இதில் யோகம் என்பது காரணமாகவும் பக்தி அதன் விளைவாகவும் எடுத்துக்கொள்ளலாம். பக்தி அல்லது அன்பு போய்ச் சங்கமமாக வேண்டிய இடமாகவோ, பொருளாகவோ, 'மயி' என்னும் பதத்தால் இறைவனைக் கருத்தில் கொள்ளலாம்! இதிலிருந்து நாம் மேல் எழுந்த வாரியாக அறிந்து கொள்வது ''அனந்யம் என்னும் மாருத யோகத்தின் மூலம்—அவ்யபிசாரிணி என்னும் நீங்காத பக்தி-என்ற உண்மை! யோகம் என்ற சொல் நம் சமய நூல்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட பல அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது! அதேபோல் பக்தி—அல்லது அன்பென்னும் சொல்லிற்கு விளக்கமாக ஒன்றிற்கும் மேற்பட்ட விளக்கங்களையும் நாம் காண்கிறோம்! முதன் முதலில் யோகத்திற்கு சூத்திரம் இயற்றிய பதஞ்சலி'' யோக சித்த விருத்தி நிரோத: யோகம் என்பது சித்தத்தையடக்கும் தன்மையுடைத்து என்ற விளக்கத்துடன் தன் நூலை விரிக்கின்றார்! இதே சொல்லை கீதை அத்யாயத்திற்கு அத்யாயம் வெவ்வேறாக விளங்கிக் கொண்டு செல்கிறது! 'சமத்வம்' யோகமுச்சயதே! மனத்தின் சமநிலை யோகமென்று சொல்லப்படுகிறதென்றும், யோக கர்மசு கௌசாலம்—யோகம் என்பது செய்யும் செயலின் சிறப்பைக் காட்டல் என்றும் இன்னும் பிறவாகவும் விளக்கப்பட்டுள்ளது! இந்த விளக்கங்களைத் தாங்கி வரும் யோகத்தை கொண்ட மனிதனை யோகி என்கிறோம்! யோகத்தைப் பற்றி விளக்கிய சமய நூல்கள் யோகியைப் பற்றி விளக்க முற்படுகையில், விளக்கங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகின்றன! யோகத்திற்குண்டான விளக்கங்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் யோகிக்குண்டான விளக்கங்களுக்கும் இடையில் முரண்பாடில்லாத ஒருமைப்பாட்டை உணர்வதே ஒரு சாதகனுக்கு சரியான சவாலாக அமைந்துவிடுகிறது! யோகம் கைகூடியதால் ஒருவர் யோகியானுரா அல்லது யோகியர் தம் அனுபவங்களின் பலத்தால் ஒரு யோக விளக்கத்தை தந்தாரா? என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்!. இன்றைய சமுதாயத்தில் நிலவும் யோக மார்க்கங்களையும், யோகிகளையும் கருத்தில்கொண்டு பார்த்தால், விடை கிடைப்பதற்குப் பதிலாக வினுக்களே அதிகரிக்கின்றன.

இதேபோல் பக்தி என்ற சொல்லிற்கும் ''ஸ்வஸ்வரூபானுசந்தானம் பக்திரித்யபிகீயதே''-தன் சுய நிலையில் தன்னைத்தானே கரைத்துக்கொள்ளுதல் பக்தி என்று ஒரு சமயத்தலைவரும், ''யல்லப்த்வா புமான் சித்தோபவதி, அம்ருதோபவதி த்ருக்தோபவதி'' எது ஒருவனிடத்தில் இருந்தால் அவன் அழிவற்றவனுகவும், மனநிறைவுடையவனுகவும், சித்தி பெற்றவனுகவும் ஆகிருனே அதுவே பக்தி என்றும்,—பரமப்ரேம ஸ்வரூபா பக்தி—முழுமையான பற்றே பக்தி என்றும்—பக்திக்குண்டான விளக்கங்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன!

ஒரு கட்டத்தில் லட்சியத்தை அடைவதற்கு பக்தி மார்க்கமாகவும், காரணியாகவும் கருதப்படுகின்றது! மற்ருெரு கட்டத்தில் நீங்காத பக்தியே அடைய வேண்டிய லட்சியமாகவும், உயர்நிலையாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளன!

இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு, மாருத யோகத்தின் மூலம், மங்காத அன்பு பெறுவது—அவசியம் என்று தற்கால மனிதனுக்கு அறிவுரை கூறினுல் அவன் கலங்கி நிற்பது இயற்கைதான்!

ஆரம்பத்தில் இவ்விளக்கங்கள் அதிகம்போல் தோன்றினுலும், அவையனைத்தும் நம் போன்ற சாதகர்களுக்கு நலம்புரியும் பொருட்டே தரப்பட்டன என்ற நம்பிக்கையையும், நம் சான்ருேர்கள் மீது நாம் வைக்க வேண்டிய விசுவாசத்தையும் இவைகள் வலியுறுத்துகின்றன!

இதுவரை நாம் கண்ட விளக்கங்களை கருத்திற்கொண்டு, அதில் உயர்ந்த விளக்கம் எது என்று பார்க்கும் முயற்சியில் இறங்காமல், யோகத்தாலும், பக்தியாலும் நாம் அடைய விரும்பும் நோக்கத்தை மட்டும் முந்நிலையில் நிறுத்தி, எது நம் ஒவ்வொருவருக்கும் அவசியமானதென்று கருதுகிருேமே அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தையும் அதனுல் இறைவன் மீது அன்பையும் வளர்த்து, யோகத்திற்கும், பக்திக்கும் விளக்கங்கள் தந்த முனிவர்களும் யோகிகளும். எப்படி வளர்ந்து தங்கள் நோக்கத்தை நிறை வேற்றிக் கொண்டார்களோ, அதேபோல் நாமும் நிறைவேற் றிக்கொள்ள முயற்சிப்போம்.

யோகம் என்ற சொல்லிற்கு இணைதல்—தியானித்தல் என்ற இரண்டு மானசீகமான செயல்களும் எல்லாச் சமயத் தலைவர்க ளுக்கும் ஏற்புடையன! சற்று ஆழமாகச் சிந்தித்தால் இவையி ரண்டும் சேர்ந்த ஒரு நிலைப்பட்ட மனமே—பக்தியின் அம்சமா கவும்—இருப்பிடமாகவும் இருப்பதை எளிதில் உணரலாம்! இறைவனேடு கலந்து—அவனைவிட்டும் பிரியாமல் அவனுள் கரைந்து நிலைபெறுவது ஒரு பக்தனின் நோக்கம்! இந்த இணைப் பென்னும் ஐக்யம் மானசீகமாகத்தான் நிகழும் என்பதில் சம யங்கள் சந்தேகிப்பதில்லை. இந்த மானசீக இணைப்பிற்குரிய அடுத்த முயற்சி தியானம். இது யோகத்தின் மற்றொரு அம்சம்! தியானம் என்ற சொல் மானச வியாபரத்தையும், அந்த வியா பரத்தை கிரஹித்துக் கொள்ளும் தியான வஸ்துவையும் உள்ளடக்கியதாக இருக்கும்! பக்தனின் யோகம்—இறைவனேடு கலப்பதென்ருல், அக்கலப்பிற்கு தியானம் நுழைவாயில் என் ருல்—சந்தேகமில்லாமல் தியானத்துக்குரிய வஸ்து இறைவன் என்பதாகிவிடுகிறது!

இதிலிருந்து, யோகமென்னும் வாழ்க்கை நெறி லட்சியத்தை உணர்த்துவதாகவும், பக்தி அந்த நெறியை பாதுகாப்பதாக வும், பக்திக்குட்பட்ட பொருளாகிய இறைவனின் பரிபூரண நிலையை சந்தேகமில்லாமல் மனம் அறிவதும், அவ்வறிவால் தியானிப்பதுமான ஞானமாகவும் அமையும்!

இதனுல் அனந்யயோகம் என்பதும், அவ்யபிசாரி பக்தி என்பதும் இவையிரண்டின் பலனுக விளையும் ''பரமாத்ம தர்சனம்'' என்னும் ஞானம் என்பதும் ஒன்றேயொழிய வெவ் வேறு அன்று! என்பது தெளிவாகிறது. இறைவனின் இருப்பை யும் அவன் பெருமையையும் உணராதவனிடத்தில் பக்தி எங்ங னம் கூடும்? பக்தி இல்லாதவன் யோகநெறியில் நிலைப்பான் என்பது எப்படி நிகழும்!

இறைவனின் திருநிலையில் இரண்டறக் கலப்பது ஒரு பக்த னின் நோக்கமானுல், அடுத்து அவன் எடுத்துக்கொள்ள வேண் டிய முயற்சி இறைவனின் இருப்பிடத்தையும், அவன் சொரூ பத்தையும் அறிவதாகும்! யோகத்திற்கும், பக்திக்கும் லட்சியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களாக அமைந்த இறைவனின் விலாசத்தையும் சமய நூல்களே நமக்கு காட்டுகின்றன! அவ்விலாசத்தின் விளக்கங்களாக இறைவனின் இரண்டு நிலைகள் நமக்கு உணர்த்தப்பட்டுள்ளன! ஒன்று காரண—காரியத் தொடர்பாய் உணர்வதும்—மற்றொன்று காரண—காரியத் தொடர்பின்றி அவன் நிலையை பரமார்த்த ஸ்வரூபமாக உணர்வதுமாகும்! நாம் காண்கின்ற இவ்வுலகிற்கு அவனையே, உபாதான, நிமித்த காரணங்களாக ஏற்று, நாம் காணும் ஒவ்வொரு பொருளும் அவன் ஸ்வரூபமாகப் பாவித்தல் ஒருவித தர்சனம்! எல்லாம் அவன் விலாசம் என்ற உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டால், எல்லாம் என்ற சொல்லில் தியானத்திலிறங்கும் பக்தனும் இயற்கையாகவே உட்படுத்தப்பட்டுவிடுகிறான். இதனால் எங்கும் நிறைந்த இறைவன் இவனிடத்திலும் இயற்கையாகவே இருக்கிறான்! எண் குணத்தான் என்று வர்ணிக்கப்படும் அவ்விறைவனின் பிரசன்னம் இவனிடத்திலும் இருக்கவேண்டும். இவன் அவனுள் அடக்கம்! அதேபோல் எண்குண விசாலமான இப்பிரபஞ்சத்தை இயக்கும் அதே இறைவன் இவன் வாழ்வையும் இயக்கும் நிமித்த காரணமாகவும் அறிந்து கொள்ளப்பட வேண்டும்! இந்த உண்மைகள் புலனாகின்றபொழுது நான், எனது என்ற அஹங்கார தன்மைகள் மாறி—அவன்—அவனுடைய என்ற தத்வார்த்தங்கள் வாழ்க்கையில் சாரமாக அமைந்துவிடும்! இதையே பக்தியின் முதிர்ச்சி நிலையான நமஸ்கார புத்தி என்பது வழக்கம்! நமம, நமம என்பது நமஸ்காரம்! என்னுடையதல்ல! என்னுடையதல்ல என்ற உணர்வு அவனுடையது, அவனுடையது என்பதாக நிறைவு செய்யப்படும்! இந்நிறைவே மங்காத பக்தியும் மாறாத யோகமும் ஆகும்!

அடுத்தது இறைவனின் பரமார்த்த விலாசம்! படைப்பு என்பதை ஒரு தோற்றப் பொருளாக மட்டும் கருதி அதில் தோன்றும் ஜீவ, ஜட பேதங்கள் உண்மையில் இல்லாதன, ஆனால் இருப்பது போல் தோன்றுவன என்று முறையாய் உணர்ந்து, அவ்வுணர்வென்னும் தெளிவு மிகுதியால் அவன் ஒருவனை மட்டுமே மனக் கண்ணால் கண்டு அதில் ''தான் என்னும்'' அகம்பாவத்தை கரைத்தலாகும்!

இரண்டு நிலைகளும் அவனையே வெளிப்படுத்தும்! ஏற்றுக் கொள்கிற பக்குவம் நம் வளர்ச்சியில் தொங்கி நிற்கிறது! வளர்வோம்! வாய்மை வந்து தானே வாய்க்கும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஏகாந்த வாசம்!

மனக்குழப்பம், என்பது ஆன்மீக வளர்ச்சிக்கோ லௌகீக வளர்ச்சிக்கோ என்றுமே யாருக்குமே துணையாய் இருந்ததில்லை! ஒருவனிடத்தில் குடிகொண்டிருக்கும் மனக்குழப்பமே எல்லாச் சாதனைகளுக்கும் முதல் எதிரியாகக் கருதப்படுகிறது! எங்கு ஒரு நோக்கம் நிலையாக ஏற்றுக்கொள்ளப்பட வில்லையோ, அல்லது ஏற்றுக்கொண்ட லட்சியத்தின் மீது! இன்னும் தெளிவு பிறக்கவில்லையோ அங்குதான் குழப்பங்கள் உதயமாகின்றன! ஒருவன் போய்ச்சேரவேண்டிய இடம் தெளிவாகப் புலனாகாத வரையில் தனக்கு முன்னால் பல தடங்கல் இருந்தும், அதைப் பின்பற்றவோ ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ளவோ அவனால் முடிவதில்லை. இந்த இயலாமையைத்தான் மனக்குழப்பம் என்று கூறுகிறோம்! இதற்கு மாற்று மருந்து, ஒரு லட்சியத்தைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய வழியில் செயல்படுவதே!

மனித சமுதயம் இதுவரை தனக்குத்தானே பல லட்சியங்களைக் கற்பித்துக் கொண்டு வந்துள்ளது! இன்னும் பல புதிய லட்சியங்களை உருவாக்கி விற்பனைச் சரக்குகளாக நம்முன்வைக்கும்! இந்த இயல்பு சமுதாயத்திற்கு இயற்கையானது! பிறரால் பின்பற்றப்பட வேண்டிய லட்சியங்களைத் தெளிவுபடுத்தும் முயற்சியில் ஒருவன் இறங்கி செயல்படுகையில், லட்சிய விளக்கங்களும், அதன் மார்க்கங்களும் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் தோன்றுகின்றன! அதே மனிதன் தனக்கொரு லட்சியத்தை பிறருடைய துணையால் பெற முயற்சிக்கையில், பலகுழப்பங்கள் விளைவதை நாம் அனுபவத்தில் காண்கின்றோம்! லட்சியத்தை உருவாக்குகின்ற சுதந்திரத்தை ஒருவனது மனதிற்கு கொடுத்து விட்டால், சில விசித்திரமான லட்சியங்களையும், குறிக்கோள்களையும் உருவாக்கித்தரும் ஆற்றல் மனதிற்கு எப்பொழுதுமே ஒரு சுவையான செயல்! ஆனால் அப்படிப் பட்ட விசித்ரமான வியாக்கியானங்களின் மூலம் ஒரு தனிமனிதன் நிலையான வளர்ச்சியைப் பெறுவதில்லை.

மனம்—லட்சியத்தை அடைவதற்கு ஒருவன் உபயோகிக்க வேண்டிய கருவிதானே ஒழிய, லட்சியத்தின் தன்மைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்கும் நீதிபதியல்ல! மனத்தின் இயலாமைகளும், ஏற்றத் தாழ்வுகளும், குறைநிறைகளும், ஒருவனது லட்சியத்திற்கேற்ப மாற்றியமைக்கத்தக்கவைகளே ஒழிய அதனிடத்தில் உள்ள இயல்பான குறைகளே லட்சியத்தின் இயல்பைத் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணியாக மாறக்கூடாது! தனக்கும் தான் அடைய விரும்பும் லட்சியத்திற்கும் பாலமாக அமையும் ஒரு சார்பற்ற கருவியே 'மனம்' என்ற தெளிவு எல்லோருடைய புத்திக்கும் புலனுவதில்லை! வாழ்வின் இந்த ஆழமான உண்மை இந்து சமயத்தின் மிகச் சிறப்பான போதனைகளில் ஒன்ருகும்!

நம்மில் பெரும்பாலோரின் வாழ்க்கை அமைப்புகளும், பின்பற்றும் நெறிகளும், அடையவிரும்பும் லட்சியங்களும், இந்த மனத்தின் கரணங்களை சமாதானப்படுத்தும் தன்மைகளைக் கொண்டதாகவே இருக்கின்றன! இதற்கு அப்பாற்பட்டு சுத்தமான லட்சியம் வாழ்க்கையில் இருப்பதாக நாம் கருதுவதுமில்லை—அப்படியே நம் கருத்திற்குக் கொண்டுவந்தாலும் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிற, உணர்ந்து பார்க்கிற தன்மையும் இல்லை! மனதிற்கு அப்பாற்பட்டு, மனத்தின் வேட்கைகளுக்கு சுத்தமான மெய்ப்பொருளின் மீது மனத்தை நாடச் செய்வதும், அம்மெய்ப்பொருளின் தன்மையை உணர்வதில் மீண்டும், மீண்டும், மனத்தைக் கருவியாகப் பயன்படுத்தலுமே, விவித்த தேசசேவித்வம் —என்ற கீதைத் தொடரின் மூலம் நமக்கு அறிவுறுத்தப்பட்ட 'ஏகாந்த' வாசகமாகும்.

தனிமையை நாடுதலும், உலகைவிட்டு ஓடுதலும், இரு வேறு மனோ நிலைகள்! இன்றைய யந்திர யுகத்தில் ஆத்ம சாதனைக்காக ஒருவன் ஏகாந்தத்தை விரும்பினுலும் நாம் அமைத்துக்கொண்ட சமூகப்பழக்கவழக்கங்களும், தேவைகளும் அவனுக்குத்தரத் தயாராக இல்லை! அதேநேரத்தில் வாழ்க்கையின் பிரச்சினைகளிலிருந்து ஒரு தற்காலிக விடுதலையை விரும்பி ஏகாந்தத்தை நோக்கி விரைகின்ற வாய்ப்பிருந்தாலும் அது வரவேற்கத் தக்கதுமல்ல. அதே நேரத்தில் ஆன்மீக வளர்ச்சிக்கு அவசியக்கைமுதலான ஆரம்ப அமைதியை ஒருவன் தன் மனத்துள்ளே அமைத்துக் கொள்கின்ற வரையில், மனதிற்கு அதீதமான லட்சியப்பொருளும் அதன் தெளிவும் கிடைக்கப் போவதுமில்லை! இந்தச் சிக்கலான சூழ்நிலையை ஒரு சாதகன் சவாலாக ஏற்றுக்கொண்டு தனக்கு இயற்கையாகக் கிட்டிய ஒவ்வொரு வாழ்க்கைச் சூழ்நிலைகளையும், தான் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஆரம்ப அமைதிக்கு பயன்படுத்துவது அவசியமான சாதனையாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நம்மில் பெரும்பாலோர் 'அமைதி' என்பதை மனத்தின் ஒரு அம்சமாகவும், அந்த அம்சம் வெளிப்படுவதற்கு ஒரு சிறு குறிப்பிட்ட செயல்கள் காரணிகள் என்றும் நம்பிச் செயல்பட்டு வருகிறோம்! நோக்கமற்ற வாழ்க்கையில் ஈடுபட்டு, இருக்கிற அமைதியையும் இழந்து, தனக்குத்தானே கேடுவிளைவிக்கும் மனிதனைப்பார்க்கையில், இப்படி ஒரு சாதகன் மேற்பட்டவன் என்பது உண்மையானாலும்கூட, ஆன்மீகம் நமக்கு குறிக்கோளாக உணர்த்திய அமைதி மனத்தின் சாயல் அல்ல! மாறாக அது மனத்தால் உணரப்பட வேண்டிய மனத்திற்கு அதீதமான அமைதியாகும்! இதற்கு "பெரிய மௌனம்" என்றே நம் சமயச் சான்றோர்கள் பெயரிட்டிருக்கின்றனர்! இந்தப் பெரிய மௌனத்தில் தன்னைக் கரைத்துக் கொள்வதை லட்சியமாக ஏற்றுக்கொள்வதே சாதகனுக்கு அவசியமான கைமுதல் அவன் வளர்த்துக்கொள்ளும் ஆரம்ப அமைதியாகிய மனப் பண்பு ஆகிய இதுவே "ஏகாந்த வாசம்"! தத்துவ தரிசனத்திற்கு இது ஒரு நுழைவாயில்! ஆனால் இதுவே ஒரு முடிவல்ல! ஒரு விஞ்ஞானி தன் ஆராய்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையாகிய சோதனைச் சாலைக்குள் நுழைந்து, தன்னைச் சுற்றியுள்ள உலகின் ஆரவாரங்கள் எதுவும் தன்னைத் தாக்காமல், தன் ஆராய்ச்சியில் கருத்தூன்றி இருப்பது அவனுக்கு ஏகாந்த வாசம்! இந்த ஏகாந்த வாசம் அவனை சமூகத்தில் வாழத்தகுதியற்றவனாகவோ, சமுதாயத்தைக் கண்டு அஞ்சியே—அவன் சோதனைச் சாலைக்குள் நுழைந்து கொண்டவனாகவோ மாற்றிவிடாது! அதே நேரத்தில் சோதனைச் சாலைக்குள் இருந்தும், ஏகாந்த வாசம் இருந்தும், தன் ஆராய்ச்சியைத் தொடராவிட்டால், அவன் தெளிந்த ஒரு விஞ்ஞானியாக வெளிவருவான் என்பதும் நடைபெறாது! அதேபோல் தனிமையை நாடிச்சென்று, ஏகாந்த வாசம்புரியும் சாதகனும் கூட, தன் வளர்த்துக்கொண்ட, சிறிய மௌனத்தை துணையாகக் கொண்டு, பெரிய மௌனத்தின் தன்மையை உணராவிட்டால், ஏகாந்தம் பலனற்றதாகிவிடும்! எப்படி சோதனைச் சாலைக்குள் இருப்பது மட்டும் விஞ்ஞானியின் நோக்கமல்லவோ, அதேபோல் விவிக்த சேத சேவித்வம் என்னும் தனிமையை நாடுதல் மட்டுமே ஆன்மீக வளர்ச்சியின் வரைவிலக்கணம் அன்று!

ஆனால், நாம் வாழ்கின்ற இன்றைய பௌதீக மற்றும் சமூகச் சூழல்கள் ஆரம்ப அமைதிக்கே இடமளிப்பதில்லை! ஆரவாரங்களும் பேரிரைச்சல்களுமே சமுதாயத்தின் ஆத்ம கீதங்களாக இருக்கின்றன! இன்று நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய மிக அவசியமான தனி மனித, சமூகப்பழக்கங்கள் - அமைதியின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையை வளர்க்கும் பழக்கங்களாய்த் தோன்றுதல் வேண்டும்! ஆத்மானந்தம் என்னும் பெரிய மௌனம், ஆகாசத்தின் குண மான சப்தத்திற்கு எதிரியாக இல்லாவிட்டாலும், ஆத்மா வின் பூரண குணத்தை உணர்வதில், புத்திக்கும், மனத்திற்கும் பௌதீக ரீதியான புற அமைதி அவசியம்! இவைகளே அக அமைதிக்கு நுழைவாயில்கள்! முன்னைக்காலங்களில் இதுவே ஆலயங்களின் பெரியதொரு சமூக சேவையாக இருந்தன! இந்த மௌனத்தின் நுழைவாயில் சந்தைக்கூடங்களாகப் பரா மரிக்கப்படுவதையும் நாம் காண்கிறோம்! சமயங்காட்டிய அதி உன்னத லட்சியம் புலப்படாமையே! இந்நிலைக்குக் காரணமாகும்!

புறசூழ்நிலையைத் துணையாகக் கொண்டு, வளர்த்துக் கொண்ட பழக்க ரீதியான மனப்பண்பே முடிவான லட்சியத் தின் தோற்றமாகக் கருதுவது சாதகனின் மற்றுமொரு இயற்கை யான அவசர முடிவாகும்! இந்த படைப்பில் ''அமைதி'' ஒன் றிற்குத்தான் அளவிட்டுச் சிறைப்படுத்த முடியாது! அமைதிக்கு வரைவிலக்கணம் அமைதிதான்! மௌனத்திற்கு விளக்கம் மௌனம்தான்! இது புறத்தே ஆரம்பித்து - அகத்தே மிக ஆழ மாகவும், அகலமாகவும் ஒரே நேரத்தில் உதயமாக வேண் டிய ஒரு பொருள்! மௌனத்தைத் தொடுவதே மனத்தின் வளர்ச்சிக்கு அளவுகோல் என்று ஏற்றுக்கொண்டால் எப்படி மௌனத்திற்கு எல்லையில்லையோ, அதேபோல் மனத்தினுடைய வளர்ச்சிக்கும் எல்லையில்லை. வளர்ச்சிக்கு வரைவிலக்கணம் காட்டி, மௌனத்தைச் சிறைப்படுத்துவது அறியாமையின் அளவுகோல் என்று நம் சான்றோர்கள் சாடியிருக்கின்றனர்!

இன்றே இந்த அக உலக ஏகாந்தத்தை நாடுவோம்! அதற் குரிய புறச்சூழலை நிர்ணயிப்பதில் நம் ஒழுக்கத்தையும், முயற்சி களையும் திசைதிருப்புவோம்! நீங்கள் அமைதியை நாட அமைதி உங்களை நாடும் என்பதில் ஐயமென்ன?

பேசும் பொருள் யாவும் அந்தப் பெரிய மௌனத்தின் கீதங்களாய் அமையட்டும்! உண்மையறிவோம்-உயர்நலம் பெறு வோம்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேவையில் தெளிவு"

விவித்த தேச சேவித்வம் என்ற கீதைத் தொடரில் வலி யுறுத்தப்பட்ட ஆத்மார்த்தமான ஏகாந்த வாசத்திற்கு மிகவும் உறுதுணையாய் இருக்கும் ஒரு நல்ல பழக்கமே "அரதீர ஜன சம் சதி" என்ற தொடரில் விளக்கப்படவிருக்கும் ஒருவித "புறங் கூருமை" ஆகும்!

மனித வாழ்க்கையின் சிறப்பே தன்னிடமுள்ள சிறப்பை பிறமனிதர்களோடு பகிர்ந்துகொள்வதுதான். உடையவர் இல் லாதவருக்கு கொடுத்தலும், அறிந்தவர் அறியாதவருக்கு உணர்த்தலும் மனித வாழ்க்கையில் போற்றப்பட வேண்டிய அம்சங்களாகும்! தங்கம் எவ்வளவு உயர்ந்த உலோகமாக இருந்தாலும், தானே தன் சிறப்பை வெளிக்காட்டக்கூடிய ஆற்றல் அதனிடம் இல்லை! மாற்ருர்தான் கண்டுகொள்ள வேண்டும்! தங்கம்போல் பிற ஜட சமூகங்களுக்கும் அந்த உயர் நிலை இல்லை! ஆனுல் மனிதன் வாழ்க்கையில் கண்டுகொண்ட ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் நிலைகளையும் பிறருக்கு உணர்த்துவதில் எப்பொழுதுமே மகிழ்வைக் கண்டுகொண்டு வந்திருக்கிருன்! இப்படி உணர்த்த முற்படுவதற்கு முன்னுல் தன்னிடம் உள்ள நல்லனவற்றை உணரக்கூடிய ஆற்றல் அவ னுக்கு உண்டாக வேண்டும்! நல்லதை உணர்வது ஒருவன் தன் வாழ்வில் காணும் வளர்ச்சிக்கு அளவுகோல் என்பது ஆன்மீக மும் லௌகீகமும் இணைந்து ஏற்றுக்கொண்ட ஒரு உண்மை! பிறர் கண்ட வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் செவிமடுத்தால் ஒழிய தனக்குள்ளே நல்லனவற்றைக் காணவோ, வளர்க்கவோ, பிற ரோடு பகிர்ந்து கொள்ளவோ ஒருவனது உள்ளத்தில் உற்சாகம் தோன்ருது! அதேபோல் பிறரிடம் காணும் குறைகளைப்பற்றி விளக்கம் தருவதில் மட்டும் ஒருவன் தன் காலத்தையும், சக்தி யையும் செலவழிப்பானேயானுல், அவனிடத்தில் எந்தவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98451

முன்னேற்றத்திற்கான தூண்டுதல்களும் இயற்கையாகக் குடி கொள்ளாது! விளக்கின் அருகில் சென்று அதன் மத்தியிலே உள்ள கருமையைக் கண்டு விளக்கோடு சினங்கொள்வது விளக்கை நாம் புரிந்துகொண்டோம் என்பதற்கோ, அதைப்பயன்படுத்து கிறோம் என்பதற்கோ ஆன அறிகுறிகள் அல்ல! மாறாக நம் தர்சனம் தவறானது என்பதுதான் உண்மை! நாம் இன்னும் பொருளைப் பார்க்கப் பழகவில்லை என்பதுதான் உண்மை!

பொதுவாக நம்முன் இருவர் சேர்ந்துகொண்டால், புறம் பேசுதல் நமக்கு ஒரு சுகமான பொழுதுபோக்காகத் தோன்று கிறது! தேடிக்கொள்ளாமலே நம்மை வந்து அடைகிறது! புறம் பேசுதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய இரு உண்மை-நம் அகத்தில் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டிய -பதிக்கப்பட வேண்டிய உண்மை: புறம் பேசுவதால் நம் குறைகளை நாமே காணும் வாய்ப்புக்கள் நம்மைவிட்டு நழுவுகின்றன என்பதுதான்! காரணம் எந்த ஒரு மனிதனும் தன்னைப்பற்றி பிறரிடம் புறம் பேசுவதில்லை! அப்படி அவன் செய்தால் அது அகநிலைபற்றிய ஆராய்ச்சி! வளர்ச்சிக்காக ஒருவன் அமைத்துக்கொண்ட வாய்ப்பு! புறங்கூறுதல் இதற்கு நேர் மாறானது! இது நம்மிடம் உள்ள குறைகளைப் போர்வைபோல் போர்த்தி நம் கவனத்திற்கு கொண்டு வராமல் தடுக்கும்! இது விழித்துக்கொண்டே உறங்கு வதற்குச் சமமான மனநிலை! இந்நிலையில் அறிவுக்கு வழியான ஆராய்ச்சி தோன்றுவதில்லை! மாறாக அறியாமை நிலைபெறு கிறது! சுருங்கச் சொல்லின் குறியை நோக்கி எறியாத அம்பும் உண்மையைப் புலனுக்காத சொற்களும் ஒன்றுதான்! இதனால் தான் வாக்தபஸ் தவங்களில் எல்லாம் உயர்ந்த தவமாகக் கருதப்படுகிறது! எல்லோரும் ஒன்றைப்பற்றி பேசுகிறார்கள் என்பதற்காக நானும் அதைக்குறித்து, அதன் அவசியத்தை உணராமலே பேசுவது ஒருவித புறங்கூறுதலாகும்! ஜனக்கூட்டத் திலிருந்து விடுதலை பெறுவது ஒரு ஆன்ம சாதகனுக்கு அவசிய மான குணமாக 'அரதி ஜன சம்ஸத்' என்ற நெறியில் உணர்த் தப்படுகிறது! ஜனசமூகத்திலிருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொள்வது. பிறரிடம் உறவு வைக்காமலோ, பிறரை நெருங்க வொட்டாமலோ தனித்து வாழும் நிலையாக நம் அவசரப் புத் தியால் அறிந்து கொள்ளக்கூடாது! இன்றைய சமூக அமைப் பில் அது சாத்தியமும் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை என்பதன் வாயிலாக நமக்கு உணர்த்தப்பட்ட உண்மை என்னவெனில்: பின்பற்றி வாழ்வது எல்லா ஜீவராசிகளுக்கும் ஒரு பொதுவான நிலே! கவர்ச்சியானவர்கள் எதைச் செய்கிருர்களோ, அதையே பிறரும் செய்கின்றனர் என்பது இதை நமக்கு உணர்த்துகின்ற உண்மை! ஆராய்ந்து பார்த்தால் நம்மிடம் உள்ள எல்லாப் பழக்கங்களுமே பிறரிடம் இருந்து கற்றுக்கொண்டவைகள்தான்! நாம் அணியும் ஆடை, உட்கொள்ளும் உணவு, பேசும்மொழி, ஏன் நம் சிகையலங்காரங்கள்கூட நமக்குப்பிறர் உணர்த்தியவைகள்தான்! பிறரைப்பார்த்துப் பழகுவதும், தாளுக ஒரு பழக்கத்தின் அவசியத்தை உணர்ந்து, அதை நம்முடைய வளர்ச்சியின் பிரதிபலிப்பாகக் காட்டுவதும் இருவேறு நிலேகள்! நாம் பழகிக்கொண்ட பழக்கங்களின் தூண்டுதல்களுக்குச் செவிமடுத்து அவைகளேத் திருப்திப்படுத்துவதே நம் வாழ்க்கையின் இயற்கையான தேவையாகத் தோன்றுகிறது! இப்படி நாம் பூர்த்தி செய்துகொண்ட தேவைகள் எதுவுமே முற்ருகப் பூர்த்தியாக்கப்படவில்லே. பழகிக்கொண்ட எந்தப்பழக்கங்களும் நிலேயானதுமல்ல! இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்ன? எந்தத் தேவைகள் பிறரைப்பார்த்து தனதாக்கிக் கொள்ளப்பட்டனவோ, எந்தப்பழக்கங்கள் பிறருக்காகப்பழக்கப்பட்டனவோ— அவை ஒருபோதும் மனதிற்கு சுதந்திரத்தையும் கவர்ச்சியையும் தருவதில்லே! பழக்கத்தோடு நிறுத்திக்கொள்வது மிருகம்! பழக்கத்தின் அவசியத்தை உணர்வது மனிதப்பிராணி!

தூக்கி எறியப்பட்ட பந்தை மீண்டும் நம்மிடத்தில் கொண்டு வந்து கொடுக்கும்படியாக ஒரு நாயினிடத்தில் பழக்கத்தை உருவாக்குகிருேம்! ''ஏன் தன் முதலாளி அடிக்கடி இப்படி பந்தை தூக்கி எறிகிருர்? பந்தும் மனிதனேக் கடிக்குமோ! — என்ற ஆராய்ச்சியை நாயினிடத்தில் நாம் பார்ப்பதில்லே! மீண்டும், மீண்டும் அவரைக் கடிக்கட்டும் என்ற ஆர்வத்தாலும் அந்த நாய் எறியப்பட்ட பந்தை திரும்பி எடுத்துத் தருவதில்லே! இந்தப் பழக்கத்தால் நாய் எந்த நோக்கத்தையும் தன்னிடத்தில் நிறைவேற்றிக் கொண்டதில்லே! இதேபோல் தான் ஒரு தனிமனிதனும் தன் தேவையை அறியாது பழக்கங்களே வளர்த்துக் கொள்வதுமாகும்! சமூகத்தின் பெரும்பாலான செயல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கங்களை உருவாக்குவதாகவே இருக்கின்றனவே ஒழிய, பழக்கங்களின் அவசியத்தை உணர்த்துவதாக இல்லை! ஒரு தயாரிப்பாளரின் விளம்பரப் பலகையில் பலவிதமான அவசியங்கள் உணர்த்தப்பட்டிருக்கலாம்—ஆனால் அவை அனைத்தும் நம்முடைய அவசியங்கள்தானா என்பது ஆராய்வதுதான்—சமூக ஊடுருவல்களிலிருந்து ஒருவன் தன்னை விடுவித்துக்கொள்ளும் கலையாகும்! ஓடுகின்ற வெள்ளத்தோடு தானும் சேர்ந்து ஓடுவதற்கு ஒரு புத்துணர்ச்சியோ புதிய சக்தியோ தேவையில்லை தான்! ஆனால் அடைந்த இடம், நதி முடிந்த இடம் தானே ஒழிய நாம் அடையவேண்டிய இடமில்லை!

ஒருவன் தன் லட்சியம் எது என்று உணர்வதற்கு முதற் காரணியாக, கேள்விகேட்காமலே தேவையை வளர்க்கும் பழக்கத்தை விடவேண்டும்! பழக்கங்களின் உற்பத்தி ஸ்தானம் ஒருவன் வாழும் சமுதாயமாக இருப்பதால்—அந்தச் சமுதாயத்தின் மாறுதல்களுக்கு தொடர்ந்து விழித்துக்கொண்டிருப்பது வளர விரும்புபவன் வலிந்து மேற்கொள்ள வேண்டிய அகவுருக்கம்! வளர்வோம்! வாய்மை கூடும்!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்யாத்ம ஞானம்-தத்வார்த்த தர்சனம்!

அமானித்வம் முதலாக அரதி ஜன சம்சதி ஈருக ஒரு ஆன்ம சாதகன் வலிந்து வளர்த்துக்கொள்ள வேண்டிய பல உயர்நெறிகளைப் பற்றியும், அவற்றின் அவசியங்களைப் பற்றியும் பார்த்தோம்! இவைகளையே ஒழுக்கங்கள் தவங்கள், வளமான வாழ்விற்குரிய கோட்பாடுகள், அனுஷ்டானங்கள் என்று சமய நூல்கள் வெவ்வேறு நிலைகளில் விரித்துரைக்கின்றன! ஒரு தனி மனிதனின் ஆன்மீக வளர்ச்சியில் இரண்டு விதமான நிலைகள் மாறி மாறி சமய நூல்களால் விளக்கப்பட்டுள்ளன! ஒன்று தான் ஏற்றுக்கொண்ட லட்சியத்திற்கு ஏணிப்படிகளாகக் கருதி, முயற்சியின் விளைவாக ஒருவனிடத்தில் தோன்றும் அல்லது தோற்றுவிக்கப்படும் பண்புகள்! மற்ெறான்று வளர்ந்தபின் அவ் வளர்ச்சியின் பிரதிபலிப்பாக அவனிடத்தில் காணப்படும் இயற்கைக் குறிகள்! இதையே சுதர்மம் என்கிறோம்! நீருக்கு குளுமையும் நெருப்புக்கு உஷ்ணமும் அவைகளின் முயற்சியால் விளைந்தவை அல்ல! அவைகளிடத்தில் இயற்கையாகக் குடிகொண்ட சுதர்மங்கள்! ஆன்மீகத்தின் முடிவான லட்சியம் ஒரு மனிதனை இயற்கையில் நல்லவனுகக் கண்டு கொள்ள வேண்டும் என்பதுதான்! ஒரு பூனைக்கு பாலூட்டி எவ்வளவு காலம் வளர்த்து வந்தாலும், பூனை ஒரு எலியைக் கண்டவுடன் பாலை மறந்து, எலியை நோக்கி ஓடுகிறது! இதனுல் பூனை இன்னும் தன் சுதர்மத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்று தெரிகிறது! ஒரு கிளிக்கு பல நல்ல சொற்களை சொல்லிவைத்திருக்கிறோம்! சொல்! என்றவுடன் தான் கற்றதை தடையில்லாமல் வளர்த்தவரின் மகிழ்ச்சிக்காக, மீண்டும் சொல்கிறது! அதே கிளி ஒரு பாம்பைக் கண்டவுடன் தான் கற்ற சொற்களை எல்லாம் மறந்து ''கீ'', ''கீ'', என்று தன் சுபாவத்தைக் காட்டிவிடுகிறது! இதேபோல்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதமனமும்! தான் கற்றுக்கொண்ட உண்மைகளுக்கு உறை விடமாக, உற்பத்திஸ்தானமாக தன் சுயநிலையே என்று கருதாத வரையில், ஞானவிலாசம் பெறாத வரையில், சேர்த்துக் கொண்ட ஒவ்வொரு ஒழுக்கங்களும் நெறிகளும், உரிய காலத்தில் நம்மைக் காப்பாற்றுவதில்லை! சிந்தனைக்கும் செய லுக்கும் உள்ள இடைவெளி அதிகரித்துக்கொண்டே போகிறது! ஒழுக்கத்தை வளர்த்துக்கொண்டோமே ஒழிய, ஒழுக்கத்தோடு சேர்ந்து நாம் வளரவில்லை! ஒரு வினாடியில் தோன்றி மறையும் சுகத்திற்காக பலநாள் வலிந்து ஏற்றுக்கொண்ட நெறிகளை, பூனைபோல், கிளிபோல் மறந்துவிடுவது நம்முள் நாம் கண்டு கொள்ளும் அன்றாடப்புதிர்!

ஒழுக்கங்களும், நெறிகளும், கோட்பாடுகளும், உண்மையை உணரவைக்கும் ஆரம்பத் தேவைகள் தானே ஒழிய அவைகள் வாழ்க்கையின் முடிவான லட்சியங்களல்ல! மாறாக லட்சியத்தின் பாதுகாவலர்களாகவே நெறிகள் பயன்படவேண்டும்! ஒருவ னுடைய சுய நிலையை மறைக்கும் எந்த நெறிகளும், கோட் பாடுகளும் சுகம் தந்தாலும் ஏற்புடையன அல்ல என்பது நமக்கு சமயம் தந்த பெரும் கண்ணோட்டம்! அதே நேரத்தில் தன்னிலையில் உறுதியடைந்தவன் நெறிதவறியவனாகவோ, அவ னிடத்தில் ஒரு நெறியும் காணப்படாததாகவோ கருதக்கூ டாது! ஓடுகின்ற நதிக்கு கரை அமைத்துத் தந்தவர் யார்? கடலை நோக்கி ஓடி அதில் சங்கமிப்பதே நதியின் நோக்கமானால், அந்த ஓட்டமே நதிக்கு ஒரு கரையை அமைத்துத் தருவது! தன் ஓட்டமே தனக்குப் பாதுகாப்பாய் செயல்படுவது நாம் காணும் உண்மைதானே! அதேபோல் தான் ஆன்மீக உண்மையான நிலையை அறிந்து அந்நிலையில் ஸ்திரப்படுவதற்காக மனித மனம் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியுமே, ஒழுக்கந்தான்— உயர்ந்த கோட்பாடுதான்!

ஆத்ம ஞானத்தில் உண்மையில் நிலைத்தவன் ஒருபோதும் பிறருடைய துன்பத்திற்கும், மனக்கலக்கத்திற்கும் காரணமாவ தில்லை! பிறரைத் துன்புறுத்தாமல் ஒருவன் வாழக் கற்றுக் கொண்டால், அவன்தான் எல்லா நெறிகளுக்கும், கோட்பாடு களுக்கும், உறைவிடமாக, கோட்பாடுகளின் தன்மையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதித்து உணர்த்தும் உறைகல்லாக மாறிவிடுகிருன்! அப்படி மாறியவர்களேயே ஞானிகள் என்று இந்துசமயம் அடையாளம் காட்டுகிறது! நாம் பின்பற்ற நினைக்கும் ஒவ்வொரு ஆன்மீக நெறிக்கும் அவர்களுடைய வாழ்க்கைதானே மூலமாக இருந்தி ருக்கிக்கிறது! மேலெழுந்தவாரியாக, ஒரு பொருளாதாரக் கண் ணேட்டத்தில் காணும்பொழுது இவர்களால் நமக்கு என்ன உதவி என்று நாம் கலங்கினுலும் நம்மைப் பார்த்து அவர்கள் கலங்குவதில்லே! ஒரு பிச்சைக்காரன் மற்ருெரு பிச்சைக்காரனேப் பார்த்து இரக்கப்படுவதை நாம் பொதுவாகக் காண்பதில்லே. அப்படியே ஒருவன் இரக்கப்பட்டாலும் அது யதார்த்தமான இரக்கமல்ல! உள்ளவனிடத்தில் இரக்கத்தை எதிர்பார்ப்பது உலக வழக்கு! இல்லாதவன் இரக்கப்பட்டாலும், அந்த இரக் கத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லே.

ஆனுல் நாம் தேடுகின்ற இரக்கம் உலகப்பொருளிலிருந்து உள்ளத்தை நிறைவிக்கும் மெய்ப்பொருளேச் சார்ந்ததாக மாற வேண்டும்! உள்ளம் மாறினுல், உலகமும் மாறியதாகத் தோன் றும்; புற உலகம் யார் மீதும் இரக்கப்படுவதில்லே! நாம் எல் லோரும் நல்லவர்களாக மாறினுலும் இந்த புற உலகம் ஒரே சூரியனேயும் சந்திரனேயும் கொண்டதாகத்தான் இருக்கும்! நாம் இன்றிருப்பது போல், பொய்மையிலும், புறக்கோட்பாடு களிலும் தோய்ந்து நின்ருலும், சந்திரனும், சூரியனும் ஒரே நிலேயில் தான் இருக்கும்! மாறவேண்டியது உள்ளம்! மாற்றத்தைக் காணவேண்டியது உள்ளத்தில்! உட்கொள்ளும் உணவோ, சுவா சித்த காற்ருேடு ஒருவரது உள்ளத்தின் தன்மையை மாற்றப் போவதில்லே! மாருக அவரவர் தம்மைப் பற்றி வைத்துள்ள ''அகநிலே அடையாளங்களே'', தான் தேடும் லட்சியங்களும் அதற்குரிய வழிமுறைகளுக்கும் மூலஸ்தானமாக இருக்கிறது! இவ்விரண்டும் சேர்ந்தே இந்த மனித உள்ளம் என்ற மறுபெயர் பெறுகிறது! இந்த அடையாளம் மாற்றப்படவேண்டும்! இந்த மாற்றம் இரண்டு நிலேகளில் நடைபெறலாம்! ஒன்று தத்வானு தர்சனம் என்னும் அகநிலே ஆராய்ச்சி. மற்ருென்று அத்யாத்ம ஞான நித்யத்வம் என்னும் சான்ருேர்கள் காட்டிய ''ஆத்மா என்னும் மெய்பொருளில் அடையாளம் காண்பது! ஒன்று புத் திக்குச் சவால்! மற்ருென்று மனித மனத்திற்கு கிடைத்த உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



மொழி! முன்னது ஆராய்ச்சியைத்தூண்டும்! பின்னது நம்பிக்கையை வளர்க்கும்! ஆராய்ச்சியும் நம்பிக்கையும், ஒன்ருேடொன்று சேர்ந்து செயல்படுகையில் ''அடையாளங்கள்'' தானே மாறும்!

அக அடையாளத்தை மாற்ருமல் புற ஒழுக்கத்தை வளர்ப்பது உயர்வுக்கு வழி காட்டாது. அப்படி வளர்த்தாலும் அது, பூனேயின் வளர்ச்சியாக, கிளியின் வளர்ச்சியாக இருந்து! நிலே பெருமல் மறைந்துவிடும்!

பள்ளிக்குச் செல்லும் ஒரு மாணவனும், திருட்டையே தன் வாழ்க்கை முறையாகக் கொண்ட ஒரு திருடனும். தினந்தோறும் ஒரே புகைவண்டியில் பிரயாணம் செய்கின்றனர்! இருவரிடத்திலும் குறித்த காலத்தில் செயலாற்றுதல் என்ற ஒழுக்கம் நிறைந்திருக்கிறது! பள்ளிமாணவனும் அதிகாலேயில் எழுந்து, அவசர அவசரமாகத் தன் தேவைகளே முடித்து, புகைவண்டி நிலேயத்தை நோக்கி ஓடி, வண்டியைப் பற்றிக் கொள்கிருன்! திருடனும் அதேபோல் ஒருநிமிடத்தை வீணுக்காமல் குறித்த காலத்தில் காரியத்தில் ஈடுபடுவதும், அதிகாலேயில் எழுவதும் தன் ஒழுக்கமாகக் கொண்டுள்ளான். அதிகாலேயில் எழுவதே ஒழுக்கத்தின் அளவுகோலாய் இருந்தால் இவ்விருவரும் ஒழுக்கசீலர்களே! திருடனே நாம் ஒழுக்கசீலர் என்று ஏற்றுக்கொள்வோமா? செயல் ஒன்ருக இருந்தாலும், செயலின் தன்மை வேறுபடுத்திக் காட்டுவது இருவர் உள்ளத்திலும் நாம் காணும் ''மாணவன்—திருடன் என்னும் அடையாளங்கள்தானே! அதே போல் விவேகமில்லாத அடையாளமும்! வைராக்கியமில்லாத நெறியும் நம்மை அக உலகில் திருடர்களாகவே வைத்திருக்கும்!

அக உலகில் மாற—நம் அடையாளத்தை மாற்றுவோம்! ஆண்டவன் அருளேப் பெறுவோம்!

29900 C

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION
SRI LANKA

Printed at Express Newspapers (Ceylon) Ltd.
185, Grandpass Road, Colombo-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org